தாதியர் பணிப் புறக்கணிப்புக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை பக். 02

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 226 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 25, சனிக்கிழமை 09.07.2016

# காணாமற்போனோரின் உறவுப் பெண்களிடம் பாலியல் லஞ்சம் தருமாறு கேட்கப்பட்டது

## அரச படைத்துறை மற்றும் அரசியல்வாதிகள் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 9
காணாமற்போனோரின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரும் கொடூரங்கள் இடம்பெறுவதாக முன்னணி மனித உரிமை அமைப்பொன்று குற்றம்சாட்டியுள்ளது.
படைப் புலனாய்வாளர்கள், பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினர், துணை இராணுவக் குழுக்கள் மாத்திரமன்றி அரசியல்வாதிகளும் பெண்களுக்கு எதிரான இந்தக் கொடூரமான மனித உரிமை மீறலில் ஈடுபட்டுள்ளதாகப் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு (வான்- WAN) தெரிவித்தது.
அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலணியின் முன்பாக இந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.
காணாமற்போனோருக்கான அலுவலகம் அமைப்பது தொடர்பில் மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடம் இந்தச் செயலணி யோசனைகளைக் கேட்டறிந்து வருகின்றது.
கடந்த 5ஆம் திகதி நடந்த அமர்வில் பங்கேற்று தமது ஆலோசனைகளை வழங்கியது பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு. பக்.24

## கொத்துக்குண்டு வீசவில்லையாம்

கொழும்பு, ஜூலை 9
இறுதிப்போரின்போது இராணுவம் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தவில்லை என்று போரை வழிநடத்திய முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா நேற்றுத் தெரிவித்தார்.
இறுதிப் போரில் இலங்கை இராணுவம் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தியது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஒளிப்பட ஆதாரத்துடன் பிரிட்டன் பத்திரிகைசெய்திவெளியிட்டது.
பொன்சேகா அதை மறுத்தார்.
இது தொடர்பில் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் பக்.23

## திருமலையில் இளம் பெண் கொடூரக் கொலை

கொழும்பு, ஜூலை 9
திருகோணமலை, மனையாவெளி சாரணர் ஒழுங்கையில் இளம் பெண் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுப் பிற்பகல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அஜந்தினி (வயது - 23) என்ற யுவதியே கொல்லப்பட்டார்.
இளம் பக்.25

# பதவியிலிருக்கும் வரை வெளி நீதிபதிகளுக்கு இடமளிக்கவே மாட்டேன்

### ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்
### ஐ.நா. தீர்மானத்திலிருந்து இலங்கை விலகல்



கொழும்பு, ஜூலை 9
இலங்கையின் உள்நாட்டு நிர்வாகத்திலோ அல்லது நீதித்துறையின் செயற்பாடுகளிலோ வெளிநாட்டு - பன்னாட்டு - நீதிபதிகளோ அல்லது பன்னாட்டு நீதித்துறை சார்ந்தவர்களோ தலையிடுவதற்கு நான் பதவியிலிருக்கும் வரை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.
இவ்வாறு மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
பன்னாட்டு நீதித்துறையின் பங்களிப்பை ஜனாதிபதி நிராகரித்திருப்பது அவரது சொந்தக் கருத்து, இந்த விடயத்தில் அது இறுதி முடிவல்ல என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கடந்த புதன்கிழமை கருத்து வெளியிட்டார். அவரின் இந்தக்கூற்றை நிராகரிக்கும் வகையிலேயே ஜனாதிபதி நேற்றுப் பாணந்துறையில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை அடியோடு நிராகரித்தார்.
அங்கு நடந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி,
"வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவருவது மற்றும் வெளிநாட்டு இராணுவ நீதிமன்றங்கள் குறித்து பல்வேறு தரப்பினரும் பல்வேறு இடங்களில் என்ன கருத்தைத் பக்.23

## உலக நியம நேரத்தில் ஒரு விநாடி கூடுகிறது

கொழும்பு, ஜூலை 9
26ஆவது முறையாக இந்த ஆண்டும் உலகக் கடிகாரங்களில் ஒரு விநாடி கூடுதலாக சேர்க்கப்பட உள்ளதாக பன்னாட்டு நேரத்தைக் கணக்கிட்டு வரும் அமெரிக்கக் கடற்படை வானாய்வு அமைப்பு அறிவித்தது.
நிலையான நேரத்தைக் கணக்கிடும் வகையிலேயே இந்த ஆண்டும் கூடுதலாக ஒரு விநாடியைச் சேர்க்க உள்ளதாக அந்த பக்.23

## பருத்தித்துறை விபத்தில் இளைஞன் பரிதாப சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 9
பருத்தித்துறையில் இ.போ. ச. பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கும் ஓராங்கட்டைச் சந்திக்கும் இடைப்பட்ட கோழிக் கடைச் சந்தியில் நேற்று மாலை 6.30 மணியளவில் விபத்து இடம்பெற்றது. இதில் புலோலி வள்ளக்கறிச்சி யைச் சேர்ந்த பி.விஜிதரன் (வயது - 25) உயிரிழந்தார் என்று பொலிஸார் பக்.23

## பொருளாதார மத்திய நிலைய அமைவிட முடிவு ஞாயிறன்று

### முதலமைச்சரிடம் பேசி எடுக்கப்படும் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், ஜூலை 9
வவுனியா பொருளாதார மத்திய நிலையம் எங்கே அமைக்கப்படவேண்டும் என்பது தொடர்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும். அதற்கு முன்னதாக ஓமந்தை மற்றும் தாண்டிக்குளம் காணிகளைப் பார்வையிட்ட பின்னர், முதலமைச்சருடன் பேச உள்ளேன்.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராசா.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டம் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு தொடர்பில் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:
நாளை (இன்று) வவுனியாவுக்கு வரவுள்ளேன். அடையாளப்படுத்தப்பட்டுள்ள தாண்டிக் குளம், பக்.23

# உணவு ஒறுத்தல் போராட்டத்தில் ஈடுபட 6 முதியவர்கள் தயார்

### கேப்பாபிலவில் தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி மீண்டும் போராட்டம்

முல்லை., ஜூலை 9
முல்லைத்தீவு - கேப்பாபிலவு மக்களது காணிகளை விடுவிக்கக் கோரி அந்தக் கிராமத்தின் 6 முதியவர்கள் காலவரையறையற்ற உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.
காணி விடுவிப்புத் தொடர்பாகக் கேப்பாபிலவு மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையில் நாளைமறுதினம் திங்கட்கிழமை கூட்டம் இடம்பெறவுள்ளது.
"அதில் எமக்கு நல்ல முடிவு கிடைக்காவிட்டால் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை உடன் ஆரம்பிப்போம்" என்று முதியவர்கள் தெரிவித்தனர்.
2009ஆம் ஆண்டு இறுதிப் போரின் பின்னர் முல்லைத்தீவு - கேப்பாபிலவு பகுதியில் உள்ள 550 ஏக்கருக்கு மேற்பட்ட மக்களுடைய குடியிருப்புக் காணிகளைக் கையகப்படுத்தி இராணுவத்தினர் படைமுகாம் அமைத்தனர்.
கடந்த 7 வருடங்களாகத் தமது காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு மக்கள் பல போராட்டங்களை பக்.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிமெந்து ஆலையை மீள ஆரம்பித்தால் 500 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

## தொழில் அமைச்சரிடம் வலியுறுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்

யாழ்ப்பாணம், ஜூலை 9

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பித்தால், வடக்கில் 500 இளைஞர்களுக்காவது வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அதனை ஆரம்பிப்பதாகத் தொழில் அமைச்சர் வாக்குறுதியளித்த போதும், அதற்கான எந்த முயற்சியும் இதுவரை எடுக்கப்படவில்லை. நம்பிக்கை மட்டுமே எம்மிடம் உண்டு.

இவ்வாறு தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனிவிரட்ண முன்னிலையில் தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

யாழ். பண்ணையில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்திணைக்களத்துக்கான கட்டடத்தை தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சர்ஜோன்செனிவிரட்ண நேற்றுத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் 35 ஆயிரம் இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். வடக்கு மாகாணத்தில் பெரிய அளவிலான தொழிற்றுறைகள் எதுவும் இல்லை. முன்னர் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மற்றும் பல்வேறு தனியார் தொழிற்சாலைகளும் இயங்கின. தற்போது எதுவுமே இயங்காதது குறித்து, தொழில்துறை அமைச்சரிடம் கூறியிருந் தேன். அவர் சிமெந்துத் தொழிற்சாலையை விரைவில் ஆரம்பிப்பதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் இன்னும் அது நடக்கவில்லை.



2010ஆம் ஆண்டிலிருந்து ஆனையிறவு உப்பளம் ஆரம்பிப்பது தொடர்பாக, பேச்சு இடம்பெற்றபோதும், அதற்கான அனுமதி வழங் கப்படவில்லை. உப்பளம் இயங்க ஆரம்பித்தால், குறைந்தது ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

முன்னைய அரசின் காலப்பகுதியில், பசில்ராஜபக்சவுடன் ஆனையிறவு உப்பளம் ஆரம்பிப்பது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தினோம். அவற்றில் முதலிடுவதற்கான முதலீட்டாளர்களும் அந்தக் காலப் பகுதியில் இருந்தார்கள். ஆனால் சாதகமான முடிவு எட்டப்படவில்லை. நல்லிணக்கத்தின் அறிகுறியாக அரசு மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். புதிய அரசு பதவியேற்று இரண்டு வருடங்களாகின்றன. ஆனால் இன்னமும் மக்களுக்கான முறையான வாழ்வாதார வசதிகள் வழங்கப்படவேண்டும். மக் களுக்கான உரிய வசதிகளை ஏற்படுத்தும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் எண்ணிக்கை 30 சதவீதம். வேலை வழங்குவது அரசின் கடமை. ஆனால் இந்த அளவில் தமிழருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. சமீபத்தில் நைட்டா 3 ஆயிரம் வேலை வாய்ப்புக்களை வழங்கிய போதும், அவற்றில் 2 சதவீதம் கூட தழிழருக்குக் கிடைக்கவில்லை – என்றார். (வ–4,ரி,ரி4)

# அண்மையில் விடுவித்த பகுதிகளில் விக்கிரகங்களும் திருடப்படுகின்றன

### பொலிஸாரின் நடவடிக்கைக்கு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 9

வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்த ஆலயங்கள் சேதமடைந்துள்ளன. எனினும் பல விக்கிரகங்கள் இருந்தன. அவை தற்போது களவாடப்பட்டுள்ளன. இதற்குப் பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் நிலை தொடர்பான கலந்துரையாடலில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

"வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பல ஆலயங்கள் சேதமடைந்துள்ள போதும், அங்கு பல விக்கிரகங்கள் இருந்தன. ஆனால் அவை இன்று திருடப்பட்டுள்ளன. மத வழிபாட்டுத் தலங்கள் உட்பட வலி. வடக்கின் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய சொத்துக்களையாவது பாதுகாக்க வேண்டிய தேவையுள்ளது" என்று வலியுறுத்தப்பட்டது.

இதற்குப் பதிலளித்த தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, "தகவல்கள் கிடைக்கப்பெற்றன. இருப்பினும் போதிய பொலிஸார் இன்மையால் உடன் கவனம் செலுத்தப்படவில்லை. தற்போது எமது நிலையத்திற்கு 20 பொலிஸார் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இந்தப் பிரதேசங்களில் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். அந்தப் பிரதேசத்திலுள்ள கிராம அலுவலர் ஒருவரின் வீட்டில்கூட பயன்தரு மரங்களை தறித்துச் சென்றுள்ளதாக முறைப்பாடு கிடைத்தது" – என்றார்.

(வ–10)

# ரவீந்திரநாத் நினைவு நிகழ்வு இன்று யாழ். பல்கலைக்கழகத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 9

இலக்கியத்துக்கான நோபல் ப்ரிசு பெற்ற குருதேவ் ரவீந்திரநாத் தாகூரின் 155 ஆவது பிறந்த நாளைமுன்னிட்டுயாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகமும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடமும் இணைந்து நடத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் ஒன்பதரை மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கூவர் அரங்கில் நடைபெற உள்ளது.

சாந்நிகேதன் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், பேராசிரியர் சுவாப்பன் டாற்றா, நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ள உள்ளார்.

குருநாத் ரவீந்திரநாத் அவர்கள் 1922ஆம் ஆண்டிலும், 1928 மற்றும் 1934 ஆண்டுகளில் (மூன்று தடவைகள்) யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# தாதியர் பணிப் புறக்கணிப்புக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியர் நேற்றுப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்த நிலையில், யாழ். மேல்நீதிமன்றம் அதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது. அதனால்பணிப்பறக்கணிப்புக் கைவிடப்பட்டது. ஆனால் அது பற்றிய ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்காக மேல்நீதிமன்று தாதியருக்குச் சந்தர்ப்பம் வழங்கி எதிர்வரும் 21ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

சர்வதேச சிவில் அரசியல் மாநாட்டு மனித உரிமைகள் சட்டம், இலங்கை நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்டுள்ள சட்டத்தின் அடிப்படையிலும், உறுதிகேள் எழுத்தாணை பிரிவின் அடிப்படையிலும் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் சங்கத்தின் பணிப் புறக்கணிப்பை தடைசெய்யக் கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் சிவநாதன் ஜமுனானந்தாவை மனுதாரராகக் கொண்டு, சட்டத்தரணி திருக்குமரன், இதனை அவசர மனுவாக ஏற்று இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மன்றத்தில் கேட்டார்.

மனுவில் யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோர் முதலாம், இரண்டாம் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டனர். அதில், எதிர் மனுதாரர்களாகிய தாதியர் சங்கத்தின் தலைவர் செயலாளர் உள்ளிட்ட தாதியர் சங்க உறுப்பினர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதால், வைத்தியசாலையில் பல்வேறு பிரிவுகளிலும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்ற நோயாளர்களுக்கும், சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்குவரும் நோயாளர்களுக்கும், அதேநேரத்தில், வைத்தியசாலைக்கும் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. எனவே தாதியர் சங்கப்பணிப்புறக்கணிப்பை நிறுத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும், தாதியர் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

இந்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், உயிர் வாழும் சுதந்திரத்தை உயர் நீதிமன்றம் பிரகடனப்படுத்தியுள்ளது. சர்வதேச சிவில் அரசியல் மனித உரிமைகள் இலங்கை சட்டத்தின் பிரகாரம், சுகாதார உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இரண்டு சட்டப்பிரிவுகளையும் கவனத்திற்கொண்டு, அவற்றின் அடிப்படையில், யாழ். தாதியர் சங்கம் பணி நிறுத்தப் போராட்டம் நடத்தும்போது, நோயாளர்களுக்கும் வெளிநோயாளர் பிரிவுக்கும் அங்கு எற்கனவே அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கும் உயிர் அச்சுறுத்தல்கள் எற்படக்கூடிய சூழ்நிலைகள் காணப்படுகின்றன.

இன்றிலிருந்து 14 நாள்கள் எதுவித வேலை நிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபடக் கூடாது என தாதியர் சங்கத்தின் தலைவர், செயலாளர் உட்பட்ட தாதியர் சங்கத்திற்கு இந்த நீதிமன்றம் இடைக்காலத் தடைக் கட்டளை பிறப்பிக்கின்றது என கட்டளையிட்டார். இந்தக் கட்டளைக்கு மதிப்பளித்து நேற்றுப் பகல் 11.30 மணிக்கே தாதியர்கள் பணிக்குத் திரும்பி விட்டனர் என்று தாதியர் சங்கம் தெரிவித்தது. (வ–4,10)

# பாலியல் தவறு மறைப்பு! சந்தேகநபர்களுக்குப் பிணை

சாவகச்சேரி, ஜூலை 9

பாடசாலை ஆசிரியரால் மேற்கொண்டதாகக் கூறப்படும் தவறான செயற்பாட்டை மூடி மறைக்க கூட்டங் கள் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த பாடசாலைச் சங்கங்களின் பிரதிநிதிகளும் மற்றொரு ஆசிரியரும் சாவகச்சேரி நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலையொன்றில் கடந்த மாதம் பிரத்தியேக வகுப்புக்கு வந்த மாணவியிடம் தவறாக நடக்க முற்பட்ட குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தை மூடி மறைக்க முயன்றார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், இரு ஆசிரியைகள் உட்பட 3 ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி, பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள் இருவர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கடந்த 29 ஆம் திகதி பாடசாலை அதிபர், பிரதி அதிபர் மற்றும் இரு ஆசிரியைகளுக்கு சாவகச்சேரி நீதிவான் நிபந்தனையுடன் பிணை வழங்கினார்.

இந்த நிலையில் அதே குற்றச்சாட்டில் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த பாடசாலைச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றுமொரு ஆசிரியரும் நேற்று மன்றில் முற்படுத்தப்பட்டனர். இவர்களுடன் மாணவியிடம் தவறாக நடக்க முற்பட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இந்த நான்கு பேர் சார்பிலும் முன்னிலையாகிய சட்டத்தரணிகளான ப.குகனேஸ்வரன் வே.திஸாந்தினி ஆகியோர் பிணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த பிணை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதனைப் பரிசீலித்த நீதிவான், பாடசாலை சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆசிரியருக்கு தலா 25 ஆயிரம் ரூபா பிணை வழங்கினார்.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஆசிரியர் சார்பாக விண்ணப்பித்த பிணை மனுவை நிராகரித்த சாவகச்சேரி நீதிவான் மன்றம், அவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளையிட்டது.

(வ – 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 பிள்ளைகளின் தந்தை விபத்தில் பரிதாபச் சாவு

*குருநாகலில் இருந்து கிளிநொச்சிக்கு வந்து மோட்டார் சைக்கிள் வாங்கித் திரும்புகையில் சம்பவம்*

குருநாகலில் இருந்து கிளிநொச்சிக்கு வந்து, மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிய இளம் குடும்பத் தலைவர் விபத்தில் உயிரிழந்தார். இந்தப் பரிதாபச் சம்பவம் வவுனியா – நொச்சி மோட்டையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. குருநாகல் மாவட்டத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அத்துல் வகாப் இர்பான் அத்முதீன் (வயது-28) விபத்து நடந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாவித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கிளிநொச்சியில் விற்பனைக்குள்ளது என்று இணையத்தள மொன்றில் விளம்பரம் வெளியிடப்பட்டது. இதைப் பார்த்த குடும்பத் தலைவர், அதனை வாங்குவதற்காக நேற்று முன்தினம் மாலை குருநாகலில் இருந்து கிளிநொச்சிக்கு வந்தார்.

கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொண்டு இரவு 7 மணியளவில் அதே மோட்டார் சைக்கிளில் குருநாகல் நோக்கித் திரும்பினார். "வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்" என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் வவுனியா பொதுவைத்தியசாலையில் இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-21,402)

## சப்ரகமுவ பல்கலை. தற்காலிகமாக மூடல்

வேகமாகப் பரவிவரும் காய்ச்சல் காரணமாக சப்ரகமுவ பல்கலைக் கழகம் நேற்று முதல் மூடப்பட்டுள்ளதாக பீடாதிபதி எச்.எஸ்.ஆர்.ரொசய்ரோ தெரிவித்தார். சப்ரகமுவ பல்கலைகலைக் கழகத்தில் கல்விகற்கும் மாணவர்கள் மத்தியில் ஒரு வகை காய்ச்சல் வேகமாக பரவும் அபாயம் உள்ளது. எனவே பல்கலைக் கழகம் எதிர்வரும் 20ஆம் திகதி வரை மூடுவதாக தீர்மானிக்கப்பட்டது. (வ-21)

**தேவை**

கொக்குவில், கோண்டாவில் திருநெல்வேலி பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

**0773536480**

**தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் ஹோட்டலுக்கு அலுவலக மற்றும் பராமரிப்பு வேலைகளிற்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை. யாழ் நகரில் இருந்து 3 KM க்கு உட்பட்டவர்கள்.

**0776687688/ 0212220515**

**வேலைக்கு ஆள் தேவை**

ரயர் கடைக்கு ரயர் வேலை தெரிந்தவர்களும் வேலை பழக விரும்புபவர்களும் தேவை.

**077 7148884, 077 6511693**

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

2 மாதம், 2வார ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு

**077 245 3673**

**வாடகைக்கு விடப்படும்**

330, பருத்தித்துறை றோட் ஆனைப் பந்தி சந்திக்கும் வீரமாகாளி கோயிலுக்கும் நடுவில் உள்ள 900 ச.அடி விஸ்தீரணம் உள்ள முதலாம் மாடிக்கட்டம் வாடகைக்கு விடப்படும்.

**077 833 2314**

**காணி விற்பனைக்கு உண்டு**

புத்தூர் சிறுப்பிட்டியில் சிறுப்பிட்டி இறை 'வேவியா கலட்டி' நிலப்பரப்பு ஏழ குளி எட்டு தசம் அறுநூற்று தொண்ணூற்று மூன்று (நிலப்பரப்பு 7 குளி 8.693) என்ற தோட்டக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு விலாசம் :சின்னமணியம் இந்திரகுமார் திடறபுலம், புன்னாலைக்கட்டுவன்

தொ. இல: 077 9292115

**விற்பனைக்கு**

யாழ் நகரின் மத்திய பகுதியில் பிரதான வீதிக்கு அண்மையில் அறை தொகுதியுடன் கூடிய கட்டடதொகுதி விற்பனைக்கு உண்டு.

**077 4064761, 077 3774247**

**IMMEDIATE VACANCY**

இலங்கையின் முன்னணி நிறுவனத்தின் கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் உள்ள கிளைகளுக்கான நிரந்தர வேலை வாய்ப்பு ஆகக் குறைந்த தகைமை O/L

- கவர்ச்சிகரமான சம்பளம்
- வயது எல்லை 18-30
- தங்குமிட வசதியுண்டு

தொடர்புகளுக்கு:
077 2961189, 077 2302795

கோடிபதி ஷனிதா 026 2016-07-08

அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை
ரூ.86,780,840/-

ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
B 10 43 58 77

தொ.பே. 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு 011 4 824 824

நியத்த ஜய
477
08.07.2016
நீலம்

23 26 35 60 E
ரூ1,15,38,320/=

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
08.07.2016 | 2001 | சிவப்பு

கும்பம்
வெற்றி இலக்கங்கள்
20 21 23 39
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 66,70,120 /-

அச்சகத்துறையில்
நியாய விலை உயரிய தரம்

விசிட்டிங்காட், பில்புத்தகம், லேபல்கள், நினைவுமலர்கள், பருவகால மலர்கள், சஞ்சிகைகள், போஸ்டர்கள், லெட்டர்பாட், சான்றிதழ்கள், அழைப்பிதழ்கள், CD கவர்கள், CD ஸ்ரிக்கர்கள்

எந்தவொரு பிறிண்டிங் நிறுவனமும் வழங்காத, வழங்கமுடியாத

கொழும்பு பிறிண்டேர்ஸ் கே.கே.எஸ் வீதி. 077 1974 875

ஐயனார்துணை



அனலைதீவு - நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு

**பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் (ஐயனார்) தேவஸ்தான**

**வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா சிறப்பிதழ் - 2016**

கொடியேற்றம்
10.07.2016
ஞாயிற்றுக்கிழமை

**விழாக்கால நிகழ்வுகள்**

தேர்த்திருவிழா
18.07.2016
திங்கட்கிழமை

09.07.2016 - சனி மாலை பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்
10.07.2016 - ஞாயிறு முதலாம் திருவிழா நண்பகல்12 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்), மாலை யாக பூஜை சுவாமி வீதி வலம் வருதல்.
11.07.2016 - திங்கள் 2ஆம் திருவிழா - மாலை பூச்சொரியும் உற்சவம்
12.07.2016 - செவ்வாய் 3ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், மாலை வேத பாராயணத் திருவிழா.
13.07.2016 - புதன் 4ஆம் திருவிழா பகல் விஷேட திரவிய அபிஷேகம், விஷேட திரவிய ஹோமம், பக்தி முத்தி பாவன உற்சவம்
14.07.2016 - வியாழன் 5ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், மாலை வசந்த உற்சவம், முத்துச் சப்பரம்.
15.07.2016- வெள்ளி 6ஆம் திருவிழா பகல், இரவு கைலாசவாகனத் திருவிழா
16.07.2016 - சனி 7ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம்,மாலை வேட்டைத் திருவிழா
17.07.2016 - ஞாயிறு 8ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், சந்தன அலங்காரம், மாலை சப்பைரத உற்சவம் (சப்பரத் திருவிழா)
18.07.2016 - திங்கள் 9ஆம் திருவிழா பகல் தேர்த்திருவிழா பகல் 10 மணிக்கு இரத ஆரோகணம், வீதியுலா, பச்சை சாத்துதல், மஹா அபிஷேகம், (108 சங்காபிஷேகம்) பஞ்சமுக அர்ச்சனை.
19.07.2016 - செவ்வாய் 10ஆம் திருவிழா தீர்த்தத்திருவிழா முற்பகல் 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும். மாலை துவஜா அவரோகணம். (கொடியிறக்கம்) சண்டேஸ்வரர் உற்சவம், ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும்.
20.07.2016 - புதன் 11ஆம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம், மாலை திருக்கல்யாண உற்சவம்.
21.07.2016 - வியாழன் மாலை வைரவர் பொங்கல்.

11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.

அனலைதீவு - 05

"அனைவரும் வருக ஐயனார் அருள் பெறுக"
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

பரிபாலனசபையினர்,
ஐயனார் ஆலயம்

(அ/21185) (11.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் மூத்த விநாயகர் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்

## இன்று (09.07.2016) சனிக்கிழமை



### மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி



"வேழமுகத்து விநாய கனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

இன்றைய தினம் திருவருள் மிகு மூத்தவிநாயகர் பெரு மானின் இரத பவனி உற்சவம்.

சுவாலித்து எரியும் அக் கினி யின் தோற்றத்தில் அமைக் கப்பட்ட தேரானது அழித்தல் தொழிலைக் குறிப்பது. தேரின் பாகங்கள் பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன. அங்கு இறைவன் வீற்றிருந்து தேர் ஓடுவது வாழ்க்கைத் தேர். சிறப்பாக ஓடுவதற்கிசைவாகச் சறுக்குக் கட்டைகள் போட்டு அதனைக் கட்டுப்படுத்துவது போல நமது வாழ்க் கையையும் நல்வழிகளில் நெறிப்படுத்த வேண் டும்.மேலே கோபுரம் போல குவிந்து செல்லும் தேர்க்கலச முடிவில் குடை நிழல் தெரிகிறது. மனம் குவிந்து மேலான சிந்தனையுடன் இறைவனைத் தியானித்து இறைவனின் திருவருளின் துணையுடன் மண்ணிலே பெருவாழ்வு வாழ்வோமாக. ஆலய தர்மகர்த்தா சபையினர், உபயகாரர்கள், இளைஞர்கள், விநாயகப் பெருமானின் மெய்அடியார்கள் அனைவரும் சகல சௌபாக்கியம் பெற்று வாழ நல்லாசி கூறுகின்றேன்.

'தேர்வடம் பிடித்தால் கோடி நன்மை'

**பிரதிஷ்டா கிரியா பூஷணம்**
**சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள்**
**(தொல்புரம் வழுக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு)**

### ஆலய வரலாறு

ஈழமணித் திருநாட்டின் ஈடில்லாச சிரமேயன்ன இலங்கிடும் யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் வளர்த்த நாவலர் தோன்றிய நல்லூர் பதியில் கச்சேரி - நல்லூர் வீதியிலே மேற்கு நோக்கி அமர்ந்திருந்து மூத்த விநாயகர் என்னும் திருநாமத்தோடு அருள்பாலிக்கும் திருத்தலமே மூத்தவிநாயகர் ஆலயமாகும்.

இற்றைக்கு 480 ஆண்டுகளுக்கு முன் அப்போது யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த சங்கிலிய மன்னன் தனது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில அதிகம் மக்களைக் குடியமர்த்தி விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் என்பவற்றை மேம்படுத்த நினைத்தான். அதனால் அண்டை நாடான தென் இந்தியாவிலிருந்து அங்கு ஆட்சியிலிருந்த அரசனுடன் தொடர்பு கொண்டு கணிசமான மக்களை வருவித்தான். இப்படி வருகை தந்தவர்களில மருங்கூரிலிருந்து வருகை தந்தவர்களே எமது மூதாதையர்களாவர். இவர்கள் முதலில நாவற்குழிப் பகுதியில் குடியேற்றப்பட்டனர். காலப் போக்கில் இவர்கள் நல்லூர்ப் பகுதியில் குடியேறினர். இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் தம்புப்பத்தர் என்பவரது காணியில் அவரது அனுமதியுடன் தாம் வரும்போது மருங்கூரிலிருந்து கொண்டு வந்த கருங்கல்லினாலான விநாயகர் விக்கிரகத்தை சிறு கொட்டிலமைத்து அதில் ஸ்தாபித்து வழிபட்டு வந்தனர்.

கொட்டிலாக இருந்த இவ்வாலயம் 1850 ஆம் ஆண்டில் ஆகம விதிகளுக்கமைவாக வைரக்கற்களால் கட்ட வேண்டுமெனத் தீர்மானித்த நம் மூதாதையர் வயலும் வயல் சூழ்ந்த இடமுமான மருதநிலத்தில் நாயன்மார்குளம், பாணன்குளம் ஆகிய குளங்கள் சூழவுள்ள இப்பகுதியில் ஆலயத்தை நிர்மாணித்தனர். கற்பக்கிரகம்,ஸ்தூபி, கருங்கல்லினாலான விநாயகர் விக்கிரகம், மூஷிகம், பலிபீடம் மற்றும் ஐம்பொன்னாலான உற்சவ மூர்த்தி ஆகியன உருவாக்கப்பட்டு அதே வருடத்தில் கும்பாபிஷேகமும் நடைபெற்றதாக அறியக் கிடக்கின்றது. இதனைத் தொடர்ந்து இரண்டு காலப்பூசையும் 10 நாள் அலங்கார உற்சவமும நடந்துவந்துள்ளது.

1906ஆம் ஆண்டு இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1907ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதன்பின்னர் கும்பாபிஷேகம் நடைபெற்ற காலங்கள் வருமாறு.

1944 ஆவணி 25, 1968 ஆடி 14, 1981 ஆடி 13, 1993 ஆனி 04, 2006 வைகாசி 04

1994 இல் இருந்து எமது ஆலயத்தில் கொடியேற்றி மஹோற்சவம் செய்ய வேண்டுமென ஆலய தர்மகர்த்தா சபை தீர்மானித்தது. அதற்கமைய ஆண்டுதோறும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

தற்போது தினமும் மூன்றுவேளைப் பூசைகள் நடைபெற்று வருவதுடன் எம்பெருமானைத் தேடி வரும் அடியார்களுக்கும் அருளையும் ஆசியையும் தந்து கொண்டிருக்கிறார் நல்லூரில் இருக்கும் மூத்தவிநாயகப் பெருமான்.

### பிறவிப்பயனைக் கொடுக்கும் விநாயகன்



நல்லூர் மூத்த விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று நடைபெறவிருப்பதினை முன்னிட்டு உதயன் பத்திரிகை யில் சிறப்புமலர் வெளியிடுவது மகிழ்ச்சி அளிக்கின்றது.

இன் றையதினம் நடை பெறும் இரதோற்சவத்தில் கலந்து சிறப்பிக்கும் அடியார்கள், விநாயகப் பெருமானின் தேர்வடம் பற்றி இழுப்பவர்கள் யாவரும் தமது பிறவிப் பெரும் பயனைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் நீடூழிவாழ வாழ்த்துகின்றேன்.

திரைகடல் ஓடி திரவியம் தேடும் எமது அயல வர்கள், அன்பர்கள், அடியார்கள் விநாயகப் பெரு மானை நினைத்து அவ்வப்போது செய்யும் பொருளுதவியினால் ஆலயத் திருப்பணிகள் செய்து சிறப்பாக மிளிர்கின்றது. தொடரட்டும் அவர்கள் பணி.

இவ்வாலயத்தின் இந்து இளைஞர் மன்றத்தி னால் நடத்தப்பட்ட கல்விசார் - சமய அறிவுப் போட்டி யின் பெறுபேறுகள் - பரிசுவழங்கல் என்பன இன்று நடைபெறுகின்றமை பெரிதும் பாராட்டுக்குரியது. மகிழ்ச்சியளிக்கின்றது.

பத்து தினங்களும் அறுசுவையுடன் அன்ன தானம் செய்த உபயகாரர் அதன் பயனை அடை வார்களாக என ஆசி கூறி மகிழ்கின்றேன்.

**ந.கண்ணலிங்கம்**
**தலைவர், நல்லூர் மூ.வி.தர்மகர்த்தா.**

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**ஜெயலக்ஷன் பான்சி ஹவுஸ்**
**கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்**
211,162, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8453, 021 222 4354

**கஜாணன் பல்பொருள் வாணிபம்**
கச்சேரி, நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**கமலேஸ்வரி புடைவையகம்**
பட்டுச் சேலைகளின்
வண்ணமயமான இடம்
ஒருமுறை விஜயம் செய்து
பாருங்கள்புடைவைத்
தினுசுகளின்சொர்க்கம் இது
வென்று அறிவீர்கள்
எமது வாடிக்கையாளர்களுக்காக
**யாழில்**
25,27, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6303
**கொழும்பில்**
214, பிரதான வீதி,
கொழும்பு -11,
011 245 2878

**MATHI COLOURS**
**Printers**
திருமண அழைப்பிதழ் காட்சியறை
Tel: 021 222 9285
10,Murugesar Lane,
Nallur,Jaffna.
e-mail:
mathicolours@gmail.com
web:www.mathicolours.com

**மூத்தவிநாயகர்**
**பஸ் புக்கிங் சென்ரர்**
கச்சேரி, நல்லூர் வீதி- யாழ்.
077 925 4914

**காண்டம் வாசிக்கப்படுகிறது**
கௌசிக, அகஸ்திய முனிவர்களால்
எழுதப்பட்டு ஏட்டுச்சுவடிகள் மூலம் தங்களின்
நிகழ்கால, கடந்தகால, எதிர்கால பலன்களை
காண்டமாக வாசிக்கப்டுகிறது
384 A, நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார் கோயில் சந்தி) 021 221 7944

**ஸ்ரீ சுகந்தி சேல்ஸ் சென்ரர்**
கட்டடப் பொருள்கள் மொத்தமாகவும்
சில்லறை யாகவும் விற்பனை
செய்பவர்களும், வீடு, கோயில் கட்ட
ஒப்பந்தகாரரும், வீடு, கோயில் களுக்கு
அலங்கார பொருள்கள் விற்பனை
செய்பவரும்
இல.383, நாவலர்வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
ச.சாந்தலிங்கம்
தொ.இல. 021 222 3287, 077 412
6435
30/3, மூத்தவிநாயகர் வீதி,
கச்சேரி, நல்லூர் வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
கிளை - 223, கச்சேரி, நல்லூர் வீதி.

A member of the IDOL family
**UV Water Solution**
water science technologies
Right solution for water issues
**Waranty 1 year**
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், கடைகளில் பருகும் நீர் சுத்தமான நன்னீராக வேண்டுமா?
இதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இயந்திரம் எம்மிடம். 22,000/- இலிருந்து .
தொடர்புகளுக்கு: 077 5092737
277, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்

## திருமதி நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம்

### (சங்கீத டிப்ளோமா - யாழ். பல்கலைக்கழகம்)

### உப அதிபர் - யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்



**ஆசிச்செய்தி**



இருபத்துமூன்று வருடங்களாக மகத்தான ஆசிரியப் பணியாற்றி சேவையிலிருந்து 08.07.2016 அன்று ஓய்வுபெறும் திருமதி நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடை கின்றேன்.

11.01.1993 முதல் நியமனம் பெற்று ஆசிரியராகவும் தனது அர்ப்பணிப்பான சேவையின் மூலம் உப அதிபராகவும் கடமையாற்றி சமூகத்தில் நல்மாணவர்களையும் ஆளுமைமிக்க சந்ததியினரையும் உருவாக்கிய பெருமைக்குரியவர்.

தம்பாட்டி G.T.M.S . கரந்தன் சண்முகானந்த ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்பித்து தற்போது உபஅதிபராகக் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெறுவது பாராட்டுதற்குரியது. ஆசிரியப்பணி என்பது சமூகத்துக்கு ஏற்புடையதான நல்ல பிரஜைகளை உருவாக்குகின்ற மகத்தான பணி. அப்பணியை விருப்புடன் ஏற்று மாணவர்களுக்குக் கல்வியையும் ஒழுக்க விழுமியங்களையும் வழங்கியதுடன் இணைபாட விதான செயற்பாடுகளிலும் தன்னுடைய காத்திரமான பங்களிப்பை திருமதி நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம் வழங்கியிருந்தார்.

பாடசாலை அதிபருடனும் சக ஆசிரியர்கள். மாணவர்கள் மட்டுமன்றி பாடசாலைச் சமூகத்துடனும் நல் உறவு நிலையைப் பேணி பாடசாலையின்ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தன்னுடைய பங்களிப்பை வழங்கியிருந்தார். இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் நோய் நொடியின்றி நீடூழி காலம் வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்**

**ஆசிச்செய்தி**



எழில்மிகு தென்னந்தோப்புக்கள் நிறைந்த கொழும்புத்துறைப் பதியிலே கற்பகத் தருவாக விளங்கும் துரையப்பா வித்தியால யத்தின் துணை அதிபராக இருந்து ஓய்வுபெறும் திருமதி நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம் அவர்கள் நயினைத்தாயின் மண்ணில் பிறந்து சமய, கலை, கலாசார விழுமியங்களைச் சிறப்பாக தன்னுடைய வாழ்நாளில் ஒழுகப் பெற்றவர். மாணவர்களுடன் மிகவும், அன்பாகவும், பண்பாகவும் அவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்தி நல்வழிப்படுத்துவதில் ஒப்பற்றவர். பிரதி வெள்ளிக்கிழமைகளில் தவறாது சந்திரசேகரப் பெருமானைத் தரிசித்துத் தனது கடமைக்குச் செல்பவர்.

அவர் தனது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் இந்நாளில் மேலும் அவருடைய ஓய்வுகாலத்திலும் அவருடைய இறைபணி மேலும் தொடர எல்லா சீரும். சிறப்பும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என எல்லாம் வல்ல ஸ்ரீ சந்திரசேகரப் பெருமானின் பாதக் கமலங்களை வேண்டி ஆசிகளையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**பிரம்மஸ்ரீ சரவண இராஜசேகரக் குருக்கள்**
**(சிவ ஆகம தத்துவ நிதி)**
**ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் திருக்கோயில்,**
**கொழும்புத்துறை கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**சேவை விவரம்**

| | | |
|---|---|---|
| 11.01.1993 | - 14.02.2001 | - யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் |
| 15.02.2001 | - 04.01.2004 | - யா/ தம்பாட்டி அ.த.க.பாடசாலை |
| 05.01.2004 | - 08.07.2016 | - யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம். |

ஆசிரிய சேவை 23 வருடங்கள்

**அதிபரின் வாழ்த்துச் செய்தி**




எமது பாடசாலையில் உப அதிபர் பணியினை அர்ப்பணிப்புடன் ஆற்றி அகவை அறுபதை அடைந்துள்ள திருமதி நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.

இசை ஆசிரியையாக, உப அதிபராகச் செயற்பட்டு மாணவர்களது சாதனை அடைவுகளுக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் தனது அர்ப்பணிப்பான பங்களிப்பை நல்கிய உத்தம சேவையாளர். சிறந்த சமூகத் தொடர்பாளர். ஆலோசகர், வழிகாட்டி, பாடசாலையின் புலக்காட்சிக்கான சக்திமிகு பங்காளியென பல்வேறு தளங்களிலும் காத்திரமான பங்களிப்பை நல்கியதோடு மட்டுமல்லாது பாடசாலையினை சகல வழிகளிலும் புகழ்மிக்கதாக்குவதிலும் அவரது பணிக்காலம் உன்னதமானது.

பல்துறை ஆளுமைமிக்க ஆசிரியையாக விளங்கி கடமையில் ஓய்வுநிலையினை அடையும் ஆசிரியையின் சேவையினை நினைவில் கொள்வதோடு அவரது ஓய்வுக்காலம் குடும்பத்தினருடன் மகிழ்ச்சிகரமாக அமைய எல்லாம் வல்ல ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையாரின் அருளாசியினையும் வேண்டுகின்றேன்.

**நடேசு தயாளன் - அதிபர்.**

**ஆசிச்செய்தி**




திருமதி நாகராஜேஸ்வரி - சுகிர்தலிங்கம் அவர்கள் தனது அறுபது வயதைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற வுள்ளார்.

இவர் ஒரு சிறந்த இசையாசிரியர். 1993 தொடக்கம் 08.07.2016 வரை ஆசிரியப் பணியாற்றி நிறைவில் உப அதிபர் பணியையும் நிறைவேற்றி சேவை நிறைவு செய்கின்றார். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய நிகழ்வுகளில் இவரின் இசையில்லாத நிகழ்ச்சியே இல்லை எனலாம். பார்ப்பதற்கு மிகவும் எளிமையான சுபாவம் எல்லோரிடமும் பழகும்தன்மை என்பன இவரின் உயர்வுக்குக் காரணம் எனலாம். இவரின் பணியில் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் பெருமை கொண்டமை வரவேற்கக் கூடியதாகும். இவரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துக்கள்.

**S.சண்முககுமார்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர் - கோட்டக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்**

**ஆசிரியர் நலன்புரி கழகத்தின் வாழ்த்துச்செய்தி**



தனது ஆசிரிய சேவையின் 20 வருடங்களை துரையப்பா வித்தியாலயத்துக்காக அர்ப்பணித்து, பல சாதனைகளை ஏற்படுத்தி, உப அதிபராக விளங்கி (08.07.2016) வெள்ளிக்கிழமை மணிவிழாக்காணும் திருமதி நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் மகிழ்வாகத் தொடர்பாடி, கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றியவர். பல சங்கீத பட்டதாரிகளை உருவாக்கி கொழும்புத்துறை கிராமத்தில் மதிக்கப்படுபவர். சங்கீதச் சிரிப்பால் அனைவரையும் ஒன்றிணைத்து நிறைவான சேவை புரிந்தவர். அவரது ஓய்வுக்காலம் சிறப்புற இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

**தலைவர்,**
**ஆசிரியர் நலன்புரிகழகம்,**
**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.**

**ஆசியுரை**



விழுமியங்கள் பல பரப்பி நிற்கின்ற விந்தை மிகு ஆசிரியர் திருமதி நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம் அவர்களின் சேவை நலன் பாராட்டுச் சிறப்பிதழுக்கான ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தற்சமயம் அதிக எண்ணிக்கையான கல்விப் பெறுபேறினை நல்கும் அரச பாடசாலைகளில் ஒன்றான யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் 1993.01.11ஆம் திகதி முதல் நியமனம் பெற்றுப் பின் இரு பாடசாலைகளில் சேவையாற்றி இறுதியில் மீண்டும் எமது பாடசாலையில் 'மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது' என்பதற்கேற்ப அமைதியாக இருந்து கொண்டு பல சேவைகளை சளைக்காமல் செய்வார். மாணவர்களிடம் குருவாகவும், அன்னையாகவும், ஒரு சிறந்த நண்பனைப் போலவும் பாசத்துடன் நடந்து கொள்வார். அதிபருக்குப் பக்க துணையாக நின்று ஆலோசனைகளை வழங்கி இப்பாடசாலையின் முன்னேற்றத்துக்குப் படிக்கற்களாக இருந்துள்ளார். 60ஆவது வயதில் ஓய்வுபெறவுள்ள இவர் எதிர்வரும் காலங்களில் மேலும் மேலும் வளர்ச்சி பெற அவரது ஆதரவை அன்புடன் எதிர்பார்ப்பதுடன் அவருக்கு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்து, அவர் நீண்டகால இறை ஆசியுடன் வாழ்வாங்கு நோய் நொடி இன்றி வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சு.நவரட்ணம்,**
**செயலாளர், பாடசாலை அபிவிருத்திக்குழு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Spoken English

3மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில ஆசிரியர்
ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
Dip/cer in English and Science London.
(B.Tech) வகுப்புக்கள் 424/3, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்கம் சுவாமி வீதி, சங்கானை.
077 675 1649



## வைத்தியம்

30.40.50 இலட்சங்கள் செலவு செய்தும் குழந்தை பெறும் சிகிச்சைகளில் வென்றவர்கள் ஒரு சிலரே. செலவு செய்ய முடியாமல் ஏங்கவோ வெளிநாட்டு உதவிக்காகக் காத்திருக்கவோ தேவையில்லை. சில ஆயிரங்களைச் செலவு செய்து எனது ஆலோசனை, சிகிச்சைகளின் மூலம் குழந்தை பெற்றவர்கள் பலர். உங்கள் பிரச்சினை எப்பேர்ப்பட்டதாக இருந்தாலும் என்னுடன் கலந்தாலோசிக்கலாம். காலதாமதம் உங்களின் வெற்றியையே தாமதிக்கும்.

077 730 1669
Dr.R.Sivagurunathan (Ayur)
இல.54,33ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை.
இன்றும் நாளையும் வைத்தியரை யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம்.



## மாதிரிப் பனந்தோட்டங்களின் நிலவடிவமைப்பும் அழகுபடுத்தலும் கேள்வி மனுக்கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் புளியங்குளத்தில் அமைந்துள்ள 10 ஏக்கர் விஸ்தீரணம் உடைய மாதிரிப்பனந்தோட்டத்தினை அழகுபடுத்தி வடிவமைக்கும் செயற்றிட்டத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றக்கூடிய ஆர்வமுடைய நிலவடிவமைப்பு மற்றும் அழகுபடுத்தல் (Landscaping) நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுடைய நிறுவனங்கள் தமது நிறுவன விவரங்கள், முன்னைய அனுபவம் என்பவற்றுடன் தங்களால் விதந்துரைக்கப்படும் வடிவமைப்பு செயற்றிட்டம், இதற்கான உத்தேச மதிப்பீடு என்பவற்றினை வெவ்வேறாகக் குறிப்பிட்டு **22.07.2016** ஆம் திகதிக்கு முன்பதாக **தலைவர், பனை அபிவிருத்திச்சபை, தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு **077 232 1051** என்னும் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பனை அபிவிருத்திச்சபை, யாழ்ப்பாணம்.** (0/2752) (11.18)



## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

திரு.சு.தூயஞானசெல்வம்

வட்டுக்கோட்டை மின்பாவனையாளர் சேவை நிலையத்தில் மின் பாதையாளராகக் கடமையாற்றி இன்றுடன் (09.07.2016) சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் எமது சக ஊழியர்
**திரு.சு.தூயஞானசெல்வம்**
அவர்களுடைய சிறப்பான சேவையைப் பாராட்டுவதோடு இவரின் ஓய்வுக்காலம் சிறக்கவும் இறைவனருளால் நோயற்ற வாழ்வு வாழவும் வாழ்த்தி நிற்கின்றோம்.



வாழ்த்துவோர்:
மின்அத்தியட்சகரும், சக ஊழியர்களும்,
மின்பாவனையாளர் சேவை நிலையம்,
இலங்கை மின்சாரசபை - வட்டுக்கோட்டை.



## விவாக சுபமுகூர்த்த பத்திரிகை

நிகழும் சுப மங்கலகரமான துர்முகி வருஷம் ஆனித்திங்கள் 27ஆம் நாள் (11.07.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.25 மணி முதல் 01.27 மணி வரையுள்ள அத்த நட்சத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

**திரு. திருமதி.**
**குணநாயகம் அமராவதி**
**தம்பதியினரின்**
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**மயூரன்**
அவர்களுக்கும்



**திரு. திருமதி.**
**ஏகாம்பரநாதன் தேவராணி**
**தம்பதியினரின்**
ஏகபுத்திரி
திருநிறை செல்வி
**கார்த்திகா**
அவர்களுக்கும்

ஸ்ரீ காயாரோகண ஸ்வாமி, முத்துமாரி அம்மன் திருவருள் துணை கொண்டு
**" சங்கிலியன் மண்டபத்தில் "**
(கிறீன் கிறாஸ் ஹோட்டல் - இல.33, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)
திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**

திருமதி.குணநாயகம் குடும்பத்தினர்,
மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.
021 222 5383

திரு.திருமதி.ஏகாம்பரநாதன் குடும்பத்தினர்,
கோவில் பிள்ளையார் கோவிலடி,
165, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.
077 844 5400


# எழுதுமட்டுவாழ் கண்ணகையம்மன் பெருந்திருவிழா

தென்மராட்சி,ஜூலை 9
எழுதுமட்டுவாழ் விழுபளை கண்ணகை அம்பாள் ஆலய சகஸ்ரநாம மகா சங்காபிசேகமும் தொடர்ந்து பெருந் திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. திருவிழா தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு மகா சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி காலை 9.30 மணிக்கு சகஸ்ரநாம சங்காபிசேகம் இடம்பெறும். தொடர்ந்து பெருந் திருவிழாக் கிரியைகள் ஆரம்பமாகி மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் மு.ப. 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (த-9)

# விளையாட்டு விழா

தெல்லிப்பழை லிற்றில் மாஸ்ரேஸ் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமாதான நீதிவான் கி.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலக ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன் கலந்துகொள்வார். (த)


## வேலையாள்கள் தேவை

**மில் ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.**

***கணக்காளர்** (50 வயதுக்கு மேற்பட்ட, முன்அனுபவமுள்ளவர்)
***விற்பனைப் பிரதிநிதி** (குறைந்தது 3 வருடமும், முன்அனுபவமுள்ளவர்)
**சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.**

075 640 5890 (8/2781) (11.17.18)



## மணமகள்கள் தேவை

*1984 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 22 பாவமுடைய டாக்டர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1980 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 19¼ பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் அல்லது பட்டதாரி மணமகள் தேவை.
*1984இல் பிறந்த 1இல் செவ்வாய், 73 பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு டாக்டர், இஞ்சினியர், பட்டதாரி மணமகள் தேவை.
*1978இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 2½ பாவமுடைய டாக்டர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1984இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய Phd விரிவுரையாளருக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1984இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1985 இல் பிறந்த 1இல் சூரியன் செவ்வாய் 75 பாவமுடைய பட்டதாரி மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, முடமாவடி, பூங்கனிச்சோலையடி.
077 607 0862 (6/2752) (11.18)



## தேவை

Video Editing
தெரிந்தவர்கள் தேவை.
தொடர்பு: 077 951 5187



## வாடகைக்கு

பலாலிவீதி, வளாக ஒழுங்கையில் மூன்று அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வாடகை பேசித் தீர்மானிக்கலாம்.
077 111 6578



## மணமகள் தேவை

24.03.1981, 4இல் சூரியன், செவ்வாய், பாவம் 37, அரச உத்தியோக இந்து கௌரவ மணமகனுக்கு சூரியன், செவ்வாய் உடைய இந்து கௌரவ அரச உத்தியோக மணமகள் உள்நாட்டில்/ வெளிநாட்டில் தேவை.
072 183 7626



## தவறிவிட்டது

மீசாலை ஐயாகடை சந்திக்கும் புதூரார் கோயில் வீதி மந்துவில் கிழக்கு பகுதிக்கும் இடையில் மரியதாஸ் மரியடினோ ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ், காப்புறுதி வரி அடங்கிய பேர்ஸ் 04.07.2016 அன்று தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
077 186 2457/ 077 907 6902



## தெல்லிப்பழை - அளவெட்டி- கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய மஹோற்சவம் - 2016



விநாயகர் அடியார்களே!
நாளை (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெற இறையருள் பாலித்துள்ளது.

**உற்சவ விவரங்கள்:**
**10.07.2016 ஞாயிறு - கொடியேற்றம் - முற்பகல் 10.00 மணி**
**17.07.2016 ஞாயிறு - சப்பறத் திருவிழா - மாலை - 7.00 மணி**
**18.07.2016 திங்கள் - தேர்த்திருவிழா - காலை 9.00 மணி**
**19.07.2016 செவ்வாய் - தீர்த்தோற்சவம் - முற்பகல் 10 மணி**

**[illegible] தொடி வாழ்வு மிகுந்து வரும்**

[illegible],
அளவெட்டி.
ஆலய நிர்வாக சபையினர்.


# இன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 9
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மின் தடைப்படும்.

யாழ். பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான் ஆகிய இடங்களிலும், கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஆனந்தபுரத்திலிருந்து கொக்காவில் வரைக்கும், மத்திய வங்கி, எஸ்.எப்.எச்.கியூ இரணைமடு, மாஸ் அக்ரிவ், யுனிச்செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், நோர்த் கார்கில்ஸ் அக்ரி பூட்ஸ், 7ஆவது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்ரெட், கொக்காவில் இராணுவ படை முகாம் 1, கொக்காவில் இராணுவ படை முகாம் 2, கொக்காவில் இராணுவ படைமுகாம் 3, ரூபவாகினி தொலைத் தொடர்பு கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம் தொலைத் தொடர்பு கோபுரம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும்.

மன்னார் பிரதேசத்தில் எழுத்தூரிலிருந்து தலை மன்னார் வரை, முருங்கன், முசலிப் பிரதேசம், பரிகாரிக் கண்டல், பூந் தீவுக் கண்டல், மடுக் கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச்சிக்குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக் குப்படையான், தம்பட்ட முசலி, மறிச்சுக் கட்டி, கூளாங்குளம், புதுவெளி, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அரிப்பு நீர்ப்பாசனசபை, சிலாவத்துறை, சி.இ.சி.பி., முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறைக் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தற்கு மேலதிகமாக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் நுணாவில், கைதடி, மட்டுவில், நாவற்குழி, மறவன் புலோ, தனங்களப்பு, கோயிலாக் கண்டி, கேரதீவு வீதி, தச்சன் தோப்பு, அறுகுவெளி, பனைவள ஆராய்ச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளாண்ட் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (த-ரி)

# ஆலயப் பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 9
அனலைதீவு நயினாகுளம் ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயப் பெருந் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரத்துக்கு வழங்கிய கால்நடைகள் கூடக் கடத்தல்

## பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோருகிறார் வேலணைப் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், ஜூலை 9

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மக்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்கிய கால்நடைகளைக் கூடக் கடத்தல்காரர்கள் விட்டுவைப்பதாக இல்லை. எனவே பொலிஸார் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேலணைப் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் வேண்டு கோள் விடுத்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கோரினார்.

அவர் தெரிவித்ததாவது:

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் வாழும் வறுமைப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்காக நாம் வழங்கிய கால்நடைகளைக்கூடக் கடத்தல்காரர்கள் விட்டுவைப்பதாக இல்லை. அதனையும் களவாடிச் செல்கின்றனர். ஒரு சிலரை மட்டுமே பொலிஸார் பிடிக்கின்றனர்.

இதேபோன்று மாலையானால் தொடர் மணல் திருட்டு இடம் பெறுகின்றது. அவ்வாறு திருட்டில் ஈடுபட்ட டிப்பர் வண்டியை அண்மையில் பொலிஸார் கைப்பற்றிப் பின்னர் சட்ட நடவடிக்கையின் பிரகாரம் அது விடுவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு விடுவிக்கப்பட்ட வாகனம் மீண்டும் அதே மணல் கொள்ளையில் ஈடுபடுகின்றது.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவானது 4 தீவுகளைக் கொண்டது. இதில் இரு தீவுகளில் பொலிஸ் பிரிவு உள்ள போதிலும் முக்கிய இடமான புங்குடுதீவில் கிடையாது. இங்கு பொலிஸ் நிலையம் அமைக்க ஒரு வீட்டைத் தெரிவு செய்து நாம் புனரமைத்துள்ளோம். எனவே அங்கு பொலிஸ் நிலையம் அமைக்கப் பொலிஸார் முன்வர வேண்டும் .


வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மதுபானச்சாலை களே இல்லாதபோதிலும் யாழ். நகரப் பகுதியில் இருந்து எடுத்து வரப்பட்டு மசுக்கொட்டி , அல்லைப்பிட்டிப் பகுதிகளில் அதிக மது விற்பனை இடம்பெறுகின்றது. இதனைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் - என்றார்.

இவற்றுக்குப் பதிலளித்த பொலிஸார், "மது விற்பனை தொடர்பில் பலரைக் கைது செய்து வழக்குப் பதியப்பட்டுள்ளது. இருப்பினும் கண்காணிப்பு மேலும் பலப்படுத்தப்படும். அதேபோல் மணல்கொள்ளை தொடர்பிலும் சிலர் கைது செய்யப்பட்டதோடு லஞ்சம் கொடுக்க முன்வந்த வரையும் கைது செய்தோம். அத்துடன் மாடு கடத்தல் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது" எனக் கூறினர்.

இதற்கு மீண்டும் பதிலளித்த பிரதேச செயலர், "பிடிபட்ட அதே டிப்பர்தான் மீண்டும் அங்கு மணல் கடத்துகின்றது"- என்றார். (கு-101)

# ரயில் மோதி உயிரிழக்கும் கால்நடைகளால் துர்நாற்றம்

## அவற்றை அகற்றுவதற்குப் பின்னடிப்பு



தென்மராட்சி, ஜூலை 9

ரயில்களில் மோதுண்டு உயிரிழக்கும் கால்நடைகள் ரயில் பாதையில் இருந்து அப்புறப்படுத்தப்படாமையால் அவற்றைத் தீயிட்டு எரிக்கவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்படுகிறது.

கட்டாக் காலிகளாக அலையும் கால்நடைகள் ரயில்களில் மோதுண்டு தண்டவாளத்தில் உயிரிழந்த நிலையில் நீண்ட நாள்களாகக் காணப்படுகின்றன. இவற்றைப் உள்ளூராட்சி சபைகளோ அல்லது கால்நடைகளின் உரிமையாளர்களோ அப்புறப்படுத்தாமல் கைவிடுவதால் அவை பழு தடையும்வரை அந்த இடத்தி லேயே காணப்பட்டு துர்நாற்றம் வீசுகின்றன.

இதனை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையினருக்கு மக்கள் கூறுகின்றபோதிலும் அவை அப்புறப்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. இதனால் அவ்வாறு உயிரிழக்கும் கால்நடைகளை தீயிட்டு எரித்து துர்நாற்றம் வராமல் தடுத்து வருகின்றனர் பிரதேச மக்கள்.

கடந்த முதலாம் திகதி ஒரே நேரத்தில் மிருசுவில் ரயில் நிலையத்துக்கு முன்பாக மாடும் நாயும் ரயிலினால் மோதுண்டு உயிரிழந்தன. அவற்றின் சடலங்கள் ரயில் பாதையோரம் காணப்படுகின்றபோதும் அவை இன்னமும் அங்கிருந்து அகற் றப்படவில்லை.

இது தொடர்பாக பிரதேச சபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, கால்நடைகள் ரயில்களால் மோதுண்டு சாவடைந்து காணப்படும் வேளைகளில் பொதுமக்கள் தமக்கு அறிவிப்பதில்லையெனவும், அறிவிக்கும் பட்சத்தில் சபை ஊழியர்கள் மூலம் அவற்றை அப்புறப் படுத்திக் கொடிகாமம் பகுதியில்தாம் புதைப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# சுன்னாகம் தபாலகம் அமைக்க கிடைக்கப்பெற்ற நிதி போதாது

## தபால் அமைச்சரிடம் மேலும் நிதியுதவி கோரப்படும் என்கிறார் சித்தார்த்தன் எம்.பி

யாழ்ப்பாணம், ஜூலை 9

எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள நிதி சுன்னாகம் தபாலகத்தை முழுமையாக அமைப்பதற்குப் போதாமல் உள்ளது. அதனை முழுமையாக அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு தபால்மா அதிபரை யும், தபால் அமைச்சரையும் சந்தித்து வலியுறுத்தவுள்ளேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்.

சுன்னாகத்தில் புதிய தபாலகம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே இவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

சுன்னாகம் தபாலகம் 100 வருட காலமாக வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருவதைச் சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையினர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்தனர். எனினும் எமது தேவையை உணர்ந்து தற்போது 80 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய கட்டடத்தை அமைக்கும்போது அது எல்லோருக்கும் வசதியாக இருக்கவேண்டும். குறிப்பாக வயோதிபருக்கும் வசதியானதாக அதனை அமைப்பது முக்கியமாகும்-என்றார்.

வீடு வீடாகச் சென்று ஒவ்வொருவருடமும் சேர்த்த பணத்தில் 2 பரப்பு காணியும் கனடா சுன்னாகம் ஒன்றியம் அனுப்பிய பணத்தில் வாங்கிய இரண்டு பரப்புக் காணியுமாக நான்கு பரப்புக் காணி தபால் நிலையம் அமைப்பதற்குத் தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்பட் டுள்ளது. புதிய கட்டடத்துக்கு ஓகஸ்ட் மாதத்தில் அடிக்கல் நடுவதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது எனக் கலந்துரையாட லில் கூறப்பட்டது. தபாலகத் தினத்தன்று புதிய தபால் தலை ஒன்றை வெளியிடவும் ஆவன செய்ய வேண்டும் என்றும் அங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையின் தலைவர் சி.குமரவேல், வடபிரதேச பிரதித் தபால்மா அதிபர் என்.இரத்தினசிங்கம், சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையின் செயலாளர் சபா.புஸ்பநாதன் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-ரி)

# கட்டாக்காலி நாய்கள் பிடிப்பதற்குப் பயிற்சி

யாழ்ப்பாணம் ஜூலை 9

யாழ். மாவட்டத்தில் மீண்டும் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படவுள்ளன. இதற்கென மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சிச் சபைகளைச் சேர்ந்த 50 தொழிலாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் தொழிலாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக மாகாண கால்நடைகள் பணிப்பாளரைக் கோரியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகவிருந்த காலத்தில் மகிந்தோதய திட்டத்தின் கீழ் கட் டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால் யாழ். குடாநாட்டில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. படை முகாம்களில் வளர்க்கப்பட்ட நாய்களும் இப்போது கைவிடப்பட்ட நிலையில் கட்டாக்காலிகளாக மாறி வீதிகளில் வலம் வருகின்றன.

இதனால் மாதாந்தம் குடாநாட்டில் நூற்றுக்கணக்கானோர் கட்டாக்காலி நாய்களால் கடியுண்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கட்டாக்காலி நாய்களால் கடியுண்டோருக்குப் பயன்படுத்தும் மருந்துகளின் பெறுமதியும் அதிகம். கட்டாக்காலி நாய்களால் கடியுண்டோருக்குக் காயங்களின் தன்மையைப் பொறுத்துத் தடுப்பூசி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன என்று வைத்தியசாலைத் தகவல்களும் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் ... பிடிப்பதற்கு ... ராட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (த-9)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சேதுராசா (சேதுமாமா)



சங்கானை, தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சேதுராசா (சேதுமாமா) 07.07.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும்,சிவகுமார், தவமலர், சசிக்குமார், சிவகௌரி, சிவதர்சினி, நாகசுலோசனா ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுசா, பகீரதன், சயந்தி, உதயசூரியன், லவகுசன், பிரபா ஆகியோரின் அன்பு மாமனாரும், அட்சயா, அஸ்வினி, அங்கவி,யுவானி, மாயா, அஜய், அபிசன், மோனுஷன், மிதுன், பகலவன், கோகிலன், லக்சன், சுவஸ்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 8 மணியளவில் தகனக்கிரியைக்காக விளாவெளி (விளான்) இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை.

(J/2760)
(11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் திணைக்கள அலுவலர்களாக தமிழரை இணைக்க விசேட நடவடிக்கை

## யாழ். வந்த தொழில் அமைச்சர் செனிவிரத்ன உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 9

தொழில் திணைக்களத்தில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் தமிழ்மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவேயுள்ளது. தமிழர்களைத் தொழில் உத்தியோகத்தர்களாகச் சேர்த்துக்கொள்ளும் பொதுப் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளோம். இதன் மூலம் 46 தமிழ் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளமுடியும். அது முடியாமல் போனால் தமிழர்கள் 23 பேரை விசேட பரீட்சை மூலம் இணைத்துக் கொள்வோம்.



இவ்வாறு தெரிவித்தார் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனிவிரத்ன. யாழ். மாவட்டத் தொழில் அலுவலகத்தின் புதிய கட்டடம் உத்தியோகபூர்வமாக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார் அமைச்சர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

46 தமிழ் உத்தியோகத்தர்களுக்குரிய வெற்றிடங்கள் காணப் படுகின்றபோதும் தற்போதுள்ள தொழில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கும் மேலதிகமாகவும் இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவையின் அனுமதியைக் கோரியுள்ளோம்.

இதன் மூலம் வடக்கு-கிழக்கில் உள்ள தொழில் அலுவலர்களின் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ள வாய்ப்பு உள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களுக்கும் உரிய ஒரு தொழிற் திணைக்களமாக இது உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த 5 மாவட்டங்களுக்கும் உரிய பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகமும், யாழ். மாவட்ட அலுவலகமும், வடபிராந்திய தொழிற்சாலைப் பரிசோதகர் பொறியியலாளர் அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களைவிட யாழ்ப்பாணத்தில் முழுமையான வசதிகளை கொண்டதாக இந்தக் கட்டடம் அமைந்துள்ளது.

நாட்டிலுள்ள 85 லட்சம் தொழிலாளர்களின் நன்மை கருதி அவர்களின் தேவைகளைப் முழுமை செய்வதற்காகத் தொழில் அலுவலகங்களைத் திறந்து வைத்துள்ளோம். அந்த 85 லட்சம் தொழிலாளர்களும்தான் எமது நாட்டின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு உதவி செய்கிறார்கள். அவர்களின் தோளில்தான் எமது பொருளாதாரம் சுமத்தப்பட்டுள்ளது.

தொழிலாளர் உரிமை பற்றி பேசும்போது இன, மத வேறுபாடு இல்லை. அனைவருக்கும் உரிமைகள் சமமானவை. இலங்கை மக்களின் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்புரி உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே நாம் செயற்படுகிறோம்.

வடபகுதியில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இங்கு தெரிவித்தார். அவர் குறிப்பிட்டதைப் போலவே காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஒரு முக்கியமான தொழிற்சாலையாக விளங்குகின்றது. அதேபோன்று வடக்குப் பிரதேசத்தில் மிக முக்கியமான தொழிற்சாலைகள் பல இருந்தன. ஆனால் கடந்த கால அரசியல் நிலைகளால் அவை அழிந்துபோய் உள்ளன. இப்பொழுது அரசு அவற்றைப் சீரமைத்து புதிய தொழில்நுட்பங்களின் ஊடாக தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்து 250 தொழில் நிறுவனங்கள் உள்ளன. 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாடாகவே இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதிக்கு 100 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. கலந்துரையாடல் மண்டபம் இங்கு இல்லை. எதிர்காலத்தில் அதையும் அமைத்துக் கொடுக்கவுள்ளோம்.

உலக சந்தையில் ஏற்றுமதியின் பெறுமதி வீழ்ந்தமையால் எமது நாட்டின் ஏற்றுமதி வீதம் குறைவடைந்துள்ளது. எனவேதான் அதன் வருமானத்தை எதிர் பாராமல் தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னேறவேண்டும். தொழில் வாய்ப்பு இல்லாதவர்களுக்கு தொழில் வழங்குவதற்குரிய தொழிற்சாலைகளை உருவாக்கக் கூடிய வளம் எமது நாட்டில் உள்ளது.

எமது நாட்டில் மின்சார வசதி எல்லா இடங்களிலும் உள்ளது. ஆகையால் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான வசதி எம்மிடம் உள்ளது. இதன் மூலம் தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியும். தொழிலாளர்களின் நலன்புரி உரிமைகளைப் பாதுகாத்தல், தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படும்போது, அவர்களின் ஊதியத்தில் பிரச்சினை ஏற்படும்போது அவற்றைத் தீர்த்து வைப்பது என்பன தொழிற்றுறை அமைச்சின் பொறுப்பாகும்.

அனைத்துத் தனியார் தொழில் நிறுவனங்களுக்கும் 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். தனியார் தொழிலாளியின் அடிப்படைச் சம்பளம் பத்தாயிரமாக இருப்பதோடு தற்பொழுது 2 ஆயிரத்து 500 அதிகரித்து அவர்களின் அடிப்படைச் சம்பளமாக 12 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவேண்டும். தனியார் துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வாழ்க்கை மட்டத்தை உயர்த்துவதே தொழிற் திணைக்களத்தின் மிகப் பெரிய பொறுப்பாக உள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, தொழில் மற்றும் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜெயரட்ண, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், இ.அங்கஜன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(த-ரி)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்



மலர்வு 27 . 07 . 1950

உதிர்வு 07 . 07 . 2016

ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும் ஆலடி உடுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் கடந்த (07.07.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் சிவகணேசன்(பிரான்ஸ்), ஜெயகணேசன்(பிரான்ஸ்), ராஜகணேசன்(பிரான்ஸ்), செல்வகணேசன்(பிரான்ஸ்), செந்தில் கணேஷ்(பிரான்ஸ்), ஜெயவதனி(B.A பட்டதாரி யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி, நாகேஸ்வரி, குமாரசாமி, சண்முகராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிறேமினி, சாரதா, யசோதா, சந்யா, ஜலகோபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ்பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுஷன், நிதுஷன், விதுஷன், அக்ஷயா, அஷ்ரிகன், அக்ஷரா, தக்ஷானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் உதயனில் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆலடி, உடுவில் தெற்கு,**
**சுன்னாகம்.**

(J.2753)
(14.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

**தொடர்பு : 077 7351 948**

## ஆலயத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன்.9

தெல்லிப்பழை அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும். காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து மு.ப.10.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார். மறுநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்தோற்சவம் காலை 9 மணிக்கு நடைபெறும். (து)

## நல்லூர் மூத்த விநாயகர் தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 9

நல்லூர் மூத்த விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினரின் செயற்பாட்டால் வருடாவருடம் இடம்பெயரும் நிலை

## பிள்ளையார்குளத்தின் அணைக்கட்டைப் படையினர் வெட்டியுள்ளதாக முறிகண்டி வசந்தநகர் மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜுலை 9
மக்களுக்காகக் கட்டப்பட்ட முறிகண்டிப் பிள்ளையார் குளத்தின் அணைக்கட்டை, தமது முகாம் நலன் கருதி இராணுவத்தினர் வெட்டிவிட்டுள்ளமையினால் வருடாவருடம் தாம் இடம்பெயரவேண்டிய அவலத்துக்கு உள்ளாகின்றனர் என்று முறிகண்டி வசந்த நகர் வாழ் மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கவேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

அவர்கள் தெரிவித்ததாவது:
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள முறிகண்டி பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் குளம் அமைந்துள்ளது.

இந்தக் குளத்தையும் சேர்த்து அபகரித்துள்ள இராணுவம் குளத்தின் நடுவே தமது முகாமுக்கான பாதையையும் அமைத்துள்ளது. மாரி காலங்களில் குளத்து நீர், இராணுவத்தினர் தமது பாவனைக்காக அமைத்துள்ள வீதியை மேவி முகாமுக்குள் புகுகின்றது. அதனைத் தடுப்பதற்காகக் குளத்தின் அணையை உடைத்து நீரை எமது வாழ்விடங்களை நோக்கி வெளியேற்றுகின்றனர். இவ்வாறு வெளியேற்றும் நீரே வருடாவருடம் எம்மை இடம் பெயர வைக்கின்றது. எமது பிரதேசத்தில் முன்னைய காலங்களிலும் நீர் வழிந்தோடுகின்றபோதும் இவ்வாறு அதிகளவான வெள்ள நீர் தேங்குவதில்லை. அது பற்றி ஆராய முற்பட்டபோதே இராணுவத்தினரின் குள உடைப்புக் காரணமாகவே இப்படி நடக்கிறது என்பது தெரிய வந்தது. அதுமட்டுமன்றி இந்தக் குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு இருமுறை நிதி கிடைத்தபோதிலும், புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவிடாது படையினரே தடுக்கின்றனர் – என்றனர்.

> இந்தக் குளத் தைப் புனரமைப்புச் செய்வதற்கு இருமுறை நிதி கிடைத்த போதிலும், புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவிடாது படையினரே தடுக்கின்றனர்

"மாவட்டத்தில் நான் கடமையைப் பொறுப்பேற்ற காலம் முதல் இந்த விடயம் எனது கவனத்துக்கு கொண்டுவரப்படவில்லை. இருப்பினும் தற்போது அது சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால் இது தொடர்பில் உரிய திணைக்களங்களின் ஊடாகத் தகவலைப் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும்" என்று மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (த-101)

### வருடாந்த பொங்கல் திருவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 9
நல்லூர் நாயன்மார்க்கட்டு ஸ்ரீ வராகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 8 தினங்கள் இடம்பெறும்.

தினமும் மாலை 6 மணிக்கு பூசை வழிபாடுகள் இடம்பெற்று இறுதித் திருவிழா மற்றும் விசேட அபிசேகப் பூசைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு நடை பெறும். அன்றைய தினம் பகல் விசேட அன்னதானமும், மடை பரவுதலும் இடம்பெறும். (த-ஐ)

### காப்புறுதியின்றி மோ.சைக்கிள் செலுத்தியதால் அபராதம்

காப்புறுதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு 10ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார். (த-107)

### ஆடு கடத்திய இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜுலை 9
ஆடு ஒன்றை, பெட்டி ஒன்றில் மறைத்து வைத்து வல்வெட்டித்துறைப் பகுதிக்கு எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் 2 பேரைக் கைது செய்துள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இருவரும் கெருடாவில் மற்றும் கதிரிப்பாய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், தொண்டமானாறுப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் இருவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஆடு கொண்டு சென்ற குற்றச்சாட்டிலும், திருடப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்திலும் இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாகவும் கைதான இருவரையும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
(த-107)

### ஆனி உத்தரம் நாளை

அளவெட்டி, ஜுலை 9
அளவெட்டி மேற்கு ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தின் ஆனி உத்தரம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு வழமை போல் விசேட அபிசேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். காலை 9 மணிக்குச் சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா எழுந்தருள்வார்.
(த-160)

## சுயவிருப்பில் திருமணம் செய்த மகளை மோசமாகத் தாக்கிய தாய்

சுய விருப்பத்தின்பேரில் திருமணம் செய்து கிளிநொச்சியில் வாழ்ந்த குடும்பப் பெண் தென்மராட்சியில் உள்ள தாயாரைப் பார்க்கச் சென்றபோது தாய் அவரை மோசமாகத் தாக்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

பல வருடங்களுக்கு முன்னர் எனது பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக நான் விரும்பியவரைத் திருமணம் செய்து கிளிநொச்சியில் வாழ்ந்து வந்தோம். எனது பிரதேசத்தில் உள்ள எனது காணியில் வீடு கட்டு வதற்கு வீட்டுத் திட்டத்துக்கு விண் ணப்பித்துள்ளோம். எனது அம்மா எனக்கு வீட்டுத்திட்டம் கொடுக்கவேண்டாமெனதடுத்துள்ளாரெனக்கிடைத்த தகவலையடுத்து அது குறித்து அவரிடம் விசாரிக்க அங்கு சென்றேன். இதன்போது அம்மா என்னைத் தாக்கினார் என காயமடைந்த பெண் தெரிவித்தார். அத்துடன் தன்னைத் தாக்கிக் காயப்படுத்திய தாயாருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக தாயாரிடம் விசாரித்தபோது,
காயமடைந்தவர் தனது விருப்பத்தின்பேரில் திருமணம் செய்ததால் நாங்கள் அவரை வீட்டில் சேர்ப்பதில்லை. இருப்பினும் எங்களது காணியில் ஒன்றை மகளுக்கு எழுதிக் கொடுத்துள்ளோம். இந்தக் காணிக்குள் வீட்மைப்புத் திட்டத்துக்கு விண்ணப்பித்தபோது பிரதேசத்தில் நிரந்தர குடியிருப்பாளராக இல்லாத காரணத்தால் வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லையென நினைக்கின்றேன். வீட்டுத் திட்டம் கிடைப்பதை நான் தடுப்பதாக யாரோ கூறியதால் எனது வீட்டுக்கு வந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார் – என்றார். (த-9)

## கண்ட இடங்களில் பயணிகளை ஏற்றிய சாரதிகளுக்குத் தண்டம்

பஸ் தரிப்பிடம் இல்லாத இடங்களில் பயணிகளை ஏற்றி இறக்கிய தனியார் பஸ் சாரதிகள் 3 பேருக்கு யாழ்ப்பாணம் நீதிமன்று 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவினரால் யாழ். நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே தனியார் பஸ் சாரதிகள் 3 பேருக்கும் எதிராக நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஒவ்வொருவரும் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து அவர்கள் ஒவ்வொருவரையும் 10 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு பதில் நீதிவான் ப.அரியநாயகம் உத்தரவிட்டார்.

யாழ்.நகரில் தரிப்பிடம் இல்லாத இடங்களிலும், வீதிகளிலும் அவசியமின்றி பஸ்களை மெதுவாகச் செலுத்திச் செல்வதால் பயணிகள், வாகனங்களில் பயணிப்பவர்கள் கடும் இடையுறுகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதற்கு இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிராத நிலையில், தற்போது 3 பஸ் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4-103)

## 13 வர்த்தகர்களுக்கு நீதிமன்று தண்டம்

### காலாவதியான பொருள்கள் விற்பனை செய்தமைக்காக

யாழ்ப்பாணம், ஜுலை 9
பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டத்தை மீறி காலாவதியான பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் 13பேருக்குத் தலா 1,000 ரூபா அபராதம் விதித்து நேற்றுத் தீர்ப்பளித்தார் மல்லாகம் மாவட்ட மேலதிக நீதிவான் ரீ.கருணாகரன்.

கடந்த வாரம் மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரிகள் திடீர் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதன்போது சண்டிலிப்பாய், உடுவில், மருதனார்மடம் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத் திடீர் நடவடிக்கையின்போது 14 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நேற்றைய வழக்கு விசாரணையின்போது 14 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களில் 13 பேர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் அவர்களுக்குத் தலா 1,000 ரூபா வீதம் அபராதம் விதித்தார். (த-107)

## டெங்கு நுளம்பு பரவும் சூழல்; 2 பேருக்கு தலா 3,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 9
டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த 2 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையச் சுற்றாடல் பிரிவுப் பொலிஸார் நீதிமன்றில் 2 பேருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டபோது குறித்த இருவரும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இருவரையும் எச்சரித்த நீதிவான் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (த-107)

## கஞ்சா கடத்திய இருவரில் ஒருவர் இராணுவ உளவாளி

### மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 9
அச்சுவேலியில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் இராணுவ உளவாளியாகச் செயற்பட்டவர் என்று யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் போதைப் பொருள்கள் கைப்பற்றப்படுகின்றனவே அன்றி அதனுடன் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்படும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றன என மாகாண சபை உறுப்பினர் [illegible] யாழ். மாவட்ட சிவில் [illegible] கூட்டத்தில் நேற்றுச் சுட்டிக்காட்டியிருந்தார். இதற்குப் பதிலளித்து உரையாற்றும்போதே மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த இரு வாரங்களில் மட்டும் இரு வேறு சம்பவங்களில் 140 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இரகசிய விசாரணைகள் தொடர்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். (த-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிவெட்டிப் படுகொலை விசாரணைகள் இடமாற்றம்

## இது திட்டமிடப்பட்ட செயற்பாடு என்று மூத்த சட்டத்தரணி ரத்னவேல் கண்டனம்

கொழும்பு, ஜூலை 9

திருகோணமலை குமாரபுரம் கிளிவெட்டி கிராமத்தில் 1996 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் படுகொலை வழக்கு விசாரணை அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றப்பட்டமை திட்டமிடப்பட்ட செயற்பாடு என்று மனித உரிமைச் செயற்பாட்டாளரும், மூத்த சட்டத்தரணியுமான கே.எஸ். ரத்னவேல் தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணை அநுராதபுரம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

> "1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி இராணுவத்தினரால் 14 சிறுவர்கள் உள்ளிட்ட 24 பேர் படுகொலை செய்யப்பட்ட தோடு, சம்பவத்தில் 25 பேர் காயமடைந்தனர்"

இந்த விசாரணையில் நேற்று முன்தினம் 11 பேர் சாட்சியமளித்தனர். சம்பவத்தால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் வெளிநாட்டிலிருந்து வந்து சாட்சியமளித்தார். 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி இராணுவத்தினரால் 14 சிறுவர்கள் உள்ளிட்ட 24 பேர் படுகொலை செய்யப்பட்டனர். சம்பவத்தில் 25 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படும் வழக்கே அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகள் திருகோணமலை நீதிமன்றத்திலேயே இடம்பெற்று வந்தது. வழக்கு அங்கு இடம்பெறும் பட்சத்தில் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கு இராணுவத்தினர் முகம் கொடுக்கவேண்டும் எனக் கருதிக் குறித்த வழக்கு விசாரணைகள் அநுராதபுரம் நீதிமன்றத்தில் இடம்பெறுகின்றது என்று சட்டத்தரணி ரத்னவேல் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை 30இற்கும் அதிகமானவர்கள் நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார். (த-4)

## மசாஜ் நிலையம் சென்றவர் சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூலை 9

கண்டி கடுகஸ்தோட்டப் பிரதேசத்திலுள்ள ஆயுர்வேத மசாஜ் நிலையமொன்றுக்குச் சென்றவர் அங்கிருந்த கழிப்பறையொன்றில் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்குறன பிரதேசத்தில் வசித்து வரும் 64 வயதுடைய வியாபாரியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த மசாஜ் நிலையத்திலுள்ள கழிப்பறைக்குச் சென்ற குறித்த நபர் வெகுநேரமாகியும் திரும்பி வராததால் பணியாளர் ஒருவர் கழிப்பறைக்குச் சென்று பார்த்தபோதே அவர் சடலமாகக் காணப்பட்டார் என்று கூறப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் கடுகஸ்தோட்டப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## இடர்களால் பாதிப்புற்ற மக்களுக்கு கொடுப்பனவு வழங்கும் பணி முழுமை

### நாடாளுமன்றில் கூறினார் பிரதமர்



கொழும்பு, ஜூலை 9

வெள்ளம், மண்சரிவு மற்றும் சலாவ இராணுவ ஆயுதக் களஞ்சிய வெடிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவுகள் அனைத்தும் வழங்கப்பட்டதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் அவர்களைக் குடியேற்றுவதற்கான மாற்றுக் காணிகளை அடையாளம்காணும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது பிரதமரிடம் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பிய கேள்விக்குப் பிரதமர் பதிலளித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்துக்கு 109 மில்லியன் ரூபாவும், கம்பஹா மாவட்டத்துக்கு 152 மில்லியன் ரூபாவும், புத்தளம் மாவட்டத்துக்கு 9 மில்லியன் ரூபாவும், கேகாலை மாவட்டத்துக்கு 20 மில்லியன் ரூபாவும், இரத்தினபுரி மாவட்டத்துக்கு 4 மில்லியன் ரூபாவும், களுத்துறை மாவட்டத்துக்கு 6 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்டச் செயலர்களால் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுத் தமது வீடுகளிலிருந்து வெளியேறியுள்ள மக்களுக்குத் தனியார் பெருந்தோட்ட நிறுவனங்களிடம் மாற்று இடங்களைப் பெற்று வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

சலாவ இராணுவ முகாம் ஆயுதக் களஞ்சிய வெடிப்புச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட 276 வீடுகள் மற்றும் 50 வர்த்தக நிலையங்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவை வழங்குவதற்காகக் கொழும்பு மாவட்டச் செயலருக்கு 18 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது - என்றார். (த-4)

## புலம்பெயர்ந்த கல்விமான்களை நாட்டுக்குள் அழைக்கவேண்டும்

### சபையில் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 9

இலங்கையில் கல்வி கற்றுப் புலம்பெயர் நாடுகளில் வாழும் கல்விமான்களை, விஞ்ஞானிகளை தாயகத்துக்கு அழைக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கைத் தேசிய ஆராய்ச்சிப் பேரவைச் சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இரண்டாம் உலகப் போரின் போது அணுகுண்டு வீசப்பட்டு, நிர்மூலமாக்கப்பட்ட ஜப்பான் இன்று ஆசியாவில் மேற்குலக நாடுகளுடன் போட்டி போடக் கூடிய விதத்தில் தலை நிமிர்ந்தமைக்கு அறிவியல் ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் முன்னேறியமையே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலத்தில் நாடு தவறான பாதையில் பயணித்தமையினால் பெறுமதிமிக்க மனித வளங்களை இழந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-4)

## ஓட்டோ விபத்தில் உயிரிழக்கும் சாரதி, பயணிகளுக்கு இழப்பீடு

### நடவடிக்கை ஆரம்பம் என்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி



கொழும்பு, ஜூலை 9

ஓட்டோ விபத்தின்போது உயிரிழக்கும் ஓட்டோச் சாரதிகளின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக 5 இலட்சம் ரூபாவும், பயணிகளுக்குத் தலா ஒவ்வொரு இலட்சம் ரூபாவும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகப் போக்குவரத்துப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த வருடம் இதுவரை ஓட்டோ விபத்துக்களில் 67 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்துக்களில் ஓட்டோச் சாரதிகளை விட, அதில் பயணிக்கும் பயணிகளே அதிகளவு உயிரிழக்கின்றனர். இந்த நிலையில் முதற்கட்டமாக மேல் மாகாண சபையுடன் இணைந்து இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. தற்போது மேல் மாகாணத்திலுள்ள ஓட்டோக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களின் சாரதி விபத்தில் உயிரிழந்தால் ஐந்து இலட்சம் ரூபாவும், ஓட்டோவில் பயணிக்கும் பயணிகள் உயிரிழந்தால் மூன்று பயணிகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாவும் வழங்கப்படும். இந்தத் திட்டத்தை அடுத்த மாதம் முதல் செயற்படுத்த எதிர்பார்த்துள்ளோம்-என்றார். (த-4)

## அதிகரித்த சம்பளம் உடன் வழங்கப்படும்

### தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழில் அமைச்சர் உறுதியளிப்பு

கொழும்பு, ஜூலை 9

தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ரூபா 2 ஆயிரத்து 500 சம்பள உயர்வை உடனடியாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தொழில் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கு அனைத்து முயற்சிகளையும் தொழில் அமைச்சு முன்னெடுக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவினால் சபையில் எழுப்பப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் ரூபா 2 ஆயிரத்து 500 சம்பள உயர்வு தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் செனவிரட்ன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தோட்டத் தொழிலாளர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட ரூபா 2 ஆயிரத்து 500 சம்பள உயர்வைப் பெரும்பாலான கம்பனிகள் இதுவரை வழங்கவில்லை. இது தொடர்பில் பிரதமர் தலைமையிலான பொருளாதார அலுவல்கள் தொடர்பான முகாமைத்துவக் குழுவிலும் கலந்துரையாடப்பட்டது. பெருந்தோட்டக் கம்பனிகளுடனும் கலந்துரையாடப்பட்டது.

தற்போது பெருந்தோட்டத்துறையின் தற்காலிக வீழ்ச்சியைத் தொடர்ந்து வங்கிகள் ஊடாகக் கம்பனிகளுக்கு கடன்களை வழங்கி ரூபா 2 ஆயிரத்து 500 சம்பள உயர்வைத் தொழிலாளர்களுக்கு வழங்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். பெண் ஊழியர்களுக்கான நலன்புரி வசதிகள், சுகாதார சேவைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்திக் குறைபாடுகள் நீக்கப்படும்-என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜுதீனின் நண்பர் தீவிர விசாரணையில்

## அவரது கையடக்கத் தொலைபேசி அழைப்புகளை துருவும் புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, ஜூலை 9
பிரபல றக்பி வீரர் வஸீம் தாஜுதீன் படுகொலை செய்யப்படுவதற்கு அண்மித்த இரவில் அவருடன் இருந்த இரு நண்பர்களில் ஒருவருக்கு உள் வந்த, வெளிச் சென்ற இரு சந்தேகத்துக்குரிய அழைப்புக்கள் குறித்து தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிவித்தது.

வஸீம் தாஜுதீனுடன் குறித்த இரு நண்பர்களும் மது அருந்தினர் எனவும் அதில் ஒரு நண்பருக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்ததாகவும், அதனைத் தொடர்ந்து நண்பர்கள் இருவரையும் வஸீம் தாஜுதீன் தனது காரில் ஏற்றிக்கொண்டு அவரவர் வீடுகளுக்குக் கொண்டு போய் விடச் சென்றபோது காருக்குள் வைத்து குறித்த நண்பர் தனது தொலைபேசியில் இருந்து ஓர் இலக்கத்துக்கு அழைப்பொன்றை ஏற்படுத்தினார் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது.

இது கொலை தொடர்பில் பெரும் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ள நிலையில் அது குறித்து தீவிர விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசேகர, கொழும்பு மேலதிக நீதிவான் நிஸாந்த பீரிஸ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்த வஸீம் தாஜுதீன் படுகொலை விவகாரம் தொடர்பிலான மேலதிக விசாரணை அறிக்கையிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

வஸீம் தாஜுதீன் படுகொலை விவகாரம் தொடர்பிலான வழக்குத் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க ஆகியோர் தனித்தனியாகச் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

முதலாவது சந்தேகநபர் சார்பில் மூத்த சட்டத்தரணி அஜித் பத்திரணவும், 2ஆவது சந்தேக நபர் சார்பில் ஜனாதிபதி சட்டத் தரணி அணில் சில்வாவின் ஆலோசனைக்கு அமைய மூத்த சட்டத்தரணி சந்திக பீரிஸும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

விசாரணையாளர்களான குற்றப் புலனாய்வுப் பிரிவு சார்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசேகர, மனிதப் படுகொலைகள் தொடர்பிலான விசாரணைப் பிரிவின் சார்ஜன்ட் ரத்னபிரிய ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். அவர்களுடன் மூத்த அரச சட்டவாதி டிலான் ரத்நாயக்கவும் மன்றில் முன்னிலையானார்.

வழக்கு விசாரணைகள் ஆரம்பமானபோது, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசேகர கடந்த 14 நாள்களாக மேற்கொண்ட விசாரணையின் மேலதிக அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பித்தார். குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

வஸீம் தாஜுதீனின் கொலை இடம்பெற்ற காலப்பகுதிக்குரியது என நம்பப்படும் சில சி.சி.ரி.வி. காட்சிப் பதிவுகள் பொலிஸ் கண்காணிப்பு பிரிவின் ஊடாகப் பெறப்பட்டன. அவற்றைக் கனடாவின் தொழில்நுட்ப ஆய்வு கூடமொன்றுக்கு அனுப்புவதற்கான முயற்சிகள்இறுதிக் கட்டத்தில் உள்ளன.

குறித்த ஆய்வு நிலையத்துக்கு அந்த சி.சி.ரி.வி. காட்சிகளை அனுப்புவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன் அதற்கான செலவுக்கு நிதியும் கிடைத்துள்ளது. எனவே அதனை மிக விரைவாக கனடாவின் குறித்த நிறுவனத்துக்கு அனுப்பவுள்ளோம்.

அத்துடன் வஸீம் தாஜுதீன் படுகொலை விவகாரம் தொடர்பில், விசாரணைகளை மூடி மறைத்தாரா என்ற கோணத்தில் முன்னாள் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு (சி.சி.டி) பணிப்பாளரான அப்போதைய மூத்த பொலிஸ் அத்தியட்சகரும் தற்போது பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளவருமான டி.ஆர்.எல். ரணவீரவிடம் நாம் தீவிர விசாரணைகளை நடத்தினோம்.

அதில் ஓர் அங்கமாக அவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்து விசாரணை செய்து வாக்கு மூலமும் பதிவு செய்தோம். அவரது வாக்கு மூலத்தில், தான் குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக இருந்த காலப் பகுதியில் கடந்த 2012.05.18ஆம் திகதியன்று வேறு ஒரு கடமையின் நிமித்தம் மேல் மாகாணத்துக்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த அனுர சேனநாயக்கவைச் சந்திக்கச் சென்றதாகவும், இதன்போது பல முக்கிய உயர் பொலிஸ் அதிகாரிகளும் பெயர் தெரியாத சில பொலிஸ் அதிகாரிகளும் அவரது அலுவலகத்தில் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டிருந்தனர் எனவும் தெரிவித்தார்.

அந்தக் கூட்டமானது வஸீம் தாஜுதீனின் கொலை தொடர்பிலானது எனவும், தான் அவ்விடத்துக்குச் சென்றபோது, அது குறித்த விசாரணையில் தன்னைக் குறுக்கிடவேண்டாம் எனவும், சி.சி.டி அந்தவிசாரணையில் மூக்கை நுழைக்கவேண்டியதில்லை' எனவும் அனுர சேனநாயக்க கூறினார் எனவும் அவரின் வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அது குறித்த மேலதிக விசாரணைகளை தொடர்கின்றோம்.

கடந்த 2012.05.16 அன்று இரவு, அதாவது வஸீம் தாஜுதீன் கொலை செய்யப்பட முன்னரான இரவுவேளை அவரும் அவரது இரு நண்பர்களும் சேர்ந்து மது அருந்தினர். அவர்களில் ஒரு நண்பருக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. இதனைத் தொடர்ந்து அவர்களின் வீடு நோக்கிச் செல்லும்போது குறித்த உள்வந்த அழைப்பைப் பெற்ற நண்பர் பின்னர் காருக்குள் வைத்து வெளிச் செல்லும் அழைப்பொன்றை ஏற்படுத்தினார். இந்த இரு அழைப்புக்கள் தொடர்பிலும் பெரும் சந்தேகம் உள்ளது. இது குறித்து ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பலரின் வாக்குமூலங்களும் இதற்காக பெறப்பட்டுள்ளன. அது குறித்த தீவிர விசாரணைகளும் தொடர்கின்றன.

எனவே தண்டனைச் சட்டக் கோவையின்படி சந்தேக நபர்கள் மீது குற்றச்சாட்டு உள்ளதால் பிணை வழங்கக்கூடாது - என கோரப்பட்டிருந்தது.

மன்றில் வாதங்களை முன்வைத்த மூத்த அரச சட்டவாதி டிலான் ரத்நாயக்க, இந்த விவகாரம் குறித்து மிக சூட்சும விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், குற்றச்சாட்டுக்களின் பாரதூரத்தைக் கருத்தில் கொண்டு பிணைச் சட்டத்தை ஆராய்ந்து அதன் கீழ் சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்குவதை மன்று மறுக்க வேண்டும் எனக் கோரினார்.

இதனையடுத்து முதலாவது சந்தேக நபரான பொலிஸ் பரிசோதகர் சுமித் சம்பிக்க பெரேரா சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி அஜித் பத்திரண, தனது சேவை பெறுநர் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர் என்ற ரீதியில் அவர் தனது உயர் அதிகாரிகளின் கட்டளைகளையே செயற்படுத்தினார் எனவும், அத னால் அவருக்கு எதிராகக் குற்ற வியல் சட்டத்தின் 296 இன் கீழ் குற்றம் சுமத்துவதா எனச் சட்டமா அதிபர் அறிவிக்க வேண் டும் எனவும் கோரினார்.

இரண்டாவது சந்தேகநபரின் சட்டத்தரணியும் அனுர சேனநாயக்க தொடர்பில் கடந்த தவணையில் முன்வைக்கப்பட்ட வாதங்களைக் கருத்தில் கொண்டு பிணை வழங்கக் கோரினார். இதனையடுத்து நீதிவான் நிஸாந்த பீரிஸ் தனது கட்டளைகளைத் திறந்த மன்றில் அறிவித்தார்.

முதலாவது சந்தேகநபரான பொலிஸ் பரிசோதகர் சுமித் சம்பிக்க பெரேராவின் பிணைக் கோரிக்கையைப் பிணைச் சட்டத்தின் 13ஆவது அத்தியாயத்தின் கீழ் ஆராய்ந்து அதன்படி அவருக்குப் பிணை வழங்கும் அதிகாரம் தமக்கு இல்லை என அறிவித்தார் நீதிவான் நிஸாந்த பீரிஸ். இதற்காக மேல் நீதிமன்றை நாடுமாறும் ஆலோசனையும் வழங்கினார்.

அத்துடன் 2ஆவது சந்தேக நபருக்கு நேற்றுமுன்தினம் பிணை வழங்க மறுத்த நீதிவான், சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை கிடைத்ததும் முதலில் கிடைக்கப் பெற்ற மருத்துவ அறிக்கை, அனுரவின் பிரத்தியேக மருத்துவரின் அறிக்கை ஆகியவற்றை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தார்.

சந்தேக நபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் நிஸாந்த பீரிஸ், வழக்கை மீளவும் இம்மாதம் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்தார். (த-4)

> வஸீம் தாஜுதீன் படுகொலை விவகாரம் தொடர்பிலான வழக்குத் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ள நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா, மேல் மாகாணத்துக் குப் பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க ஆகி யோர் தனித்தனியாக சிறைச்சாலை அதிகாரி களால் நீதிமன்றில்

## சஜின் வாஸுக்கு நேற்றுப் பிணை

கொழும்பு, ஜூலை 9
விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி 61 கோடி ரூபா கப்பம் கோரிய குற்றச்சாட்டில் அவர் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அவர் மீதான வழக்கு கொழும்பு தலைமை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போது அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரப்பட்டது. இதனைப் பரிசீலித்த நீதிமன்று நிபந்தனையுடன் பிணை வழங்கியது.

அவர் 5 லட்சம் ரொக்கப் பிணையிலும், தலா 50 லட்சம் ரூபா பெறுமதியான 4 ஆள்களின் பிணையிலும் விடுவிக்கப்பட்டார். வாராந்தம் வெள்ளிக் கிழமைகளில் அவர் நீதிமன்றில் கையெழுத்திடவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. அவரது வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். (த-4)

## சலாவ மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 9
சலாவ ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தால் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்கள் நேற்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு - அவிசாவளை முதன்மை வீதியை இடைமறித்தே அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

வெடிப்புச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதாந்தம் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் நட்டஈடும், நிவாரணமும் வழங்கப்படும் என்று அரசு உறுதியளித்திருந்தது.

இவ்வாறு அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி தங்களுக்கு நிவாரணமும், 50 ஆயிரம் ரூபா பணமும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தே மக்கள் வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-4)

## வற் வரி குறித்து விழிப்புணர்வுக்கு 1,100 அதிகாரிகள்

வற் வரி தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மேலும் ஆயிரத்து 100 அரச அதிகாரிகள் வேலைக்கு நியமிக்கப்படவுள்ளனர் என அமைச்சரவை பேச்சாளர்களான ராஜித சேனாரத்ன மற்றும் கயந்த கருணாதிலக தெரிவித்தனர்.

வற்வரி தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். இதற்காக ஜனாதிப்தி மற்றும் பிரதமர் தலைமையில் செயலணி அமைக்கப்படவுள்ளது. நுகர்வோர் அதிகார சபையின் கீழ் இந்தச் செயலணி அமையவுள்ளது. இதற்காகத் தற்போது கடமையிலுள்ள அதிகாரிகளை விட மேலும் 1,100 அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (த-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஆட்சியாளர்களை விடவும் மேலாதிக்கம் இராணுவத்துக்கா...?

அடியடா, பிடியடா என்ற வகை சார்ந்த விதத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள்குடியமர்வை, ஒரு மாத காலத்துக்குள்--ஒகஸ்ட் மாத நடுப்பகுதிக்கு முன்னதாக--முழுமையாக முடிக்குமாறு, நாட்டின் தலைவர்-ஜனாதிபதி-யாழ்.மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அந்த நல்ல காரியத்தைச் செயற்படுத்தும் விதத்தில், அரசு செய்யும் அந்தப் புண்ணியத்தை, தப்புத் தவறு இன்றி ஆற்றவேண்டியது தானே என்று, பாதிப்புற்ற மக்கள் மட்டுமன்றி ஏனையோரும், உங்களுக்குள்ளே கருதுவீர்கள்--நினைப்பீர்கள்.

ஆனால், ஒரு மாத காலத்தில் செய்துவிட முடியுமா என்று எமது மாவட்டத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பாவம் திணறப்போகிறார்கள்!

உத்தியோகரீதியான புள்ளிவிவரங்களின் பிரகாரம், யாழ்ப்பாண மாவட்டத்தில், 31,000 மக்கள்-9,870 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்-மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்கள். அதாவது 31,000 மக்கள் அவர்களது சொந்த இடங்களில் வசிக்க அனுமதிக்கப்பட வேண்டியவர்கள்.

மக்களின் சொந்தக் காணிகளை துரிதமாக மீளக் கையளிக்குமாறு நாட்டின் அதியுயர் தலைவர் உத்தரவு இட்ட பின்னரும், தடங்கலும் தாமதமும் ஏன் என்று பாதிப்புற்றவர்கள், கருவாடாய்க் காய்கிறார்களே. இதற்குப் பெயர் தானா நல்லாட்சி?

வலிகாமம் வடக்கில், மயிலிட்டி, தையிட்டியை உள்ளடக்கிய 1,500 ஏக்கர்களில், 800 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கிய பிரதேசத்தை விடுவிப்பதற்குப் படைத் தரப்பினர் இணக்கம் தெரிவிக்காததால், அமைச்சரவைப் பத்திரத்தை நகர்த்த முடியாமல் போனதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய பின்னணியில்--

இராணுவத்தின் பின்னடிப்பால் மீள்குடியமர்வை, ஜனாதிபதி உத்தரவிட்டவாறு, அவர் குறித்தவாறு நிறைவேற்ற இயலாது, முடியாது என்ற நிலை உயர்ந்து நிற்கிறது!

மறுபக்கத்தில் நோக்கின், ஜனநாயக நாடுகள் எல்லாவற்றிலுமே, சிவில் அதிகாரிகளுக்குக் கணிசமான அதிகாரங்கள் குறித்து ஒதுக்கப்பட்டுள்ளன.


மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இடும் பணிகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள் இந்தச் சிவில் அதிகாரிகள்.

ஆனால், இராணுவத்தின் வடிவத்தில் அந்த அதிகாரங்கள் பறித்து எடுக்கப்படுமாயின், இந்த நாட்டில் இராணுவத்தின் அதிகாரமே, மேலுயர்ந்து நிற்கின்றது என்று சந்தேகம் உதிக்கின்றது!

கூட்டிக் கழித்து, பெருக்கிப் பிரித்துப் பார்த்தால், நாட்டின் இராணுவத்தரப்பு, அரசாட்சியாளர்களை விடவும், சகல விடயங்கள், விவகாரங்களில் மேலாதிக்கம் கொண்ட நிலையே கண்முன் விரிகிறது!

# ஒவ்வொரு பெற்றோருக்கும்!

மருத்துவர்
சி. யமுனாநந்தா.



தமிழ் மொழியின் சிறப்பை உளம், உள்ளம், மனம், அகம் என்ற சொற்களின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. இவை அனைத்தையும் குறிக்க ஆங்கிலத்தில் மைன்ட் (Mind) என்ற சொல்லே உள்ளது. மைன்ட் என்ற சொல்லும் மனது என்ற தமிழ்ச் சொல்லின் மருவிய வடிவமேயாகும். மனம் எனும்போது ஒருவரின் எண்ணங்களின் பிரதிபலிப்பை குறிப்பிடுவதாக அமையும். உள்ளம் என்பது மனதுக்கும் அப்பால் ஒருவரின் எண்ணங்கள் உணர்வுகள் காரணகாரிய சிந்தனைகளை உள்ளடக்கியது. உளம் என்பது எண்ணங்களையும் உணர்வுகளையும் உள்ளடக்கியது. அகம் என்பது வெளிப் பார்வையில் தெரியும் உள்ளத்தைக் குறிக்கும்.

1. அகம
2. உளம்
3. மனம்
4. உள்ளம்

அதாவது உள்ளம் ஆழமானது. அகம், வெளியில் தெரியும் உளம் எனலாம்.

'உள்ளம் பெருங்கோயில்' எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். இந்த உள்ளமே வெவ்வேறு சக்கர நிலைகளில் நின்று பக்குவப் படுகின்றது.

உலகியல் வாழ்வில் உள்ளத்தின் வெளிப்பாடு உளமாகக் காணப் படுகின்றது. இங்கு உள வெளிப்பாடுகளாக எண்ணங்களும் உணர்வுகளும் அமைகின்றன.

ஒருவரின் எண்ணங்களில் ஒழுங்கமைப்புக் காணப்படாவிடின், ஒன்றுடன்ஒன்று தொடர்பற்ற விதத்தில் எண்ணங்கள் உருவாகினால் அந்தநபர் உளப்பிளவை உடையவராகக் கருதப் படல்வேண்டும். இவ்வாறு உளப்பிளவு உடைய மனிதர்களின் எண்ணங்கள் கற்பனை மிகுந்தவையாக இருக்கலாம். சாதாரண உலக நடைமுறைக்கு ஏற்றனவாக அமையாதுவிடலாம். இவ்வாறு பிளவுபட்ட உளம் உடையோர் அந்தப் பிளவுகளுக்கு அப்பால் சிறந்த சிந்தனையாளர்களாகவோ, கணித அறிஞர்களாகவோ, ஆன்மிகவாதிகளாகவோ. ஓவியர்களாகவோ, சட்ட அறிஞர்களாகவோ, உருவாகலாம்.

அதேவேளையில் பிளவுபட்ட உளம் சாதாரண வாழ்வை எதிர் கொள்ளாத சூழலை உளச்சிதைவு நிலையில் பெறும். இதனையே சாதாரணமாக உளநோய் நிலையெனச் சுற்றத்தார் கூறுவர். உளச் சிதைவு நிலையில் உள்ளவர்களே உள நல மருத்துவரிடம் சிகிச்சை பெறும் கட்டாயம் உள்ளது.

ஆனால், உளப்பிளவு நிலையில் ஒருவர் சாதாரண வாழ்வு நடத்தி [illegible] அவர்களது சில சிந்தனைகள் பொது வாழ்வுக்குக் குந்தகமாக அமைந்து விடும்.

பொதுவாக காதல் தொடர்பான தவறான எண்ணம் (Delusion of Love), மனைவி தொடர்பான

> ஒருவரின் எண்ணங்களில் ஒழுங்கமைப்புக் காணப்படாவிடின் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற விதத்தில் எண்ணங்கள் உருவாகினால் அந்த நபர் உளப்பிளவை நிலையை உடைய வராகக் கருதப்படல் வேண்டும்.

ஐயம் என்பவை கொலைகளில் முடிவடைந்துவிடும். பொதுவாகக் கொடூரமான முறையில் பெண்களை கொல்பவர்கள் உளப்பிளவு நிலையிலும் உளச்சிதைவு நிலையிலும் உள்ளவர்களாக அமைவர். உளச் சிதைவு நிலையில் உள்ளவர்கள் இலகுவில் நோயாளிகளாக அடையாளம் காணப் பட்டுவிடுவர். உளப்பிளவு நிலையில் உள்ளவர்களை அடையாளம் காணல் கடினம். இவர்களில் சிலர் கொடூரமான கொலைகளில் தொடர்புபட்ட பின்னரே அடையாளம் காணப்படுவர்.

தமிழகத்தையும், தமிழ் உலகையும் உலுக்கிய சுவாதி கொலையும் ஒருதலைக் காதல் எனும் (Delusion of Love) காதல் தொடர்பான போலி நம்பிக்கையால் ஏற்பட்டது. இது பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் அறிந்திருக்க வேண்டிய செய்தியாகும். அதாவது பெண் பிள்ளைகளுக்கு உளப்பிளவு உடையவர்களால் ஆபத்து எந்தநேரமும் ஏற்படலாம். எனவே பெண்களின் பாதுகாப்பில் பெற்றோர்கள் உச்ச உசாராக இருப்பது நல்லது. இவ்வாறு நடக்கும் நிகழ்தகவு குறைவாயினும், ஒவ்வொரு பெற்றோரும் விழிப்புடன் இருப்பது நல்லது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்குச் சவால் மகிந்தவின் எதிரணி

சேரலாதன்

முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தற்போதைய நல்லாட்சி அரசுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் நிழல் அமைச்சரவை ஒன்றை அமைத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் தம்மையே பிரதமராகவும் தமது மகனான நாமல் ராஜபக்சவை வெளிவிவகார அமைச்சராகவும், நியமித்துள்ளார். நிழல் அமைச்சரவையில்கூட குடும்ப ஆட்சியைக் கைவிடுவதற்கு அவர் தயாராக இல்லை என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. அதுமட்டுமல்லாது அவர் திரும்பவும் பதவிக்கு வருவதில் காட்டுகின்ற அக்கறையும் இதன் மூலமாகத் தெரிகின்றது.

மேலும் நல்லாட்சி அரசை வீட்டுக்கு அனுப்பி வைப்பதையே முக்கியமான நோக்கமாகக் கொண்டு ராஜபக்ச அணியினர் தமது வேலைத் திட்டங்களையும் அமைத்து வருகின்றனர். முன்னைய ராஜபக்ச அரசு போரையும், போர் வெற்றியையும் காட்டியே காலத்தை ஓட்டிவந்தது. மக்கள் தமது குறைகளை வெளியில் தெரிவிப்பதற்கான சுதந்திரமும் மகிந்த ஆட்சியில் வழங்கப்படவில்லை. ஆனால் அந்த நிலை தற்போது இல்லை. ஆனால் அரசின் மீதான அழுத்தங்கள் அதிகரித்துச் செல்கின்றன.

முன்னைய ஆட்சிக் காலத்தில் நாட்டின் பொருளாதாரம் பலராலும், பல்வேறு வகையிலும் சூறையாடப்பட்டது. அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் கட்டுக்கடங்காத அளவிலான வெளிநாட்டுக் கடன்கள் வாங்கிக் குவிக்கப்பட்டன. இவற்றை வட்டியுடன் சேர்த்து திருப்பிச் செலுத்துவதற்கு நாட்டின் பெருளாதாரம் இடம்கொடுப்பதாக இல்லை. அன்றாடச் செலவுகளுக்குக்கூட அரசு சிரமப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒன்றுமே செய்யமுடியாததொரு நிலையில், அரசு இறக்குமதிக்கான வரிகளை அதிகரித்தது. பெறுமதிசேர் வரி வீதமும் அதிகரிக்கப்பட்டது. இதனால் அன்றாடப் பாவனைப் பொருள்களின் விலைகள் உயர்வடைந்து விட்டன. மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை ஓட்டிச் செல்வதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இது அரசின் மீது வெறுப்பு அலைகளைத் தோற்றுவித்து வருகின்றது. இதை எதிரணியினர் நன்கு பயன்படுத்திக்கொள்கின்றனர். அடுத்த ஆட்சியைத் தாமே அமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயலாற்றிவரும் மகிந்த அணியினர், சிறு விடயங்களைக்கூடப் பெரிதாக ஊதிப் பெருப்பித்து வருகின்றனர்.

இதற்கொரு உதாரணமாக மத்திய வங்கியின் ஆளுநர் விவகாரத்தைக் கூறமுடியும். அண்மையில் அந்தப் பதவியில் இருந்து அகற்றப்பட்ட அர்ஜுன மகேந்திரன் மீதான குற்றச்சாட்டுக்கள் எதுவும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை. அவருக்குப் பிரதமர் ரணிலின் ஆதரவும் நிறையவே காணப்பட்டது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மகிந்தவின் ஆதரவாளர்கள் இதையே ஒரு காரணமாகக்கொண்டு அர்ஜுன மகேந்திரனைப் பதவியில் இருந்து அகற்றுமாறு அரசுக்குப் பல்வேறு வகையிலும் அழுத்தங்களைக் கொடுக்க ஆரம்பித்து அதில் வெற்றியும்கண்டனர். ஜனாதிபதி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராகவும் உள்ளதால் இந்த விடயத்தில் விட்டுக்கொடுத்து நடக்கவேண்டியதொரு நிலைக்குத் தள்ளப்பட்டார். இதில் பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் கருத்துமுரண்பாடுகள்தோன்றியதாகவும் சொல்லப்பட்டது.

இறுதியில் அர்ஜுன மகேந்திரன் அவரது பதவியிலிருந்து விலக்கப்பட்டார். ஆனால் மற்றொரு தமிழரான இந்திரஜித் குமாரசுவாமி புதிய ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டு பதவிக் கதிரையிலும் அமர்ந்துவிட்டார். ஆனால் அவர் மீதான விமர்சனங்களும் எழத்தொடங்கி விட்டன. இறுதிப் போரின்போது தமிழர்கள் கொத்துக்கொத்தாக அழிக்கப்பட்டமை ஒன்றுமே புதிய விடயமல்ல. ஆனால் அந்த அழிவுகள் தொடர்பாக நீதியான விசாரணை எதுவும் இடம்பெறவில்லை. படையினர் குற்றம் புரிந்தாலும் அவர்களைப் பாதுகாப்பதில் அரசு முனைப்புடன் செயற்படுவது தெளிவாகத் தெரிகின்றது. முன்னைய ஆட்சியின்போது இராணுவத்துக்கு அதிக அதிகாரங்களை வழங்கியதால் நாட்டின் ஆட்சியதிகாரங்களில் அவர்களின் பங்கு பெருமளவில் இருப்பதன் காரணமாகவே தற்போதைய அரசும் இராணுவத்தைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை.

> முன்னைய ஆட்சிக் காலத்தில் நாட்டின் பொருளாதாரம் பலராலும், பல்வேறு வகையிலும் சூறையாடப்பட்டது. அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் கட்டுக்கடங்காத அளவிலான வெளிநாட்டுக் கடன்கள் வாங்கிக் குவிக்கப்பட்டன.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் வைத்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் வெளிநாட்டினரைத் திருப்திப்படுத்துமே தவிர உள்நாட்டில் வரவேற்பைப் பெறாது என்பதுதான் உண்மை. ஏனென்றால் போர்க்குற்றங்களைத் தூண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறியிருப்பதை மகிந்த தரப்பினர் ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால் இறுதிப்போரின்போது அவர்களே படையினருக்குக் கட்டளையிடுகின்ற பொறுப்புக்களில் அமர்ந்திருந்தனர். இதனால் மகிந்த தரப்பின் நெருக்குதல்கள் அரசுக்குத் தொடர்ந்து இருக்குமென்பதைக் கூறத்தேவையில்லை.

வெளிநாடுகள் தற்போதைய அரசின் செயற்பாடுகளைப் பாராட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதிலும், உள்நாட்டில் அவ்வாறில்லை என்பதை ஒத்துக் கொள்ளத்தான்வேண்டும். போர் ஓய்ந்து ஏழு ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள போதிலும் தமிழர் பிரச்சினைகள் தீராத நிலையிலேயே காணப்படுகின்றன. போரினால் இடம்பெயர்ந்த தமிழர்களில் கணிசமானவர்கள் இன்னமும் அகதி வாழ்வே வாழ்கின்றனர். அவர்களது காணிகளைப் படையினர் அடாத்தாக ஆக்கிரமித்து நிற்கின்றனர். இராணுவத்தினருக்கு அந்தக் காணிகளை விடுவிக்கும் எண்ணமில்லை. மக்களின் காணிகளை விடுவிப் பதாக ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலை யிலேயே இன்னமும் உள்ளது. படை யினர் விரும்பாத எதையும் அரசால் நிறைவேற்ற முடியாது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

ஆக, ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற போது, நல்லாட்சி அரசு அனைத்து விடயங்களிலும் சவால்களை எதிர்கொண்டு நிற்பது தெளிவாகத் தெரிகின்றது. அதன் செயற்பாடுகள் அனைத்துக்கும் முட்டுக்கட்டை இடும் வகையில் மகிந்த தரப்பினர் இரும்பு அரணாக எழுந்து நிற்கின்றனர். இந்த நிலையில் நல்லாட்சி அரசு சவால்களை எதிர்கொண்டு வெற்றி காணுமா? அல்லது எதிரணியிடம் மண்டியிடுமா? என்பதற்கான பதிலைக் காலம்தான் சொல்லவேண்டும்.

## கால மாற்றத்துக்கு ஏற்ப நடப்பது தவறல்ல

சைவ மக்கள் ஆலயங்களில் திருநீற்றை எவ்வாறு அணிந்து கொள்வது என்பது பற்றி சைவ அன்பர் என்ற பெயரில் வாசகரொருவர், வாசகர் திருமுகத்தில் எழுதியிருந்தார். அவரது கூற்றுச் சரியானதே. ஆனால் காலப் போக்கில் பல விடயங்கள் மாற்றம் அடைந்துள்ளன. திருநீறு அணிதல், முறையில் முக்குறி இடுதல் அல்லது பரவிப்பூசுதல் என்பவற்றைக் குறிப்பிட இயலும். சாதாரணமாக திருநீற்றை அதிகமாகப் பரவிப்பூசுதல் இன்று மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

தீட்சை பெற்றோர் முக்குறியிடுவர். சிவாச்சாரியார்களின் கையினால் திருநீறு பூசவேண்டும் என்று விரும்பும் அன்பர் பலர். சிவாச்சாரியாரால் மூன்று விரல்களாலும் பலபேருக்கு நீறு பூசுவது கடினமான விடயம். அவ்வாறு விரும்புபவர்களுக்குப் பூசாமல் விடுவது மனக் குறையாக அமையலாம். எனவே கால நேரத்தையும் கருத்தில் கொண்டு அவர்கள் பெருவிரலினால் திருநீற்றை அணிவித்து விடுகிறார்கள். மேலும் பெருவிரலினால் திருநீறைப் பூசக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளதா என்பதையும் யான் அறியேன். ஆனால் பலரும் கிழக்கு அல்லது வடக்கு முகமாக நின்றே பூசுகிறார்கள். திருநீற்றைத் தரிக்காமலே பலர் வாழ்கின்ற இந்தக் காலத்தில் ஏதோ சிறு அடையாளமாகவேனும் திருநீற்றைப் பூசுவது பெருமைப்படவேண்டிய விடயமாகும். அன்பே சிவம் என்ற எமது சைவத்தின் கொள்கைக்கும் இது பிழையானதாகப் படவில்லை. காலமாற்றத்தைக் கருத்தில் கொண்டு இவைகளை ஏற்று நடப்போமாக.

சா. சோமதேவக்குருக்கள்.
அரசகேசரிப் பிள்ளையார் கோயில்
நீர்வேலி.

## பொது நூலகத்தைச் சிறப்புடன் செயற்பட வைப்போம்

ஆரம்ப காலத்தில் பெரியார் மயில்வாகனத்தாரின் நன்கொடை மூலம் நிறுவப்பட்டு, பருத்தித்துறை நகர சபையினால் நிர்வகிக்கப்பட்டு வரும் பொது நூலகத்தின் விரிவாக்கப் பணிகள் சிறப்புற நடந்தேற வேண்டுமென் பது எனது வேணவா. சமீபத்தில் தென்மராட்சி–சாவகச்சேரி பொது நூலகம் இலத்திரனியல் முறைக்கு மாற்றப்பட்டதையிட்டு மகிழ்ச்சி.

யாழ். மாவட்டத்தில் பழம் பெருமையைக் காத்துப் பேணிவரும் இரண்டாவது நகரம் பருத்தித்துறை.

பல கல்விமான்கள் . மருத்துவர்கள், பொறியியல் வல்லுனர்கள், இலக்கிய இலக்கண விற்பனர்கள், தொழில் வல்லுனர்கள் அடங்கலாக வாழ்ந்த, வாழ்ந்து வரும் இடமே வடமராட்சி.

இந்த நிலையில் மேற்படி பொது நூலகம் அபிவிருத்தி அடைவது அவசியம். கூட்டுச் செயற்பாட்டின் தொனியே நூலகம். நகரத்தின் பண்பாடு, கல்வி நூலகச் செயற்பாட்டில்தான் தங்கியுள்ளது. நிதி மூலதனம் அவசியமே. வெறும் வாசிகசாலையாக மட்டும் நடத்தாது மேம்படுத்த வேண்டும். நகர சமூகம் சார்ந்த ஆற்றல், ஆளுமை, திறன் விருத்தி ஆகியவற்றை அடையாளம் கண்டு விருத்தி செய்தலே கடன். பூர்த்தி செய்யப்படாத, கட்டட வேலைகளையும் பூர்த்தி செய்து நவீன இலத்திரனியல் நடைமுறையில் அடக்கமான நூலகமா கத் திகழ உரியன செய்திட மாகாண அரசு அனுசரணை நல்கட்டும்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கத் தேர்தல் விளம்பரத்தில் மண்டேலா

## அவரது குடும்பத்தினர் கடும் எதிர்ப்பு



கேப்ரவுண், ஜூலை 9
தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவரான மண்டேலாவின் குரலை, தென்னாபிரிக்காவின் முக்கிய எதிர்க்கட்சியொன்று தனது தேர்தல் விளம்பரத்துக்குப் பயன் படுத்தியமைக்கு மண்டேலாவின் குடும்பத்தினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

யூ டியூப்பில் பதிவேற்றப்பட்டுள்ள குறித்த விளம்பரத்தில், ஒரு இளம் பெண் ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கு வாக்களிக்கும் நோக்கில் வாக்குச் சாவடிக்குள் நுழைகின்றார். அதன்போது நீதி, அமைதி, வேலை மற்றும் உணவு போன்ற தங்களது தேவைகளுக்கு அழைப்பு விடுக்கும் மண்டேலாவின் குரல் ஒலிக்கிறது. அதனைக் கேட்ட குறித்த இளம் பெண் ஜனநாயகக் கூட்டணிக்கு வாக்களிப்பதாகவே அந்த விளம்பரம் அமைந்துள்ளது.

இந்நிலையில், ஜனநாயகக் கூட்டணியானது தமது தாத்தாவின் பெயரை இழிவுபடுத்தியுள்ளதாக மண்டேலா பேரர்கள் குற்றஞ் சாட்டி யுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் உள்ளூர்த் தேர்தல் நடைபெறவுள்ளதால் அங்கு அரசியல் பதற்றங்கள் அதிகரித்துள்ளன. (த)

# தாய்வானை பந்தாடியது சூறாவளி

## சீனாவையும் தாக்கும் அபாயம்



தாய்பேய், ஜூலை 9
தாய்வானை நேற்றுமுன்தினம் கடும் சூறாவளி தாக்கியது. செப்பார்ரெக் எனப் பெயர் கொண்ட இந்தச் சூறாவளி தாய்வானில் கடும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. அது சீனாவையும் தாக்கும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப் பட்டுள்ளது.

முன்னதாக, அவசரகால மத்திய நிலையம், மக்களுக்குச் சூறாவளி தொடர்பான எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டது. சூறாவளியால் 66 பேர் காயமடைந்தனர்; 2 லட்சத்து 70 ஆயிரம் வீடுகளின் மின் இணைப்புகள் துண்டிக்கப் பட்டன.

கடுமையான காற்று, கன மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்படும் வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இவற்றுக்கு அறிகுறியாகத் தாய்வானின் கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது.

நேற்றையதினம் தாய்வானிலும், இன்று சீனாவையும் புயல் தாக்கும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்தது. தொடர்ந்து தாக்கும் புயலால், வணிக வளாகங்கள், பாடசாலைகள் என்பவற்றுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.

சூறாவளி சீனாவைக் கடக்கும்போது உச்ச வீரியத்துடன் இருக்கும் என அஞ்சப்படுகின்றது. ஏற்கனவே சீனாவில் கனமழை பெய்து நூற்றுக்கணக்கில் உயிரிழப்புக்களும், பல பில்லியன் கணக்கில் பொருள் சேதமும் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு கடும் பீதியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. (த-ரி4)

# ஏடன்ராணுவத்தளம்மீது கார்க் குண்டுத் தாக்குதல்

## ஆறு சிப்பாய்கள் உயிரிழப்பு

சனா, ஜூலை 9
யேமன் நாட்டின் கடற்கரை நகரமான ஏடனில் உள்ள சர்வதேச விமான நிலையத்தின் அருகில் இடம்பெற்ற இரட்டை கார்க் குண்டுத் தாக்குதலில் சுமார் ஆறு படையினர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏடன் விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமின் நுழைவாயிலில் கார்க் குண்டொன்றை வெடிக்க வைத்து குறித்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

முதல் தாக்குதலால் வீரர்கள் நிலைக் குலைந்து நின்ற சந்தர்ப்பத்தில் அதே பகுதியில் மற்றுமொரு கார், இராணுவ முகாமின் வாயில் பகுதியில் வேகமாக மோதி இரண்டாவது தாக்குதல் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த தாக்குதல்களில் ஆறு படையினர் உயிரிழந்திருப்பதாக ஆரம்பக் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யேமனில் கடந்த 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் போர்ச் சூழல் நிலவி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (த)

# மலேசியாவிலும் ஐ.எஸ். அமைப்பு கிரனேட் தாக்குதல்

## சந்தேகத்தில் 15 பேர் கைது




கோலாலம்பூர், ஜூலை 9
மலேசியாவில் ஐ.எஸ். அமைப்பு தாக்குதல் நடத்தியுள்ளதாகப் பொலிஸார் நேற்றுமுன் தினம் தெரிவித்தனர்.

தலைநகர் கோலாலம்பூரில், புசொங் பகுதியில் அமைந்துள்ள மொவிடா மதுபான விடுதியிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

சம்பவ தினத்தன்று காலை மதுபான விடுதியில், கால்பந்தாட்டப் போட்டியைத் தொலைக் காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தபோது இந்த கிரனேட் வீச்சு இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட குரோதம் காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என்னும் கோணத்தில் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர். ஆனால், ஐ.எஸ். அமைப்பு தாக்குதலை நடத்தியுள்ளதாகப் விசாரணையில் இருந்து தெரிய வந்தது.

இந்தக் கிரனேட் வீச்சில் 8 பேர் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் இது குறித்துத் தெரிவித்ததாவது:

கையில், மலேசியாவின் ஐ.எஸ். அமைப்புத் தலைவரான முகமத் ஜெடியின் ஆலோசனையில் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதல் தொடர்பில் இதுவரை 15 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் கிரனேட் வீசிய இருவரும் அடங்குவர். கைது செய்யப்பட்டவர்களில் 2 பொலிஸாரும் உள்ளடங்குவர். இவர்களில் ஒருவர் ஐ.எஸ். அமைப்பை வளர்க்கும் செயற் பாடுகளில் ஈடுபட்ட குற்றச் சாட்டிலும், இன்னொருவர் ஐ.எஸ். அமைப்புக்கு நிதி சேகரித்த குற்றச் சாட்டிலும் கைது செய்யப்பட்டனர்.

மலேசியாவின் முக்கிய நபர்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தும்படி மலேசியாவின் ஐ.எஸ். தலைமை உத்தரவிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக்கும் உள்ளடக்கம். விசாரணையில் சந்தேக நபர்கள் வேறு தகவல்களைத் தெரிவிக்கவில்லை. இன்னமும் விசாரணை இடம்பெற்றுக்கொண்டிருப்பதால் தொடர்ந்தும் கைதுகள் நடைபெறும் – என்றார். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழங்காவில்

# அருள்மிகு ஸ்ரீ செல்வயோக சித்திவிநாயகர் திருத்தலம்

# (முழங்காவில் பிள்ளையார்)

# புதிய சித்திரத்தேர் திருவிழா சிறப்பிதழ்





**இன்று (09.07.2016) சனிக்கிழமை**
**9.30 மணியளவில்**
**சித்திரத்தேரில் சுவாமி**
**ஆரோகணித்தல்**



## ஆசியுரை

கிரக்தாசி வருடம் எமது ஆலயத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொற்காலம். புதிய சித்திரத் தேர் ஏறி ஐங்கரப் பெருமாள் பவனி வரும் கண்கொள்ளாக்காட்சியைக் காணும் திருநாள்.

பஞ்ச கிருத்தியங்களில் அழித்தல் தொழிலைக் குறிக்கும் உற்சவம் தேர்த்திருவிழா. இத்திருவிழா சிறப்புற நடைபெற விநாயகப் பெருமானை வேண்டி இப் பெரும் ஆழித்தேரை அமைக்க வேண்டும் என்னும் பெருநோக்கம் கொண்ட தேர் திருப்பணி சபையினருக்கும் அடியவர்களுக்கும் உபயகாரர்களுக்கும் எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ பேரம்ப - சிவபிரதீப சர்மா**
**ஆதீன அர்ச்சகர்**
**செல்வயோக சித்திவிநாயகர் ஆலயம் - முழங்காவில்**

## வாழ்த்துச் செய்தியும் நன்றிகளும்



முழங்காவில் நகரில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சிந்தாமணி சித்திரத்தேரிலே பஞ்சமுக விநாயகராக எழுந்தருளி அடியவர்களுக்கு அருட்காட்சி கொடுக்க திருவருள் கைகூடியுள்ள இந்நாளில் அடியவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வடம்பிடித்து எம்பெருமானின் அருட்சக்தியைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வீர்களாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு இச்சித்திரத்தேரினை அமைப்பதற்குப் பொருளாகவோ அல்லது பணமாகவோ உதவிபுரிந்த உள்நாட்டில், வெளிநாட்டில் இருக்கும் அடியவர்கள் அனைவருக்கும், எமது அயல் கிராமங்களில் தேர்த்திருப்பணிப்பணிக்காக நெல்லாகவோ பொருளாகவோ உதவிபுரிந்த அனைவருக்கும், அத்தோடு அயல் கிராமங்களில் திருப்பணி நிதி சேகரிப்பதில் எம்மோடு சேர்ந்து உழைத்த அக்கிராம பெரியவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். அத்தோடு வெளிமாவட்டங்களில் இருக்கும் எம் உறவுகளுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக எமது கிராம வர்த்தக பிரமுகர்கள், ஏனைய அனைத்து அடியவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இத்துடன் இச் சித்திரத்தேரினை அமைத்துத் தந்த ரதகலாசூரி செ.பாலச்சந்திரன் காளிகா சிற்ப கலையகம் புத்தூர் யாழ்ப்பாணம் அவர்களுக்கும் இத்தேருக்குரிய பஞ்சமுக விநாயகரைப் பிரதிஷ்டை செய்து தந்த அடியவருக்கும் எம்மோடு இரவு பகல் பாராது உழைத்த எமது கிராம இளைஞர்கள், ஊர் பெரியவர்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறுகின்றோம். அத்தோடு சிறப்பித்தலுக்கு ஆசிச் செய்திகளை வழங்கியோர், துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டோர், நிகழ்வை நேரடி ஒலிபரப்பு செய்த கலையகத்தினர் மற்றும் எமக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஆலய பரிபாலன சபைத் தலைவர், செயலாளர், பொருளாளர், ஏனைய உறுபினர்களுக்கும் அன்னதான சபையினருக்கும், தேர்த்திருப்பணி சபையின் உப சபை மற்றும் தேர்த்திருப்பணி சபையினர், போக்குவரத்து வாகனங்களை தந்து உதவிய அடியவர்கள், தேர்த்திருப்பணி நிதி சேகரிப்பில் ஈடுபட்ட அனைவருக்கும் இந்நாளில் நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைவதுடன் அவர்கள் அனைவரது வாழ்வும் சிறக்க எம்பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

**சோ.பாலச்சந்திரன்**
**(தேர்த்திருப்பணி சபை செயலாளர்)**
**ஸ்ரீ செல்வயோக சித்திவிநாயகர் ஆலயம், முழங்காவில்.**

**ஆலய பரிபாலன சபையினரும்**
**தேர்த்திருப்பணிச் சபையினரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை மாத ராசி பலன்கள்



## கடகம்

கடகம்: (புனர் பூசம் 4ம் பாதம்,பூசம், ஆயிலியம்)

எப்போதும் ஒரே கருத்தைக் கொள்ளாமல் அவ்வப்போது எண்ணங்களையும் கருத்துக்களையும் மாற்றிக் கொள்ளும் குணமுடைய கடக ராசியினரே! நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள். இந்த மாதம் தன ஸ்தானத்தில் குரு - ராகு, பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் வக்ர நிவர்த்தி பெற்ற செவ்வாய் - சனி, அஷ்டம ஸ்தானத்தில் கேது, அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன் - புதன் - சுக்கிரன் என கிரகங்களின் அமைப்பு இருக்கிறது. சூரியனும், புதனும்இணைந்து புத ஆதித்திய யோகத்தைத் தருவதால் தொழில் தொடர்பான விடயங்களில்தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள். பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிக்கும் நிலை வரலாம். பணவரவு திருப்தி தரும். வழக்குகளில் சாதகமான போக்குக் காணப்படும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வாக்கு வன்மையால் எளிதாகத் தங்களது தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைக்கப் பெறுவார்கள். பிரச்சினைகளைப் பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்கப் பெறுவார்கள்.

எதிலும் திட்டமிட்டுச் செயலாற்றுவதால் மேல் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.

குடும்பத்தில் இருப்பவர்களால் கூடுதல் வருமானம் கிடைக்கும். முக்கிய நபர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே சுமுகமான நிலை காணப்படும். பிள்ளைகளுக்காகக் கூடுதல் நேரம் செலவு செய்ய வேண்டி இருக்கும்.

பெண்கள் நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பர். எதையும் புத்திசாதுரியத்தைப் பயன்படுத்திச் சமாளிப்பீர்கள்.

மாணவர்களுக்கு பாடங்கள் படிப்பதில் ஆர்வம் உண்டாகும். ஆசிரியர்களின் ஆதரவுடன் படித்துதேர்வில்வெற்றி பெறுவீர்கள்.

**பரிகாரம்:** சரஸ்வதிதேவியைப்பூஜித்து வரக்காரியங்களில்வெற்றிஉண்டாகும். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**புனர் பூசம் 4ம் பாதம்:**
குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். சுப காரியங்கள் நடக்கலாம். சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். சந்தோசமாகக் காணப்படுவார்கள். குழந்தைகள் மூலம் பெருமை கிடைக்கும். எந்த வேலையையும் எளிதாகச் செய்து விடுவீர்கள். முயற்சிகள் வெற்றி பெறும்.

**பூசம்:**
எதிலும் கவனமாக இருப்பது நல்லது. காரியங்களில் தடை தாமதம் உண்டாகும். எதிலும் தலையிடாமல் ஒதுங்கிச் சென்றாலும் மற்றவர்கள் வலிய வந்து உங்களையும் இழுப்பார்கள். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை.

**ஆயிலியம்:**
தொழில் வியாபாரம் மந்தமாகக் காணப்படும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலைப் பளுவும் ஏற்படலாம்.

(தொடரும்)

# குந்தியின் பாவச் செயலும் கர்ணனின் அவல முடிவும்

சாம் ரமேஸ்குமார்

மகாபாரதத்தில் பல பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் மனித உறவுகளையும் அதனுடைய தாற்பரியங்களையும் பற்றிச் சித்திரிக்கும் கதாபாத்திரங்களே அதில் வலுவாகக் காணப்படுகின்றன எனலாம். அதில் ஓர் உறவுதான் தாய் மகன் உறவான குந்தி–கர்ணனின் உறவாகும். பாண்டவர்களின் தாயான குந்தி தனது வனப்பான வாலிபப்பருவத்தில்கன்னிகழியமுன் துருவாசமுனிவர் கொடுத்த ஒரு மாய மந்திரத்தின் நிமித்தம் சூரிய பகவானின் இறையருளால் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தனது முன்னைய கன்னித் தன்மையைக் காப்பதற்கும். சமுதாயத்தினுடைய ஒழுக்க நெறிகளுக்குப் பயந்தும் அந்தக் குழந்தையைக் குந்தி கங்கை நதியிலே ஒரு பேழையில் வைத்து அநாதரவாக விட்டுவிடுகின்றாள்.

அந்தப் பேழை கௌரவர்களின் தேரோட்டியான அதிரனின் பார்வையில் தென்பட, அது அவனின் கரங்களில் சரணாகதியடைந்தது. அதன் பின் அந்தக் குழந்தை கர்ணனென்ற நாமத்துடன் குழந்தைப் பாக்கியமற்ற அதிரனுடைய குடிலில் வளர்ப்புப் பிள்ளையாக வளர்ந்து வந்தது. உண்மையில் கர்ணன்தான் பாண்டவர்கள் ஐவருக்கும் மூத்த சகோதரன் ஆவான். சத்திரிய வாடை கர்ணனினுடைய குருதியில் இயல்பாகவே ஊறிப்போனதால் அவனது வாலிப வயது நெருங்கியதும் தனுர் வேதமாகிய வில்வித்தையில் அவன் மனம் இயற்கையாகவே உள்வாங்கப்பட்டது. அதன் மூலம் கர்ணன் தான் மட்டுமே எதிர்காலத்தில் சிறந்த வில்லாளனாக சமூகத்தில் மிளிர வேண்டும் என்பதற்காகவும் தேரோட்டி மகன் என்ற சொல்லைச் சமூகத்திலிருந்து இல்லாதொழிப்பதற்காகவும் கௌரவர் கூட்டத்தில் இணைந்தான். கௌரவர்களும் தம் பலத்தைப் பெருக்குவதற்காகக் கர்ணனை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள்.

பூமிப் பந்தின் சுழற்சிக்கு ஏற்ப கௌரவர், பாண்டவர்களுக்கு இடையிடையிலான முரண்பாடுகள் அதிகமாய் வலுத்தன. திடீரெனப் போர் மேகங்கள் சூழ்ந்தன. நடைபெறவிருக்கும் போரில் பாண்டவர்களில் ஒருவனாகிய அர்ஜுனனை தன் உடன்பிறந்த சகோதரனென்று தெரியாமலேயே கொல்வதற்குக் கர்ணன் சபதமெடுக்கின்றான். கர்ணனின் வம்சம் யாதென்று புரிய வைப்பதற்கும். அவனின் தாய் யாரென்று உணர்த்துவதற்கும். தக்க தருணம் வந்துவிட்டதெனத் தன் விவேகத்தால் அறிந்த கிருஷ்ணர் அவனிடம் தாய் குந்தியை அனுப்புகின் றார்.



குந்தி "நான் தான் உன் தாய்" என்று பல சாட்சிகளோடு கர்ணனிடம் உண்மையை விளக்குகின்றாள். அதை அவன் மனப்பூர்வமாக ஏற்றாலும் தன் தரப்பு நியாயங்களை எடுத்துரைத்து, கௌரவ கூட்டத்திலிருந்து விலக மறுக்கின்றான். செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பதே தனது விசுவாச தர்மமென்று தாய் குந்திக்கு கர்ணன் அறிவுறுத்தினான். அவள் கண்ணீரோடு விடைபெற்றாள்.

பரமாத்மாவாகிய கிருஷ்ணரும் தனது இறை தர்மத்தின் பலாபலன்களைக் கர்ணனிடம் எடுத்துரைத்து அவன் தவறுகளைச் சுட்டிக்காட்டினார். அந்த இறை கருத்துக்கள் வெறும் காற்றோடு கலந்ததே தவிர அவன் செவிகளில் சிறிதும் தங்கவில்லை. தனது விசுவாசமே தனது தர்மமாகும். தனது தர்மமே தனது விசுவாசமாகும் என மனதில் உறுதி கொண்டவனாய் இறைவனான கிருஷ்ணரையே புறக்கணித்துவிட்டு போர் அரங்கின் கதவுகளைக் கர்ணன் திறக்கத் தயாரானான்.

ஒரு மனிதன் நல்லவனாவதும், தீயவனாவதும் அவனுடைய தாயின் ஆத்மார்த்தமான வளர்ப்பிலேதான் பெரும்பாலும் தங்கியுள்ளது என்பதை கர்ணனின் தனிப்பட்ட வாழ்க்கை எமக்கு எடுத்துரைக்க முற்படுகின்றது.

கர்ணன் பிறந்தவுடன் குந்தி அவனைக் கங்கையில் விடாது அன்பும் அரவணைப்பும் காட்டி வளர்த்திருந்தால், கர்ணன் தன் சுயமரியாதைக்காக அதர்மத்தின் தரப்பில் சேர்வதற்கான வாய்ப்பு அறவே வாய்த்திருக்காது. இதை எதிர்காலத்தில் தாயாகப் பரிணமிக்க இருக்கும் அனைத்து பெண் குலத்தவர்களும் பக்திபூர்வமாக உணரத் தலைப்படவேண்டும்.

இங்கு தனிப்பட்ட ரீதியில் கர்ணனைப் பார்த்தோமானால் கர்ணன் என்னதான் பெரிய கொடை வள்ளலாக இருந்தாலும், கௌரவர்களின் அதர்மச் செயலுக்குத் துணை போகின்ற ஒருவனாகவே கிருஷ்ணனால் எப்போதும் கணிக்கப்பட்டான். தன் சகோதரர்களைப் படுகொலை செய்வதற்கு கௌரவக் கும்பல் சதி வேலை செய் கின்றதென அறிந்திருந்தும், அவர்களோடு மேன் மேலும் இணங்கியிருப்பதே தனது தர்மமென அவன் எண்ணியிருந்தான். ஏனெனில் கர்ணனைப் பொறுத்த வரை செஞ்சோற்றுக்கடனே அவன் வாழ்வில் தீர்க்க முடியாத மாபெரும் கடனாயிருந்தது.

எவன் ஒருவன் எமக்கு அதிகமாய் உதவி செய்திருந்தாலும், அவன் உறவுக்காரனாய் இருந்தாலும், அவன் அதர்மத்தின் தரப்பாக இருந்து கொண்டு எம் தேசத்துக்கும், மக்களுக்கும் தீங்கு விளைவிப்பவனாக இருந்தால் அவனுக்கு எதிராக எமது வாளை நிச்சயம் நிமிர்த்த வேண்டும் என்பதே கிருஷ்ணரின் இறையியல் கோட்பாடாக என்றும் இருந்து வந்துள்ளது. அதையே அவர் மகாபாரதத்தில் நிரூபித்துக் காட்டினார். இந்தக் கோட்பாட்டிலிருந்து, கர்ணன் அன்று தவறி விட்டான்.

ஓர் அதர்மவான் எம் சுயமரியாதையையும், சுகபோகங்களையும் பிறர் முன்னிலையில் காப்பாற்றி விட்டான் என்பதற்காக , அவன் அதர்மத்தின் தரப்பென்று தெரிந்தும் நாம் அவனின் தீய செயல்களுக்கு ஒத்தூதிக் கொண்டிருந்தோமானால், நாமும் கர்ணனைப்போல் ஒரு நாள் ஈவிரக்கமற்றுத் தண்டிக்கப்படுவோம். இதை நாம் என்றும் மறக்கலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி செ.யோகராசா

# புதிய வெளிச்சங்களை உருவாக்கியவர் மறைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி

பேராசிரியர் கா.சிவத்தம்பி நவீன இலக்கியம் பழந்தமிழ் இலக்கியம், நாடகம், அரங்கியல், நுண்கலை, இதழியல், நாட்டாரியல், சமூகவியல், ஈழத்து இலக்கியம், இலக்கணம், விமர்சனம், சமயம், தத்துவம் முதலான பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர். இவை தொடர்பான பல நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் புதிய அணுகுமுறைகளில் எழுதியிருப்பவர், புதிய சிந்தனைகளையும், புதிய தடங்களையும் வெளிப்படுத்தியிருப்பவர், தமது ஆய்வு முயற்சிகளுள் பேராசிரியருக்கு மிகவும் பிடித்ததொன்றாக இருந்து வந்தது, இலக்கணமும், சமூக உறவுகளும் (தமிழ் சொல்லிலக்கணக் கூறுகளுள் சில பற்றிய ஒரு மார்க்சிய நோக்கு) என்பதாகும். அது பற்றி பேராசிரியர் தமது நூலின் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதே இந்தக் கட்டுரையின் தலைப்பாக என்னால் தரப்பட்டுள்ளது!

பேராசிரியரின் மேற்கூறிய நூலின் முக்கியத்துவம் எத்தகையது என்பது பற்றி முதலில் எடுத்துக்காட்டுவது அவசியமானது. இருபதாம் நூற்றாண்டிலே, ஏறத்தாழ நாற்பது கால அளவிலே சமகால நவீன இலக்கிய ஆய்வுக்குப் பயன்பட்ட மார்க்சிய அணுகுமுறையானது பின்னர் பழந்தமிழ் இலக்கியங்களை அணுகுவதற்குப் பயன்படலாயிற்று. இவ்வித அணுகுமுறை சார்ந்த முன்னோடிகளாக ஈழத்தில் பேராசிரியர் க.கைலாசபதியும் பேராசிரியர் கா.சிவத்தம்பியும், தமிழ் நாட்டிலே பேராசிரியர் நா.வானமாமலையும் விளங்கினர். இவர்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறான பல துறைகளிலும் புதிய வெளிச்சங்களை ஏற்படுத்தியவர்கள். எனினும் பேராசிரியர் க.கைலாசபதி, நா. வானமாமலை உட்பட வேறு எவரும் நோக்காத புதிய அணுகுமுறையில் தமிழ் இலக்கணத்தை நோக்கியவர் பேராசிரியர் கா.சிவத்தம்பியாவார். இதுபற்றி நா.வானமாமலை கூறுகையில் "இந்தக்கட்டுரை ஆராய்ச்சித் துறையில் ஒரு புது வழிவகுக்கிறது. மொழியியல், சமூகமானிடவியல் பிரச்சினைகளை ஆராய்கிற முறையியல் புதிதாகப் பிறந்துள்ளதை நாம் அறிவோம். மொழியியல் மாற்றங்கள், சமூகவியல் மாற்றங்களுக்கேற்ப உள்ளன என்பதை விளக்குகிற சில கட்டுரைகள் வந்துள்ளன. ஆனால் எமது பழமையான இலக்கண மரபுகள் புதிய நூல்களில் மாற்றம் பெறுவதற்கான காரணங்களை நமது ஆய்வாளர் சிவத்தம்பிக்கு முன்னர் ஆராய்ந்தவர் எவருமிலர்" என்றார். நா.வானமாமலை மேற்படி நூலை கட்டுரை என்று கூறுவதற்குக் காரணம், இந்த நூலின் ஆரம்பவடிவம் "சொல்லிலக்கணம் சுட்டும் சமூக, உற்பத்தி உறவுகள்" என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்தமையேயாம். அதுவே பின்னர் நாம் இங்கு கவனிக்கின்ற இலக்கணமும் சமூக உறவுகளும் ஆயிற்று எனலாம்!


மேற்குறிப்பிட்ட, பேராசிரியரது நூல் எதுபற்றி நோக்குகின்றது என்று சுருக்கமாக நினைவு கூர்வதாயின், அது சொல்லிலக்கணத்தின் முக்கிய கூறுகளாகவுள்ள திணை, பால, எண், வேற்றுமை வினை வடிவம் ஆகியவற்றைக் கவனத்திற் கொடுத்து அவை மக்களிடையே நிலவிய உறவுகளை எவ்வாறு புலப்படுத்துகின்றன என்பது பற்றி ஆராய்வதாக உள்ளது என்ற முடிவுக்கு வரலாம்!

மேற்படி விடயங்களை ஓரிரு உதாரணங்கள் மூலம் விளங்கிக் கொள்வோம், தமிழ் இலக்கணத்தின் அடிப்படைக் கூறுகளுளொன்று திணை ஆகும். இவற்றுள் விரவுத் திணை என்ற ஒரு பிரிவுள்ளது. இந்தத் திணை என்பது, (சங்க காலத்துக்குரிய) நில அடிப்படையிலமைந்த மக்கள் கூட்டம் என்று பொருள்பட்டு, குழு நிலைப்பட்ட மனித வாழ்வு நிலையைக் கருதுகிறது என்றும் விரவுத்திணை உழைப்பு அடிப்படையில் தம்மோடு இயைந்து தமக்கு உதவியாக நின்ற மாடு முதலானவற்றை மனித உறவுடன் நோக்கும் நிலையை வெளிப்படுத்துகிறதென்றும் பேராசிரியர் விளக்குகின்றார். பால் பற்றி விளக்கும்போது மக்களின் தனிப்பட்ட உறவுகளின்போது சம்பந்தப்பட்டவர்களின் பால் வேறுபாடு முக்கியமானதாக அமைகின்றது என்றும் மக்களைத் தொகுதியாகக் கருதும்போது பால்வேறுபாடு முக்கியமானதாக அமைவதில்லை என்றும் கணவாழ்க்கையே (கணம்-கூட்டம்) முக்கியம் பெறுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார். மேலும், அஃறிணைப் பொருள்களை இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் ஒருமையிலேயே கூறும் முறை உண்டென்றும் பால்பகா அஃறிணை என்பது மக்களது நோக்கு நெறியை (அதாவது, அஃறிணைப் பொருள்களை, தம்முள் விசேட வேறுபாடுகள் கொண்ட தனித்தனியானவையாகக் கருதாமை) வெளிப்படுத்துகின்றது என்றும் விளக்குவார்.

இடம்பற்றி விளக்கும்போது, மூவிடங்களிலும் வரும் மாற்றுப் பெயர்களின் பன்மை வடிவங்களுள் ஒன்றான உளப்பாட்டுத் தன்மைப் பன்மையானது கணவாழ்க்கையின் (கூட்டு வாழ்க்கையின்) வெளிப்பாடே என்றும் மரியாதைப் பன்மை சமுதாயத்தில் தோன்றிய உறவுப் பேதங்களை வெளிப்படுகின்றது என்றும் எடுத்துரைப்பார்.

இவ்வாறே, வேற்றுமை, வினை அமைப்பு முதலியன பற்றியெல்லாம் பேராசிரியர் புதிய முறையில் விளக்கும்போது இலக்கிய ஆர்வலருக்குள் புதிய வெளிச்சங்கள் பிறக்கின்றன அல்லவா?

கட்டுரையாளர்,
முன்னாள் பேராசிரியர்.



பேரா. சிவத்தம்பியின்
நினைவு தினம்
ஜூலை - 6

மொழியியல், சமூகமானிடவியல் பிரச்சினைகளை ஆராய்கிற முறையியல் புதிதாகப் பிறந்துள்ளதை நாம் அறிவோம். மொழியியல் மாற்றங்கள், சமூகவியல் மாற்றங்களுக்கேற்ப உள்ளன என்பதை விளக்குகிற சில கட்டுரைகள் வந்துள்ளன. ஆனால் எமது பழமையான இலக்கண மரபுகள் புதிய நூல்களில் மாற்றம் பெறுவதற்கான காரணங்களை நமது ஆய்வாளர் சிவத்தம்பிக்கு முன்னர் ஆராய்ந்தவர் எவருமிலர். நா.வானமாமலை மேற்படி நூலை கட்டுரை என்று கூறுவதற்குக் காரணம், இந்த நூலின் ஆரம்பவடிவம் "சொல்லிலக்கணம் சுட்டும் சமூக , உற்பத்தி உறவுகள் என்ற தலைப்பில் எழுதப் பட்டிருந்தமையேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அன்னை தெரேசா



*(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

பள்ளி நேரம் முடிந்ததும் ஆக்னேஸ் பங்கின் பணிகளில் ஈடுபட்டிருந்தாள். இந்தச் சூழ்நிலையில்தான் இந்தக் குடும்பத்துக்கு பங்கின் பொறுப்பை ஏற்ற அருள் திரு ஜாம்பிரான் கோவிக்குடன் தொடர்பு ஏற்பட்டது. இவர் மாதாவின் சபை என்ற அமைப்பின் கிளை ஒன்றை இங்கே ஆரம்பித்தார். இது ஆக்னேசுக்குப் பயனுள்ளதாக இருந்தது. ஏனெனில் பல ஆண்டுகளுக்குப் பின் கல்கத்தாவில் என் தல்லி என்ற இடத்தில் உள்ள கன்னியர் மடத்தில் ஆக்னேஸ் சேரப் போகிறாள்.

இந்த மாதா சபையில் புனிதர்கள், அயல் நாடுகளுக்குச் சென்று நற்செய்தி அறிவிப்புப் பணி புரியும் பணியாள்கள் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அவளுக்குக் கிடைத்தது. 1924 ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள வங்காள மாநிலப் பகுதிகளுக்குச் சென்ற பணியாளர்கள் பற்றிய விவரங்களை தந்தை ஜாம்பிரான் கோவிக்கிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டாள். இந்தவிதப் பணியாள்களின் இறையன்பின் கனல் மாதா சபையின் ஏனைய உறுப்பினர்களுக்கும் தெரிய வந்தது. குறிப்பாக சிறுமி ஆக்னேஸின் இதயத்தின் நரம்புகளைப் பலமாகத் தட்டி இன்னிசையெழுப்பி விட்டது. இவர்கள் பணிபுரியும் தங்கள் மக்களிடையே ஏற்பட்ட அனுபவங்களை விலாவாரியாக விவரித்தனர். குறிப்பாக இந்திய நாட்டு சிறுவர் சிறுமியரிடம் ஏற்பட்ட அனுபவங்கள் ஆக்னேஸின் இதய வீணையின் கம்பிகளை மீட்டி இசையெழுப்பிற்று என்று அன்னை தெரேசா நினைவு கூர்ந்தார். வங்காளத்தில் கன்னியர் சபை ஒன்று மறைப்பணியில் ஈடுபட்டது என்றும் இந்தக் கன்னியர்கள் கல்விப் பணியில் ஈடுபாடு கொண்டுள்ளனர் என்றும் ஆக்னேஸ் தெரிந்து கொண்டாள். லொரேட்டோ கன்னியர்கள் அகில உலக சபையைச் சேர்ந்தவர்கள். அயர்லாந்தில் இருந்து வந்த கன்னியர்கள் வங்காளத்தில் கல்விப் பணியாற்றிக் கொண்டிருந்தனர்.

இவளிடம் பல அரிய பண்புகளும் வேரூன்றி உள்ளத்தின் அழகுக்கு மெருகூட்டின. ஆக்னேஸ் கல்வியில் படுசுட்டி, அப்பழுக்கு இல்லாத தோற்றம். எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று தன் வாழ்வைச் சரியாக நிரல் பட அமைத்துக் கொண்டாள் என்று லாசர் கூறினார். சிறுபிள்ளைகளைக் கூட்டி அவர்களுக்கு மறையறிவைச் சொல்லித் தருவதில் அலாதிப் பிரியம் கொண்டாள். போதகப் பணியில் அதிக ஆர்வமும் ஆவலும் கொண்டாள். அந்த இளம் வயதிலேயே எவருக்கும் உதவி செய்ய மறுக்காதவள். இவளை நம்பி எல்லோரும் இவளிடம் போகலாம். சமய உணர்வுடன் எல்லோரோடும் நட்புறவு கொண்டிருந்தாள்.

ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அவளுள் ஏற்பட்ட முதல் ஊறல்கள் அழைப்பாக வடிவம் பெற்றன. இறைவனின் பணிக்குத் தன்னையே அர்ப்பணிக்க வேண்டுமென்ற அந்த அரும்பு இதழ் விரித்து மணம் வெளியே பரவத் தொடங்கிற்று. இறைவனின் பணி புரியும் குடும்பத்தின் பிணைப்புகளையும் அன்பின் பந்தங்களையும் விட்டு வெளியேற வேண்டுமென்ற அழைப்பாக வடிவம் பெற்றது. இந்த உந்துதல் உண்மையானது தானா என்ற குழப்பம் அவளுடைய இதயத்தைக் கலக்கியபோது அக்னேஸ் பங்குத்தந்தை ஜாம்பிரான் கோவிடம் தெளிவு பெறச் சென்றாள். இவரும் அழைப்பின் உள்ளடக்கங்களையெல்லாம் விவரித்தார்.

*(அடுத்த சனிக்கிழமை தொடரும்)*

# வரலாற்றில் இன்றைய தினம்



1212 - மிக கடுமையான தீ பரவியதில் லண்டன் நகரின் பெரும் பகுதி அடியோடு எரிந்தது.

1778 - பிரான்ஸின் 16 ஆம் லூயி , பெரிய பிரித்தானியா மீது போர்ப் பிரகடனம் செய்தார்.

1793 - மேல் கனடாவில் அடிமைத் தனத்துக்கு எதிரான சட்டம் நடைமுறைக்கு வந்தது. கீழ்க் கனடாவுக்குள் அடிமைகளை இறக்குமதி செய்வதும் இதன் மூலமாகத் தடை செய்யப்பட்டது.

1816 - ஸ்பெயினிடமிருந்து சுதந்திரம் பெற்றதாக ஆர்ஜென்ரீனா பிரகடனப்படுத்தியது.

1821 - ஸ்பெயினிடமிருந்து புதிதாக வாங்கிய புளோரிடா நிலப்பரப்பை அமெரிக்கா கையேற்றது.

1864 - பிரித்தானிய புகையிரதமொன்றில் இடம்பெற்ற கொலையில் தோமஸ் பிறிக்ஸ் என்பவர் கொல்லப்பட்டார்.

1877 - விம்பிள்டன் ரெனிஸ் சம்பியன் போட்டி தொடங்கப்பட்டது.

1903 - எதிர்கால சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் மூன்று ஆண்டுகளுக்கு சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1925 - மெஹர் பாபா தமது 44 வருட மௌன நோன்பைத் தொடங்கினார். அவரைப் பின்பற்றுவோர் இந்நாளை அமைதி நாளாக அனுஷ்டிக்கின்றனர்.

1938 - உலகை விமானத்தில் 91 மணித்தியாலங்களில் சுற்றி வந்து ஹொவாட் ஹியூயஸ் புதிய சாதனை.

1942 - நெதர்லாந்து மற்றும் சோவியத் யூனியனிடையே இராஜரீக உறவு ஏற்படுத்தப்பட்டது.

1937 - பொக்ஸ் பில்ம் கோப்பரேஷனின் ஊமைப்பட ஆவணங்கள் தீயில் அழிந்தன.

1943 - சிசிலி மீது கூட்டுப்படைகள் ஈர் ஊடக, ஆக்கிரமிப்பை நடத்தின.

1944 - நோர்மண்டிப் போரில் பிரான்ஸின் சீன் பகுதியை பிரித்தானிய, கனேடிய படைகள் கைப்பற்றின.

1961 - கருத்துக் கணிப்பு வாக்கெடுப் பொன்றில் துருக்கிய அரசியலமைப்பை துருக்கிய வாக்காளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

1982 - பான் ஆம் 759 விமானம் லூசியானா கென்னரில் விபத்துக்குள்ளாகியதில் அதிலிருந்து 145 பேருடன் தரையிலிருந்த எட்டுப் பேரும் உயிரிழந்தனர்.

1995 - சிறிலங்கா விமானப்படையால் மேற்கொள்ளப்பட்ட நவாலி தேவாலயத் குண்டு வீச்சில் 125 தமிழ்க் குடிமக்கள் கொல்லப்பட்டனர்.

2002 - வெள்ளையர் இனப் பொலிஸார் கறுப்பினச் சிறுவன் மீது தாக்குதல்; அமெரிக்காவில் பதற்றம்.

2005 - அந்தனிசில் மட்டக்களப்பில் காலமானார்.

- சோமாலிய கடற் கொள்ளையரிடம் சிக்கிய வடமராட்சி வாசியை விடுவிப்பதற்கு முயற்சி. கென்யத் தூதரகத்துடன் வெளிவிவகார அமைச்சு தொடர்பு.

# கஞ்சப் பிரபுக்களான தந்தையும் மகனும்



ஓர் ஊரிலே கடைந்தெடுத்த கஞ்சன் ஒருவன் இருந்தான். எச்சில் கையால் காக்காய் விரட்டினால் இருக்கிற சோறும் போய் விடுமே என்று சாப்பிட்ட கையை முற்றிலுமாக நக்கி, சுத்தப்படுத்திக் கொண்ட பிறகுதான் அவன் காக்கையை விரட்டுவர்ன்.

ஒரு நாள் அவன் தனது மகனுடன் அமர்ந்து மதிய உணவு உண்டு கொண்டிருந்தான்.

மருமகள் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

அன்று மருமகள் வைத்திருந்த ரசம் மாமனாருக்கு மிகவும் பிடித்திருந்தது.

"இன்று ரசம் மிகவும் நன்றாக இருக்கிறது" என்று மாமனார் மருமகளைப் பாராட்டினார்.

உடனே அருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த மகன், "அப்பா! இது மிளகு ரசமாம். நாம் எமது கடையிலே மிளகு நிறுத்துக் கொடுத்துவிட்டுக் கை கழுவிய நீரைக் கொண்டு வைக்கப்பட்ட ரசம் இது" என்று பெருமையாகக் கூறிக் கொண்டான்.

தன்னுடைய கஞ்சத்தனத்தைத் தந்தை பாராட்டுவார் என்று மகன் எதிர்பார்த்தான். தந்தையோ அவன் பேச்சைக் கேட்டு கோபாவேசமடைந்தார்.

"இது என்ன? மிகவும் மடத்தனமான வேலை செய்திருக்கிறாயே! மிளகு நிறுத்துக் கொடுத்த பிறகு ஒவ்வொரு விரலாகக் கழுவி நீரைச் சேகரித்து வைத்திருந்தால் பல நாள்கள் ரசம் வைக்க முடிந்திருக்கும். ஒரேயடியாக கை முழுவதையும் கழுவி ரசம் வைக்கச் சொல்லி விட்டாயே!" என்று தந்தை மகனைக் கண்டித்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழை மக்களின் இல்லங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவோம்

அண்மையில் வடபகுதிக்கு வருகை தந்த அமைச்சர் சஜித் பிரேமதாச வீட்டுப் பயனாளிகளுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கிச் சென்றுள்ளார். அவரது தந்தையாரான மறைந்த ரணசிங்க பிரேமதாச உள்ளூராட்சி அமைச்சராகப் பதவி வகித்த போது கிராமங்களில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கென வீட்டுத்திட்டங்களை உருவாக்கினார். இதனால் வீடுகளின்றி அவல வாழ்வு வாழ்ந்த பலர் நிரந்தர வீடுகளில் குடியமர முடிந்தது. பிரேமதாசவின் காலத்தில் உருவாக்கப்பட்ட மாதிரிக் கிராமங்கள் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. கரவெட்டியிலும் இத்தகையதொரு மாதிரிக் கிராமம் 'ராஜ கிராமம்' என்ற பெயரில் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது பிரேமதாசவின் புதல்வரான சஜித் பிரேமதாசவும் தந்தை வழிநின்று ஏழைகளுக்கு உதவி செய்கின்றமை வரவேற்கத்தக்கது.

வடபகுதியில் போர் காரணமாகப் பலர் தமது வீடுகளை இழந்தனர். இவர்களுக்குப் பல்வேறு விதத்தில் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

வீடுகளை அமைப்பதற்கு வழங்கப்பட்ட நிதியின் தொகையிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. இதில் இந்திய வீட்டுத் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டவர்களுக்கே குறைந்த நிதி வழங்கப்பட்டது. சுமார் 12 இலட்சம் ரூபாவில் அமைக்கப்பட வேண்டிய வீடுகளுக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டது. இதனால் வீட்டுப்பயனாளிகள் பெரும்சிரமங்களை எதிர்கொண்டனர். அதிகாரிகள் குறித்த தவணைக் காலத்தினுள் வீடுகளை அமைத்து முடிக்குமாறு வற்புறுத்தியதால் கடன் பட்டும், இருந்த நகைகளை அடகு வைத்தும், சிலர் நகைகளை விற்றும் உரிய வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்தனர். இதுவொரு சோதனைக் காலமாகவே அவர்களுக்கு அமைந்திருந்தது. அதிலிருந்து அவர்கள் இன்னமும் மீளவில்லை.

தற்போது இத்தகைய வீடுகளின் குறை வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் கடன் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக் கடன்தொகை பகுதி பகுதியாகவே வழங்கப்படவிருப்பதாகவும் தெரிகின்றது. இதற்கான முதற்கட்டக் கொடுப்பனவுக்குரிய காசோலைகளை அமைச்சர் சஜித் பிரேமதாச வழங்கினார். இதில் அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன. குறிப்பாக வீடுகளை அமைப்பதற்குக் குறைந்த தொகை நிதி கிடைக்கப்பெற்றவர்களுக்கு ஏதோ ஒருவகையில் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இதனால் அந்த ஏழை மக்களின் துயரங்கள் குறைவதற்கான வாய்ப்பு ஏற்படும். மேலும், தமது வீடுகளில் மகிழ்ச்சியாகவும் வாழ முடியும்.

ஏழை மக்களுக்கு உதவிகள் வழங்கும்போது அவர்களின் துயரங்களை முற்றாக ஒழிக்கும் வகையில், அவை அமைந்திருக்க வேண்டும். ஏதோ அரைகுறை உதவிகளை வழங்குவதால் முழு நன்மையும் கிடைக்கமாட்டாது. அமைச்சரே! இது உங்களின் கவனத்துக்கு!






# திருந்தாத ஜென்மங்கள் இருந்தென்னலாபம்?

சி.நற்குணலிங்கம்

விளைவுகள் தெரிந்தும் மீண்டும் மீண்டும் தகாத செயல்களில் ஈடுபட்டு பாதகமான விளைவுகளை வீட்டுக்கும், நாட்டுக்கும் தோற்றுவித்து தானும் கெட்டு மற்றவர்களையும் கெடுத்துக்கொள்பவர்கள் திருந்தாத ஜென்மங்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் எவருக்குத்தான் வளமாகக் கருதப்படுவார்கள், எவருக்கும் அல்ல. எனவே இவர்கள் இருந்து தான் என்னலாபம்?

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பண்டைக் காலந்தொட்டு பேணிவரும் சமய, கலாசார விழுமியங்களிலிருந்து விலகிச் செல்லாது ஒருவனுக்கு ஒருத்தி என்னும் வாழ்க்கை முறையையே தொடர்ந்தும் பின்பற்றி வாழ்ந்து வரவேண்டும். ஆனால் பலர் தற்போது இதிலிருந்து விலகி முறை தவறிய பாலியல் உறவில் ஈடுபட்டு எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிர்க்கொல்லி நோயான எயிட்ஸ் நோயானது பாரதூரமான விளைவுகளைத் தோற்றுவிக்கிறது. ஒரு தந்தை அல்லது தாய் பலதரப்பட்டவர்களுடன் உறவு கொள்வதனால் தாங்கள் அழிவதுடன் மட்டுமல்லாமல் பெற்றுக்கொள்ளப்படும் குழந்தையும் பாதிப்புக்குள்ளாகின்றது. பலதரப்பட்டவர்களுடன் உறவு கொள்வதாலும் ஓரினச் சேர்க்கையாலும்தான் கூடுதலானவர்கள் எயிட்ஸ் நோய்க்கு ஆளாகிறார்கள் என்பது எவருக்கும் தெரியாமல் அல்ல. தெரிந்தும் இந்தச் செயலில் ஈடு படுகிறார்கள் எனின் இவர்கள் இருந்தென்னலாபம்?

குடும்ப வன்முறை என்பது பெரும்பாலும் நெருக்க முறையான உறவுகளுக்கிடையே நிகழ்த்தப்படுகின்ற முறைகேடான நடத்தைப்போக்கு எனலாம். இது குடும்ப உறவுகளுக்கிடையே உடல் உள ரீதியான பாதிப்புக்களைத் தோற்றுவிக்கும். குடும்ப வன்முறையால் பெண்களும் குழந்தைகளுமே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். கணவனால் மனைவி துன்புறுத்தப்படல், மதுபோதையில் வந்து வன்முறையில் ஈடுபடுதல், மனைவி அடித்து துன்புறுத்தப்படுதல், தந்தையால் அவரது பெண்பிள்ளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுதல் போன்ற வன்முறைகள் தொடர்ச்சியாக குடும்பத்தில் அரங்கேறி வருகின்றன. குடும்பத்தலைவனுக்கு மனைவியால், பிள்ளைகளால், சகோதரர்களால் குடும்ப வன்முறையின் பாதிப்புக்கள்பற்றி எடுத்துரைத்தும் மீண்டும் மீண்டும் ஈடுபடுகிறார்களாயின் இவர்கள் இருந்தென்ன லாபம்?

இளைஞர்கள், முதியவர்கள், படித்தவர்கள் எனப்பலதரப்பட்டவர்கள் பதின்ம வயதுடைய சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்றனர். பிஞ்சுகள் காமக் கண் கொண்டு நோக்கப்படுவதை எவ்வாறு சகித்துக்கொள்ளமுடியும்? ஒவ்வொரு நாளும் பத்திரிகையில் இவ்வாறான செய்திகள் வந்த வண்ணம் உள்ளது. இத்தகைய குற்றம் புரிபவர்கள் எவராக இருந்தாலும் கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுகிறார்கள். தண்டனைச் சட்டக்கோவையின் பிரகாரம் 7 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்பவற்றை அறிந்தும் பாலியல் வதையில் ஈடுபடுபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளதாகையால் இவர்கள் குடும்பத்துக்குத் தேவையானவர்களா? என எண்ணத்தோன்றுகின்றது.

> தீமையானதும் ஆபத்தானதுமெனத் தெரிந்தும் ஒவ்வொருநாளும் மூன்று நேரமும் போதைக்குள்ளாகின்றவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் தான் குடிகாரர்கள். இவர்கள் தான் குடிக்கு அடிமையானவர்கள்.

இன்றைய நவீன யுகத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்குள் இளைஞர்கள் சிக்கி அதிலிருந்து வெளிவர முடியாமல் தவிக்கிறார்கள். இன்றைய இளைஞர்களில் பெரும்பாலானோர் தங்களது நடை, உடை, பாவனை மற்றும் பல்வேறுவிதமான விடயங்களில் தம்மை மாற்றியதோடு மட்டுமல்லாது மற்றவர்கள் முகம் சுழிக்கும் வண்ணம் நடந்து கொள்கிறார்கள். குடாநாட்டில் மதுபான நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க பாவனையும் அதிகரித்து முதலாம் இடத்தையும் பிடித்துக் கொண்டோம். இந்த விடயம் வேறு மாவட்டங்களிலும் பேசப்படுகின்றது. இதனைத் தக்க வைக்க முயலக் கூடாது. கசிப்பினது பாவனையும் அதிகரித்துள்ளது. கஞ்சாவின் பாவனையும் விட்டபாடில்லை. தீமையானதும் ஆபத்தானதுமெனத் தெரிந்தும் ஒவ்வொரு நாளும் மூன்று நேரமும் போதைக்குள்ளாகின்றவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் தான் குடிகாரர்கள். இவர்கள் தான் குடிக்கு அடிமையானவர்கள். இது பணவிரயத்தையும், மூளைப் பாதிப்பையும் இறப்புக்கான நோய்களைத் தோற்றுவிக்கும் எனத்தெரிந்தும் தொடர்ச்சியாக நேரத்துக்கு உணவு உட்கொள்வது போன்று குடியில் மூழ்குகிறார்கள். திருந்தாத இவர்கள் இனியும் திருந்துவார்களா?

பெரும்பாலான பகுதிகளில் மாலை வேளைகளில் கூடும் ஒரு சில இளைஞர்களால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். மாலை வேளைகளில் நண்பர்களுடன் சேர்ந்து மது பாவனையில் ஈடுபடுவதால் வீதியால் செல்லும் பொதுமக்களுடன் முரண்படுதல், யுவதிகளுடன் சேட்டைவிடுதல், முதியோரைக் கிண்டல் செய்தல், குழுச்சண்டையில் ஈடுபடுதல், வாள்வெட்டில் ஈடுபடுதல் மற்றும் கடத்தல் போன்ற தீயசெயல்களிலும் ஈடுபடுகின்றனர். இதனால் இளம் வயதில் குற்றவாளியாவதும், தண்டனைபெறுவதும் சிறை செல்வதும் குடும்பத்துக்கு இழுக்கை ஏற்படுத்துவதும் தம்மைத் தாமே அழித்துக் கொள்வதும் எதிர்காலம் சூனியமாவதும் நடைபெறுகின்றது. ஒவ்வாத ஒழுக்கங்களில் ஈடுபட்டு மோகம் கொண்டு திளைப்பதால் சமுதாய ஒழுக்கக் கட்டமைப்பானது ஆபத்தின் விளிம்புக்குச் செல்கின்றது. இது எமக்குத் தேவைவயா? இவர்களும் எமக்குத் தேவையா?

கசிப்புக்காய்ச்சுபவர்கள், கஞ்சா கடத்துபவர்கள், களவு கொள்ளை, வன்புணர்வு, கொலை என்பவற்றில் ஈடுபடுபவர்கள் அடுத்தவரின் மனைவியை, கணவனை நாடுபவர்கள், காதலித்துவிட்டு ஏமாற்றுபவர்கள், திருமணம் முடிந்த பின் மணம் முடிக்காத பெண்ணுடன் கள்ளத்தொடர்பைக் கொண்டிருப்பவர்கள். கடும் புகைத்தலில் ஈடுபட்டு தன்னை நோயாளி ஆக்கி குடும்பத்துக்கு பாரமாக இருப்பவர்கள் சமூகத்திலிருந்தென்ன லாபம்?

ஆண்டவன் எமக்கு வளமாக மகிழ்வாக வாழ்வதற்கு அருள் புரிந்துள்ளான். இதனை விடுத்து பலர் வாழ்க்கைக்கு பாதகம் செய்கின்றனர். வாழ்க்கைக்கு ஒவ்வாத தீய செயல்களில் ஈடுபட்டால் பாதகமான விளைவுகள் தான் ஏற்படும் எனத்தெரிந்தும் மனம் போன போக்கில் வாழ்க்கையை வாழ முற்படுவதால் அவர்களைத் திருத்தமுடியாதுள்ளது. திருந்தாத ஜென்மங்கள் சமூகத்தில் இருந்தென்ன இலாபம்? எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மிருதுளா @mrithulaM

இறந்த பின் தன்னைத் தூக்கிப் போடுவதற்காக எவருக்கும் அன்பு காட்ட வேண்டியதில்லை,
நாற்றமடிக்கும் பிணத்தை எவரும் சகித்துக்கொள்ளப் போவதுமில்லை..

பிச்சைக்காரர்: அம்மா தாயே... பிச்சை போடுங்க, நான் வாய் பேச முடியாத ஊமை.

வீட்டுக்காரம்மா: பக்கத்து வீட்டிலை போய் கேளுப்பா... எனக்கு காது கேட்காது.



படித்ததில் பிடித்தது

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 9 | 7 | 8 | 2 | 6 | 4 |
| 9 | 6 | 4 | 2 | 5 | 1 | 7 | 3 | 8 |
| 2 | 7 | 8 | 3 | 4 | 6 | 5 | 1 | 9 |
| 8 | 9 | 6 | 1 | 3 | 7 | 4 | 2 | 5 |
| 5 | 2 | 7 | 6 | 9 | 4 | 1 | 8 | 3 |
| 3 | 4 | 1 | 8 | 2 | 5 | 9 | 7 | 6 |
| 6 | 5 | 9 | 7 | 8 | 2 | 3 | 4 | 1 |
| 4 | 1 | 2 | 5 | 6 | 3 | 8 | 9 | 7 |
| 7 | 8 | 3 | 4 | 1 | 9 | 6 | 5 | 2 |



# கானா பாடலுடன் ஒரு படம்

'சித்திரம் பேசுதடி' படத்தில் 'வால மீனுக்கும் வெலங்கு மீனுக்கும் கல்யாணம்..' பாடலுக்கு இசை அமைத்தவர் சுந்தர்.சி.பாபு. வீணை சிட்டி பாபுவின் மகனான இவர் தற்போது 'அட்டி' படத்துக்கு இசை அமைத்திருப்பதுடன் படத்தை வெளியீடும் செய்கிறார். மா.கா.பா. ஆனந்த், அஷ்மிதா ஆகியோருடன் வில்லனாக நடிக்கிறார் ராம்கி. விஜயபாஸ்கர் இயக்குகிறார். ஒரு படத்தில் ஒரு பாடல் கானாவாக இருக்கும். இந்தப் படத்தில் எல்லாமே கானா. இதுபற்றி சுந்தர்.சி.பாபு கூறும்போது, "இப்படத்தில் மெலடிப் பாடல் என்று எதுவும் கிடையாது. 5 பாடலும் கானா பாடல் தான். பாடல் இசைக்கும் போதே ஆடப்போறவரின் கால்களில் வலி எடுக்கும் என்று நினைத்தேன். ஆனால் மா.கா.பா. ஆனந்த் நன்றாகவே ஆடியிருக்கிறார். எப்படித்தான் ஆடினாரோ என்று வியப்பாக இருந்தது" என்றார்.



கோபித்துக் கொண்டால் சமைக்காமல் படுத்துக்கொள்வது மனைவி.

சமைத்து விட்டுச் சாப்பிடாமல் படுத்துக் கொள்வது அம்மா.

தாயை நேசி






# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம் :** உங்களின் கருத்தை, குடும்பத்தினர் ஏற்கத் தயங்குவர். தொழிலில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்க, கூடுதலாக பணிபுரிவது அவசியம். மிதமான இலாபம் கிடைக்கும். பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**இடபம் :** சொந்த பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழிலில், உற்பத்தி, விற்பனை, சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம் :** மனதில் புத்துணர்வு நிறைந்திருக்கும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில், உற்பத்தி, விற்பனை, திருப்திகரமாக அமையும். சேமிக்கும் அளவில் வருமானம் வரும். மனைவியின் அன்பில் மகிழ்வீர்கள்.

**கடகம் :** பெருந்தன்மையுடன் பிறருக்கு விட்டுக் கொடுப்பீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை, சராசரி அளவில் இருக்கும். இலாபம் சுமார். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். உடல் நலனில் அக்கறை கொள்வது அவசியம்.

**சிங்கம்:** செயலில் திறமை வெளிப்படும். அரிய செயலையும் விடாமுயற்சியால் நிறைவேற்றுவீர்கள். தொழிலில், சாதனை படைப்பீர்கள். தாராள இலாபம் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கன்னி:** அவசரப் பணி உருவாகி, அதனால் சிரமம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள, அனுகூலத் தன்மையைப் பாதுகாப்பது அவசியம். இலாபம் சுமார். உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**துலாம்:** நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்குப் பாராட்டு, வெகுமதி வந்து சேரும்.

**விருச்சிகம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பு வரும். அரசியல்வாதிகளுக்கு நன்மை மேலோங்கும்.

**தனுசு:** எதிரிகளின் விமர்சனத்திற்கு ஆளாவீர்கள். இலட்சியங்களை உணர்ந்து செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். இலாபம் சுமார். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**மகரம்:** செயலில், நிதானத்தை பின்பற்றுவது அவசியம். தொழிலில், உற்பத்தி, விற்பனை, திட்டமிட்ட இலக்கை அடைய, அவகாசம் தேவைப்படும். மிதமான இலாபம் கிடைக்கும். புத்திரரின் நற்செயல் நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**கும்பம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். திட்டமிட்டுப் பணிபுரிந்து, தொழிலில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். உபரி பணவரவு கிடைக்கும். பெண்கள், கலையம்சம் நிறைந்த பொருளை வாங்கி மகிழ்வர்.

**மீனம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். தொழிலில், திட்டமிட்ட உற்பத்தி, விற்பனை இலக்கு பூர்த்தியாகும். இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். குடும்பத்தில், மாங்கல நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரச் சிற்பங்கள்

## இது புதுசு

நவீன மரச் சிற்பங்கள் அறிமுகமாகியுள்ளன. மரப்பொருள்களால் நவீனமான உருவங்கள் செதுக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றை பரிசுப்பொருள்களாகவும், மேசை அலங்காரப் பொருள்களாகவும் உபயோகிக்கலாம். 500 ரூபாவில் இருந்து 650 ரூபா வரை விற்பனை செய்யப்படுன்றன.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 800 | – | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 530 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 500 | 700 |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 300 | 200 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 600 | – | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 500 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | 370 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 200 | 360 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | – | 160 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 350 | 200 | – |

# நாளை

ஆனி-26
ஞாயிற்றுக்கிழமை - 10.07.2016
திதி: ஷஷ்டி மா.05.15 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.இ.12.30 வரை
ராகுகாலம்: 04.28-05.58 வரை
சுபநேரம்: 08.58-10.28 வரை
குமார ஷஷ்டி விரதம்

# நெய் பிஸ்கட்

**தேவையானவை**

**கோதுமை மா - முக்கால் கப்**
**பேக்கிங் பவுடர் - கால் கரண்டி**
**சீனிப் பவுடர் - அரைக்கப்**
**உருக்கிய நெய் - அரைக்கப்**

**செய்முறை**

கோதுமை மாவில் பேக்கிங் சோடாவைக் கலந்து அரிக்கவும்.

இதனுடன் சீனி, நெய் சேர்த்துப் பிசையவேண்டும்.

இதை சிறிய சிறிய உருண்டையாக எடுத்து கையால் அழுத்தி வட்ட வடிவமாக்கி வைக்கவும்.

இந்த பிஸ்கட்டுக்களை நெய் தடவிய தட்டில் வைத்து ஓவனில் 15 நிமிடம் வைத்து எடுக்கவும்.

சூடாக இருக்கும்போது பிஸ்கட்டுக்களின் மேல் நெய் தடவினால் பளபளப்பாக இருக்கும்.





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 160 | 80 | 40 | – | 40 |
| கத்தரி | 100 | 80 | 90 | 100 | 80 | 100 | – | 60 |
| கரட் | 200 | 200 | 160–200 | 240 | 200 | 200 | – | 180 |
| மரவள்ளி | 100 | 80 | 100 | 80 | 90 | 100 | – | 50 |
| பயிற்றை | 120 | 80 | 100 | 100 | 80 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 80 | 200 | 240 | 180 | 220 | – | 240 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 140 | – | 120 | 160 | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 100 | 160 | 140 | 120 | – | 100 |
| பூசணி | 70 | 120 | 140 | 160 | 120 | 140 | – | 100 |
| தக்காளி | 200 | 240 | 240 | 260 | 220 | 250 | – | 160 |
| வாழைக்காய் | 100 | 80 | 140 | 100 | 120 | 80 | – | 50 |
| கீரை | 15 | 30 | 20 | 20 | 20 | 20 | – | 10 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 600 | 600 | 600 | 600 | – | 450 |
| புடோல் | 60 | 80 | 80 | 100 | 60 | 60 | – | 60 |
| கோவா | 170 | 140 | 150 | 140 | 140 | 180 | – | 120 |
| வெண்டி | 100 | 80 | 80 | 120 | 120 | 80 | – | 60 |
| போஞ்சி | 200 | 180 | 180 | 140 | 200 | 180 | – | 200 |
| லீக்ஸ் | 150 | 140 | 120–200 | 200 | 180 | 200 | – | 190 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 25–30 | 30 | 30 | – | 20 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 250 | 160 | 200 | 160 | 140 | 80 | – | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 320 | 200 | 240 | 300 | 200 | – | 250 |
| இராசவள்ளி | 160 | – | – | 300 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 300 | 300 | 600 | – | 300 |

# அவசரத்துக்குக் கைகொடுக்கும் சமையல்

- அவலில் சிறிது தண்ணீர் தெளித்து நனைத்து அதில் சிறிளவ மிளகுத்தூள் சேர்த்து, தேங்காய்த் துருவலையும் சேர்த்து வேக வைத்தால் மாலை நேரத்துக்கு ஏற்ற உறைப்புச் சிற்றுண்டி தயார்.
- அவலை நனைத்து அதில் தேங்காய்ப் பூ, சீனி, ஏலக்காய்த்தூள் ஆகியவற்றைச் சேர்த்து வேகவைத்தால் இனிப்பு உணவு தயார்.
- அவலை நொறுக்கி தண்ணீரில் கலந்து, சீனி, தேங்காய்ப்பால், முந்திரிப் பருப்பு, ஏலக்காய்த்தூள் ஆகியவற்றைச் சேர்த்து அவல்ப் பாயசம் செய்யலாம்.
- அவலை நொறுக்கி, தயிர், வெங்காயம், சிறிது இஞ்சி, கறிவேப்பிலை பச்சை மிளகாய்ச் சேர்த்து வேக வைத்தால் தயிர்ச் சாதம் தயார்.
- கரட்டைத் துருவி, அதில், மிளகாய், சீரகத்தூள், வெங்காயம், கறிவேப்பிலை, தேவையான அளவு உப்பு போட்டு ஒரு சில நிமிடம் வே வைத்து அதில் தேங்காய்த் துருவல் சேர்த்தால் கரட் பொரியல் தயா
- பச்சைப்பூசணி அல்லது கரட்டை அரைத்து அதில் தயிர், சீரகத்தூள், வெங்காயம், கறிவேப்பிலை சேர்த்தால் பச்சடி தயார் ஆகிவிடும்.
- கரட், உருளைக்கிழங்கு ஆகியவற்றை அரிந்து சேர்த்து வைத்துக்கொண்டு பச்சை மிளகாய், தேங்காய், கறிவேப்பிலை, சீரகம் ஆகியவற்றை அரைத்து தயிரும் சேர்த்துக் கிளறினால் அவியல் தயார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கு அவசிய சாதனங்கள் கையளித்த பீப்பிள்ஸ் லீசிங்



தனது 20 வருட பூர்த்தியை கொண்டாடும் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, 15 அரச வைத்திய சாலைகளின் அவசர சிகிச்சை பிரிவுகளுக்கு 24 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான அத்தியாவசிய அறுவைச் சிகிச்சை சாதனங்களைக் கையளித்தது. அதனோடிணைந்து பொதுமக்கள் மத்தியில் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'வீதி விபத்துக்களை தவிர்ப்போம்' எனும் தொனிப்பொருளில் நடை பவனி நிகழ்வொன்றையும் பீப்பிள்ஸ் லீசிங் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது.

அறுவைச் சிகிச்சை சாதனங்கள் நன்கொடை வழங்கும் நிகழ்வு பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் தலைமை நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான டி.பி.குமாரகே மற்றும் பீப் பிள்ஸ் லீசிங் பணிப்பாளரும், மக்கள் வங்கியின் பிர தம நிறைவேற்று அதிகாரியுமான வசந்தகுமார் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது. இதன்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின், மறுசீரமைப்பு செய்யப்பட்ட பயிற்சி நிலையத்தின் கேட்போர்கூடம் திறந்து வைக்கப்பட்டது. 15 அரச வைத்தியசாலைகளுக்குமான அறுவைச் சிகிச்சை சாதனங்கள், பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான டி.பி.குமாரகேயினால், இலங்கை எலும்புமுறிவு சீராக்கல் மருத்துவர்கள் சம்மேளனத்தின் தலைவர் மருத்துவர்.எச்.ஜே.சுரவீரவிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

மேலும், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க மேற்கொண்ட வேண்டுகோளுக்கிணங்க, கொழும்பு தேசிய வைத்திய சாலையின் விபத்து மற்றும் எலும்பு முறிவு சிகிச்சை பிரிவின் பயிற்சி நிலையத்தின் கேட்போர்கூடத்தை 4 மில்லியன் ரூபர் செலவில் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மறுசீரமைப்பு செய்திருந்தது. இந்தக் கேட்போர்கூடம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகளின் பின்னர் இந்த மறுசீரமைப்பு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மறுசீரமைப்பு செயற்பாடுகளின் கீழ், கேட்போர்கூடத்தின் ஒளியேற்றல் மின் கட்டமைப்புகள் மற்றும் கதிரைகள் பழுதுபார்ப்புகள், சீலிங் கூரை மற்றும் சுவர்கள் பழுதுபார்ப்புகள் மற்றும் புதிய வாயு குளிரூட்டி நிறுவும் செயற்பாடுகள் ஆகியன முன்னெடுக்கப்பட்டிருந்தன. கணினிகள், அச்சு இயந்திரங்கள் மற்றும் ஸ்கானர்கள் ரூபவ் டிஜிற்றல் கமரா, புரொஜெக்டர், புரொஜெக்டர் திரை, மேடை, இரு மடிக்கணினிகள், வெண் திரைகள் மற்றும் தொலைக்காட்சி போன்றனவும் பீப்பிள்ஸ் லீசிங்கினால் வழங்கப்பட்டிருந்தன.

கொழும்பில் 'வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்' எனும் தொனிப்பொருளில் நட்புறவு நடை பவனி நிகழ்வையும் பீப்பிள்ஸ் லீசிங் ஏற்பாடு செய்திருந்தது. பீப்பிள்ஸ் லீசிங் தலைமையகம் மற்றும் அதன் கிளைகள் ஆகியன இணைந்து இந்த நடைபவனியை ஏற்பாடு செய்திருந்ததுடன், இதில் பீப்பிள்ஸ் லீசிங்கின் துணை நிறுவனங்களான பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டெட், பீப்பிள்ஸ் மைக்ரோ-ஃபினான்ஸ் லிமிட்டெட், பீப்பிள்ஸ் லீசிங் புரொபர்டி டிவலப்மன்ட் லிமிட்டெட், பீப்பிள்ஸ் லீசிங் ஃப்லீட் மனேஜ்மன்ட் லிமிட்டெட் மற்றும் பீப்பிள்ஸ் லீசிங் ஹவ்லொக் புரொப்பர்டீஸ் லிமிட்டெட் ஆகியனவும் தமது பங்களிப்பை வழங்கியிருந்தன. (த)

**வணிகம்**

# ஆரிக் மாநாட்டுக்கான இணையம் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைப்பு

எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள ஆசிய ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை மாநாட்டுக்கான (AHTIC) உத்தியோகபூர்வ இணையத்தளம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.


இதேவேளை-இந்த மாநாட்டுக்கான ஆரம்ப நிகழ்வுகள் கடந்த ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் டுபாயில் நடைபெற்றிருந்தது. இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகவும், இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ் புல்லாஹ் சிறப்பு அதிதியாகவும் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

"இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் சுற்றுலாத்துறை என்பது மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்தத் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதாயின் இவ்வாறான மாநாடுகள் இடம்பெறவேண்டும். இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். இது எமக்கு சிறந்ததோர் வாய்ப்பாகும்"- என்றார் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ் புல்லாஹ்

(த)

CSE
COLOMBO STOCK EXCHANGE

| 8/7/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| [illegible] | | [illegible] | [illegible] |
| ASPI | 55.62 | 6,366.31 | 6,310.69 |
| S&P SL20 | 31.28 | 3,357.51 | 3,326.23 |
| வியாபாரப்புரள்வு | | 1,015,057,088 | 960,890,816 |
| உள்நாடு- கொள்வனவு | | 357,622,368 | 195,737,568 |
| விற்பனை | | 537,331,776 | 662,701,120 |
| வெளிநாடு- கொள்வனவு | | 657,434,752 | 765,153,216 |
| விற்பனை | | 477,725,376 | 298,189,664 |



பங்குச் சந்தை தகவல்கள்

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| [illegible] | LLUB.N | 152.5 | 2,692,351 | 403,866,153 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 140.7 | 1,234,532 | 173,698,195 |
| எக்ஸ்போ | EXPO.N | 6.8 | 13,276,723 | 87,516,974 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.W | 7.4 | 10,685,976 | 75,760,101 |
| நஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N | 169 | 298,394 | 50,724,142 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 81.00 | 325,578 | 26,373,436 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 123.6 | 131,848 | 16,230,342 |
| [illegible] | REG.N | 152.80 | 93,686 | 14,234,163 |
| [illegible] | KAPI.N | 39.4 | 311,922 | 11,815,954 |
| [illegible] | AAIC.N | 22 | 446,329 | 9,575,308 |


அறிவித்தல்கள் -

பங்குலாபம்

[illegible]

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| [illegible] | 294 |
| [illegible] | 219 |
| [illegible] | 13.1 |
| [illegible] | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

## நுட்பம்



### வெளிச்சக்தியின்றி செயற்படும் நுண்ணுயிர் எரிபொருள் கலம்

முதன்முறையாக விஞ்ஞானிகள் மின் சாரத்தை உருவாக்கும், வெளிச்சக்தி ஏதுமின்றி செயற்படக்கூடிய நுண்ணுயிர் எரிபொருள்கலம் ஒன்றைஉருவாக்கியுள்ளனர். இதன்மூலம் இனிவரும் காலங்களில் பக்ரீரியாக்களைக் கொண்டு தேவையான மின்சாரத்தை உருவாக்க முடியும் எனச் சொல்லப்படுகிறது.

நுண்ணுயிர் எரிபொருள் கலமானது பக்ரீரியாக்களின் செயற்பாட்டை பயன்படுத்தி உணவிலுள்ள இரசாயனச்சக்தியை உடைத்து இலத்திரன்களை வெளியேற்றுகின்றது.

இந்த வெளியேற்றப்பட்ட இலத்திரன்கள் பின்னர் மின் சக்தியாக மாற்றப்படுகிறது.

ஆனாலும், தொடர்ச்சியாக உணவு வழங்கலை உறுதிப்படுத்துவதற்கு, அதற்கான உணவு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

உணவு வழங்கல் நிறுத்தப்படும்போது இலத்திரன்கள் பிறப்பிக்கப்படுவதும் நிறுத்தப்படுகின்றது.

இதற்கென இதுவரை காலமும் வெளிவாரியாக சக்தியைப் பிரயோகிக்க வேண்டிய தேவை இருந்து வந்தது.

தற்போது அயோவா ஸ்டேட் பல்கலைக்கழக குழுவொன்று 3டி பேப்பர் பியூவல் செல் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இங்கு தானாகவே உணவு வழங்கல் நடைபெறுகிறது. இங்கு பொட்டாசியம் பெரிசயனைட் எனும் இரசாயனம் உணவாக வழங்கப்படுகிறது.

இதன் மூலம் வெளிவாரியான சக்தியின்றி தொடர்ச்சியாக 5 நாள்களுக்கு மின்சாரத்தை பிறப்பிக்க முடிந்ததாக தெரிய வருகிறது. இந்த நுண்ணுயிர்கலத்தின் தொழிற்பாடு சாதாரண பற்றரியின் தொழிற்பாட்டை ஒத்தது. (த)




### சிறப்பான செல்பி எடுக்க ஹானர் 5 சி

இந்திய தொடுபேசிச் சந்தையில் புதுவரவான ஹானர் 5சி குறைந்த விலையில் மற்ற கருவிகளுக்குப் போட்டியாக அமைந்துள்ளது. இதற்குப் பலம் சேர்க்கும் வகையில் இந்தக் கருவியின் வடிவமைப்பு மற்றும் சிறப்பசங்கள் அமைந்துள்ளன.

இந்திய சந்தையில் மலிவு விலையில் அதாவது ரூபா 10,999 இக்கு இந்தக் கருவி வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறைந்த விலையிலும் சக்தி வாய்ந்த பிராசஸரான கிரின் 650 சிப்செட் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை-5.2 இன்ச் எச்டி ஐபிஎஸ் திரை, 2 ஜிபி ரொம், 16 ஜிபி இன்டேர்னல் மெமரி மற்றும் 13 எம்பி பிரைமரி கமராவும் 8 எம்பி முன்பக்க கமராவும் வழங்கப்பட்டுள்ளன.

ஹானர் 5சி கமராவுடன் எல்இடி பிளாஷ், நைட் மோட் மற்றும் பல்வேறு கமரா அம்சங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் பயனர்கள் அழகான புகைப் படங்களை எடுக்கமுடியும். மேலும், சிறப்பான செல்பி எடுக்க ஏதுவாக 8 எம்பி முன்பக்க கமராவும் வழங்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக நியம

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு தெரிவித்தது.

இது தொடர்பில் அந்த அமைப்பு குறிப்பிட்டதாவது: பூமி தன்னைத்தானே ஒரு முறை சுற்றிவர 24 மணி நேரம் ஆகிறது. அதனை ஒருநாள் என்கிறோம். ஒரு நாள் என கணக்கிடப்படும் 24 மணிநேரம், நிமிடம், விநாடி எனப் பகுக்கப்படுகிறது. பூமியின் சுழற்சி வேகத்தை அடிப்படையாகக் கொண்டுதான் நேரம் கணக்கிடப்படுகிறது. எனினும், அதிநவீன அணுவியல் கடிகாரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் பூமியின் சுழற்சியைச் சாராமலேயே நேரம் மிகத் துல்லியமாகக் கணக்கிடப்பட்டு வருகிறது.

அணுவியல் கடிகாரத்தின் நேரத்தைவிட பூமி தினமும் 1.5 முதல் 2 மில்லி விநாடிகள் மெதுவாகச் சுழல்கிறது. இதன் காரணமாக 500 முதல் 750 நாள் கால அளவில் பூமி சுழற்சியின் அடிப்படையிலான நேரத்திற்கும், துல்லியமான அணுவியல் கடிகார நேரத்திற்கும் சுமார் ஒரு விநாடி வேறுபாடு காணப்படுகிறது. இதை ஈடு செய்ய உலகக் கடிகாரங்களில் ஒரு விநாடி கூடுதலாகச் சேர்க்கப்படுகிறது. அந்த ஆண்டின் ஏதாவது ஒரு நிமிடத்திற்கு 61 விநாடிகள் இருக்கும்.

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி நள்ளிரவு 11 மணி 59 நிமிடம் 59ஆவது விநாடிக்குப் பின்னர் கூடுதலாக ஒரு விநாடியை சேர்க்க முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக 11.59.59 மணிக்கு அடுத்த விநாடியும் 11.59.59 மணியாக இருக்கும்.

1972ஆம் ஆண்டில் இருந்து இதுவரை உலகக் கடிகாரங்களில் 26 முறை விநாடிகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டன. இறுதியாக கடந்த ஆண்டு ஜூன் 30ஆம் திகதி ஒரு விநாடி சேர்க்கப்பட்டது. இவ்வாறு சேர்க்கப்படும் விநாடி லீப் விநாடி என அழைக்கப்படுகிறது. உலகக் கடிகாரங்கலில் கூடுதல் விநாடிகள் சேர்க்கப்படும் போதெல்லாம், பூமியின் சுழற்சி வேகம் குறைந்து வருகிறது. அதனால்தான் விநாடிகள் கூடுதலாக சேர்க்கப்படுகின்றன என அமெரிக்கக் கடற்படை வானாய்வு அமைப்பு தெரிவித்தது.

(வ-21)

## பொருளாதார

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓமந்தை இரண்டு காணிகளையும் பார்வையிடவுள்ளேன். இதில் எந்தக் காணியை உடனடியாகப் பெற முடியும் என்பது ஆராயப்படும். இதன்போது வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள்.

இந்த விடயங்களை முடித்துக் கொண்டு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை நேரில் சந்திப்பேன். இதன் பின்னர் ஞாயிற்றுக் கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும். இறுதி முடிவை முதலமைச்சரே அறிவிப்பார்.

பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பில் இனி அரசியல் ரீதியான முடிவே எடுக்க வேண்டும். நீண்ட காலத்தை இதற்காகக் கடத்தி விட்டோம். இனி அரசியல் ரீதியில்தான் முடிவு எடுக்கப்பட வேண்டும். நாம் அரசியல் தலைமைத்துவம் இல்லாதவர்கள் – முடிவு எடுக்கத் தெரியாதவர்கள் என்பது போல காண்பிக்க முயற்சிக்கப்படுகின்றது. அதற்கு அனுமதிக்க முடியாது.

இந்த விடயத்தில் தீர்க்கமான – இறுதியான முடிவு ஞாயிற்றுக்கிழமை (நாளை) எடுக்கப்படும். முடிவு எடுக்கப்படும்போது மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்படும். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் எந்த இடத்தை தேர்வு செய்கின்றார்கள் என்பதையும் கருத்தில் கொள்வோம்" – என்றார்.

இதற்கிடையே பொருளாதார மத்திய நிலையத்தை எங்கு அமைப்பது என்பது தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முதலமைச்சர் கருத்துக் கேட்ட போது அதிகளவானோர் தாண்டிக் குளத்திலேயே அது அமைய வேண்டும் எனக் கூறியிருக்கின்றனர் என்று அறிய வந்தது. இந்தக் கருத்தறிவை நடத்தி இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவுக்கு வருமாறு முதலமைச்சருக்குக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தார்.

(உ-வ-5-21)

## பதவியிலிருக்கும்

தெரிவித்தாலும், நான் அதற்கு அனுமதிக்கப்போவதில்லை. இலங்கையின் சுதந்திரம்,

இறையாண்மை போன்றவற்றுக்கு சவால் விடுக்கும் வகையில் எந்தவித தேசிய மற்றும் பன்னாட்டு நடவடிக்கைகளுக்கும் நான் இடமளிக்கமாட்டேன். நாட்டின் சுதந்திரம் மற்றும் விடுதலைக்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தயங்கமாட்டேன்" என்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இதன் மூலம் போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களின் பங்களிப்பை இலங்கை அடியோடு நிராகரித்துள்ளது. அரசமைப்பின் படி இவர்களை நியமனம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது. மைத்திரியின் இந்த அறிவிப்பு ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கையும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தில் இருந்து அது விலக முடிவு செய்துவிட்டதாகவே கொள்ளப்படும் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-வ-4)

## பருத்தித்துறை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதியதனால் விபத்து ஏற்பட்டது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பஸ் சாரதி கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,ரி,26)

## கொத்துக்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து பொன்சேகா தெரிவித்ததாவது:

"இலங்கை இராணுவம் இறுதிப் போரின்போது கொத்துக்குண்டுகளைப் பயன்படுத்தவில்லை. அவற்றை வாங்குவதற்குரிய பணபலமும் இருக்கவில்லை. எனவே, இது பற்றி எங்கு வேண்டுமானாலும் சாட்சியமளிப்பதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்" என்றார் அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா.

(வ-4)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சுப்பிரமணியம்

(முன்னாள் மதுவரி உத்தியோகத்தர், மத்தியஸ்தர்சபை உறுப்பினர், வலிகாமம் மேற்கு, சமாதான நீதிவான்- வலிகாமம் மேற்கு, முன்னாள் மயிலயற்புல கந்தசாமி ஆலய தலைவர், தற்போதைய உபதலைவர்)



தோற்றம்:-29.07.1937
மறைவு :-05.07.2016

யாழ்.வட்டுக்கோட்டை, அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுப்பிரமணியம் 05.07.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சிங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாக்கியமணி மற்றும் சிவகாமி அம்மையார் ஆகியோரின் அன்புக் கணவரும், செல்வகுமார், ஜெயக்குமார், சுபாஜினி, நவமலர், நவரஞ்சினி, இந்திரகுமார், விஜயகுமார், கிஸ்ணகுமார், யுவாஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், தணியாசலம் பிள்ளை, சண்முகவடிவேல், மகமாரியம்மா, புனிதவதியம்மா, பரமகுருநாதன், காலஞ்சென்ற சிவலட்சுமியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,உதயநிதி, புஸ்பலதா, சந்திரகுமார், குமரன், செல்வராணி, பவானி ஆகியோரின் அன்பு மாமனாரும், அணோயன், தர்ஷா, நிரோஷன், சௌமியா, கிருசியா, பவித்ரா, கீர்த்திகா, கேதீஸ்குமார், சுஜிதா, சுலோஷனா, சுபரஞ்சினி, ஆரணி, ஆரபி, விபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் அராலி வடக்கு வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலிவடக்கு,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல்:மனைவி, பிள்ளைகள்
077 169 7776,
077 271 1243 (J/2728) (11,17,18)

செல்வகுமார் -பிரான்ஸ்- +337 820 77865,
ஜெயக்குமார் - பிரான்ஸ் - +339 513 94305,
+336 526 35677, விஜயகுமார் - பிரான்ஸ்

## இரண்டாம் ஆண்டு நினைவுகள்



திருமதி
மாணிக்கம்மா
கந்தசாமி

பிறப்பு
22.10.1947

இறப்பு
04.07.2014

திதி: 09.07.2016

என்றும் எம்
நினைவுகளில்

மந்துவில்கிழக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.
077 365 8303

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### தெயுராஜ் கீதப்பிரியன்



தாய் மடியில்
23.05.2011

இறைவன் அடியில்
09.06.2016



எங்கள் குல விளக்காய் உதித்த நீ
எங்களைப் பாதியிலே
விட்டுப் போவதற்கா?
என் கருவில் பத்துமாதம் இருந்தாய் நீ..
ஐந்து வருடம் எம்முடன் வாழ்வதற்கா?
எமைப் பிரிந்து நீ சென்று
முப்பத்தொரு நாள்கள் ஆனாலும்
என்றும் நீ
எங்கள் நெஞ்சில் வாழ்ந்திருவாய்

குடும்பத்தினர்.
நெல்லொருபதி பிள்ளையார் கோயில் வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சலசாதேவி
அரியபுத்திரன்

அன்னை மடியில்
17.02.1945

ஆண்டவன் அடியில்
21.06.2015

திதி:- பஞ்சமி -
09.07.2016

அன்னை உள்ளம் அன்பு வெள்ளம்
தன்னை உருக்கி எம்மைப் பெருக்கி
நினது சாதனை எமக்குப் போதனை
அம்மாவை நினைக்கின்றோம் அம்பாளாய் நினைக்கின்றோம்

அறிவானாய் அன்பானாய் அறமானாய் அன்னையே!
அருளாய் அனுபவமாய் அரவணைத்த அம்மையே!
அதிமதுரமாய் அருளாய் அத்திவாரமான அமரரே!
அடிப்படை அகலொளிக்கு அமுதமுது அர்ச்சிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல.9, மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்...

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை
மடியில்
02.06.1966



ஆண்டவன்
அடியில்
09.07.2010

### அமரர் கந்தையா சிவகுமார்

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இலக்கணமாய் வாழ்ந்து வழிகாட்டிய
எமது அன்பின் குல விளக்கே
அவனிதனில் எமை விட்டுப் பிரிந்து
ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன
ஆனால் நீர் எம் மனதைவிட்டு என்றுமே நீங்கவில்லை.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,
சாவகச்சேரி.

சி.கந்தையா (தந்தை),
க.வாமதேவி (தாய்),
சகோதரர்கள், உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமற்போனோரின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அமைப்பு தெரிவித்ததாவது:

காணாமற்போனோரது குடும்பங்களைச் சேர்ந்த சில பெண் களிடம் பாலியல் இலஞ்சம் கோரப்பட்டது. குறிப் பாகக் குற்றப் புலனாய்வு பிரிவு, பயங்கரவாத தடுப்புப் பிரிவு, துணை இராணுவக் குழுக்கள் மற்றும் அரசியல் வாதிகள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆகவே அது தொடர்பில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தங்களது உறவினர்களைத் தேடித்தருமாறுகோரி பலர் பெருந்தொகைப் பணத்தைக் குற்றப்புலனாய் வுப் பிரிவு, பயங்கரவாத தடுப்புப் பிரிவு, துணை இராணுவக் குழுக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகி யோருக்கு வழங்கியுள்ளனர்.

அதனை மீளப்பெற்றுக்கொடுப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஏற்கனவே விசாரணை களை மேற்கொண்ட ஆணைக்குழுக்களிடம் தகவல்கள் பெறப்பட்டு அவை வெளிப்படுத்தவேண்டும்.

காணாமற்போனவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பார் களாயின், அவர்களது பெயர் விவரங்கள், எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள், விடுதலை செய்யப் பட்டிருந்தால் அவை அது தொடர்பிலான தகவல்களை வெளிப்படுத்தவேண்டும்.

காணாமற்போனோர் தொடர்பிலான விட யங்களை அணுகுவதற்காக அமைக்கப் படவுள்ள அலுவலகத்தின் பெயரை மாற்ற வேண்டும் என பாதிக்கப்பட்ட தமிழ் மக் கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்தக் கோரிக்கையில் நியாயம் இருக் கின்றது.அரசு அதனைக் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் . காணாமற் போன தனது கணவர் தொடர்பிலான சான் றிதழ் ஊடாக அவரது வங்கி கணக்கை கையாள்வது உள்ளிட்ட அனைத்து விடயங் களையும் அவரது மனைவி செய்யக்கூடிய வழிவகைகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

தனியார் நிறுவனங்களும் குறித்த சான் றிதழை அங்கீகரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

காணாமற்போனோர் தொடர்பிலான அலு வலகம், காணாமற்போன ஒரு தந்தை, அல்லது கணவரினால் ஏற்பட்ட கடன் சுமையைக் குறைப்பதற்கு வழியமைக்க வேண்டும்.

போரின் போதும், அதற்குப் பின்னரும் கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும், சரண டைந்த நிலையிலும் ஏராளமானோர் காணாமற் போகச் செய்யப்பட்டுள்ள தால் பெண்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள னர். இதனால் குறித்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் தெரிவின்போது பெண்களின் பிரதிநிதித்துவம் 50 வீதத்திற் கும் அதிகமாக இருக்கவேண்டும்.

2013ஆம் ஆண்டு முதல் கொழும்பிலும், வடக்குக் கிழக்கிலும் காணாமற்போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற் கொண்டுவந்த ஓய்வு பெற்ற நீதிபதி மக்ஸ்வெல் பரண கம தலைமையி லான ஜனாதிபதி ஆணைக்குழு, மக் கள் மத்தியில் நம் பிக்கையை இழந்து விட்டது.

பரணகம ஆணைக் குழுவின் விசார ணைகள் செயற்றி றன் அற்றதாகக் காணப்பட்டன. பாதிக் கப்பட்டவர்கள் தங் கள் பிரச்சினை களை முழுமையாக வெளிப்படுத்து வதற்கு வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அவர்கள் பேசிக் கொண்டிருக்கையி லேயே இடையூறு விளைவிக்கப்பட் டது அல்லது குறுக்கு விசாரணை மேற் கொள்ளப்பட்டது.

வடக்குகிழக்கில்நாங் கள் ஏற்கனவே பாதிக்கப்பட்ட 300 பேருடனும், 100 செயற்பாட்டாளர் களுடனும் கலந்து ரையாடியுள்ளோம். சாட்சியாளர்களின் பாதுகாப்பு, வெளிப் படைத்தன்மை, பாலின முக்கியத்து வம் மற்றும் சுதந் திரம் உறுதிப்படுத் தப்பட வேண்டும். காணாமற்போன வர்களின் குடும் பங்கள் மீதான கரி சனை கருத்திற் கொள்ளப்படவேண் டும் –என்றார்.

(வ–21)


### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 26.05.2016 அன்று சிவபதம் எய்திய எமது செல்வப் புதல்வி



அமரர் செல்வி

**தர்மகுலசிங்கம் (வவா)**

**துஷியந்தி (துஷி)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.07.2016) சனிக்கிழமை மு.ப. 10.00 மணிய ளவில் அவரது இல்லத்தில் நடை பெறும் அத்தருணம் தாங்கள் தங் கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

V.H லேன், இருபாலை. குடும்பத்தினர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 23 . 11 . 1958



மறைவு 09 . 06 . 2016

**அமரர் குழந்தைவேலு குலேந்திரராஜன்**

கடந்த 09.06.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.07.2016) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சாரதா வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி. குடும்பத்தினர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 06 . 05 . 1939



மறைவு 10 . 06 . 2016

அமரர்

**திருமதி தெய்வநாயகி வேலாயுதம்**

கடந்த 10.06.2016 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் திருமதி தெய்வநாயகி வேலாயுதம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 10.07.2016 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. குடும்பத்தினர்.
077 6109143

### கண்ணீர் அஞ்சலி



எமது சனசமூக நிலையத்தின் ஆயுட்கால உறுப்பினரும், தற்போதைய உப தலைவருமான ஆ.சத்தியமூர்த்தி அவர்களின் அன்பு மாமனார்

**சங்கரப்பிள்ளை நடராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றி ருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்.**

### 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**பொன்னு செல்வராசா**

தோற்றம் 05.10.1927
மறைவு 09.07.2007



ஒன்பது ஆண்டுகள் மறைந்து விட்டன
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகள்
எங்கள் உயிருள்ளவரை
உங்கள் நினைவுகள் தொடரும்

148,3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### மரண அறிவித்தல்

**இரத்தினசிங்கம் திருச்செல்வம் (கண்ணன்)**

பிறப்பு 11 . 11 . 1955



இறப்பு 08 . 07 . 2016

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தின சிங்கம் திருச்செல்வம் நேற்று (08.07.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம்-விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் இரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும் ஆரணி, நிசாந்தன், நிரோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் மதனகுமாரின் அன்பு மாமனாரும் கிஷானிக் காவின் அன்புப் பேரனும் குணசிங்கம் (இந்தியா), காலஞ்சென்ற தவராசா மற்றும் விஜயரட்ணம் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மலராஜினி, கனக ராணி, பத்மாஜினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுத்தனர்.

இறுதியாகக் கடந்த ஏப்ரல் மாதம் கேப்பாபிலவைச் சேர்ந்த ஒருவர் தனது காணியை விடுவிக்கக் கோரி உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தார். மூன்று நாள்களின் பின்னர் "கேப்பாபிலவு மக்களுக்கு நிரந்தர மான தீர்வு விரைவில் கிடைக்கும், அதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்றுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் வழங்கிய உறுதி மொழியையடுத்து அவர் போராட்டத்தைக் கைவிட்டார்.

"மக்கள் பிரதிநிதிகள் எங்களை மீளக் குடியமர்த்துவதாக தெரிவித்து 3 மாதங்களை கடந்து விட்டன. இன்றுவரை எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை. எனவேதான் மீண்டும் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளோம். இந்தமுறை இடம்பெறும் போராட்டம் நாம் கேப்பாபிலவில் குடியேறும் வரை தொடரும்.

பல வருடங்கள் வாழ்ந்த எங்களுடைய பூமியை அபகரித்துள்ள இராணுவம் எங்களை அங்கு குடியேறுவதற்கு தடை போடுகின்றது. இன்று விடுவிப்பார்கள், நாளை விடுவிப்பார்கள் எனக் காத்திருந்து காத்திருந்து எமது காலங்கள்தான் வீணாகிப் போய்விட்டன. புதிய அரசும் தீர்வை வழங்குவதாகத் தெரியவில்லை. நம்பி வாக்களித்த எங்களது ஆள்களும் இதைப் பற்றி அக்கறைப் படவில்லை. நாங்கள் சாகின்ற நேரத்திலாது எமது இடங் களுக்கு போக வேண்டும். இல்லை என்றால் அதுக்காக உயிரைத் துறப்பதற்கும் தயார். எனவேதான் இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள முடிவெடுத்துள்ளோம்'' என்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளவர்களில் ஒருவரான ஆறுமுகம் வேலாயுதம் தெரிவித்தார்.

இதற்காக நேற்று ஒரு கூட்டம் கூட்டப்படுவதாக இருந்தது. ஆனால் அந்த கூட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமைக்குப் பிற்போடப்பட்டது. அன்றையதினம் இடம் பெறும் கூட்டத்தைத் தொடர்ந்து முதியர்கள் 6 பேரும் போராட்டத்தை ஆரம்பிப்பர் என்று கோப்பிலவு மக்கள் தெரிவித்தனர். (வ-4,21,ரி7)

## திருமலையில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெண்ணின் சகோதரியின் கணவர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டார் என ஆரம்ப விசாரணைகளின் போது தெரியவந்தது. இது தொடர்பில்திருகோணமலை துறைமுகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் பின்னரே சம்பவம் தொடர்பான முழுமையான விபரங்கள் தெரிய வரும் என பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4)

## மரண அறிவித்தல்

### சண்முகம் நாகராசா



கூத்தாதோட்டம், வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு அல்வாயை (ஓடை) வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நாகராசா நேற்று (08. 07.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்-பறுவதம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமு-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னபூரணத்தின் பாசமிகு கணவரும் நந்திகா (ஆசிரியை யா/நாகர்கோயில் மகா வித்தியாலயம்), பிரதாப் (அபிவிருத்தி உத்தியோகத்தர் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜெயபிரகாஷ் (Quantity Surveyor-Qatar) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்ததாசன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி), சோபிகா (ஆசிரியை யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாகித்தியன் தசரத் (யா/ஹாட்லிக் கல்லூரி), கிஷாவ்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், அரு ளம்பலம், சுப்பிரமணியம் மற்றும் சின்னப்பிள்ளை, இராசமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, இரத்தின கோபால் மற்றும் இராசமணி, தங்கவேலாயுதம் , சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் ஆரம்பமாகி மு.ப 9.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விநாயகர் வீதி,
அல்வாய் தெற்கு.**

தகவல்: **குடும்பத்தினர்.
021 2262943**

## மரண அறிவித்தல்

### திருமதி யோகராணி அருளானந்தம்



70/21, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மேரி மெற்றலின் யோகராணி (தவம்) கடந்த (02.07.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் ஐயாத்துரை மரியமலர் மாரிமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற வர்களான ஞானப்பிரகாசம்-சூசனம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருளானந்தம் (அதிபர்) அவர்களின் அன்பு மனை வியும் ஜெனற்மகிழினியின் (ஆசிரியை-லண்டன்) அன்புத் தாயாரும் அன்ரனி செல்வின்(லண்டன்) அவர்களின் அன்பு மாமியும் செரவின் (லண்டன்),ஸ்ரவின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ஐயா யோசப் மற்றும் யோகராசா (கனடா), தேவராசா (பிரான்ஸ்),ஞானரத்தினம் ராணி, தர்மசோதி தர்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்னரோசலின் (கனடா) சறோ யோகராசா (கனடா), சறோ தேவராஜா (பிரா ன்ஸ்) இராயப்பு யோசப் துரைரட்ணம், கிளமென்ட் யெசீலன் (ஜெயம்- அரச கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற அன்ரனி நவரட்ணம் மற்றும் அன்ரனி புஸ்பராணி (புஸ்பராணி) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**70/21, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.**


தகவல்: **குடும்பத்தினர்.**

**077 7806110, 077 6993840, 077 6327624**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை தியாகராசா



கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தியாகராசா கடந்த(06.07. 2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-பூமணி தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான நாகநாதர்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கிருஸ்ணமூர்த்தி, தவரத்தினம், சிவமணி, புலேந்திரராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், தர்மலிங்கம், மகேஸ்வரி, நாகேஸ்வரி மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சதீஸ்குமார்(சுவிஸ்), சத்தியசீலா (லண்டன்), காலஞ்சென்ற றபேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரமிளா(சுவிஸ்),லோகதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகா (சுவிஸ்), கோபிகா (சுவிஸ்), சாரங்கன் (லண்டன்), சாருகா (லண்டன்), சபர்ணா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.**

**தகவல்: மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
077 6636619**

### திருமதி லீலாவதி விஜயசிங்கம்

**பிறப்பு
15 . 08 . 1944**



**இறப்பு
05 . 07 . 2016**

யாழ்.மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட லீலாவதி விஜயசிங்கம் 05.07.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா (முன்னாள் உப அதிபர்- மல்லாகம் இந்துக் கல்லூரி, (மல்லாகம் மகாவித்தியாலயம்)) - செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், திருவருள் விஜயசிங்கம் (பன்னாலை) அவர்களின் அன்பு மனைவியும், லட்சுமி, சரஸ்வதி, சுபாங்கினி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி கமலாவதி ஸ்ரீராஜஸ்கந்தன், திருமதி நீலாவதி அருணகிரிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சஞ்ஜிவன், ரஞ்சித், ரஞ்சன், ரமணா ஆகியோரின் அன்பு மாமியாரும், மதுமிதா, மானசா, விக்ரம், ஹர்சிகா, ஹன்சிகா, லகாரிகா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**லண்டன்** (J/2763) (11,17,18)

**தகவல்:
கணவர், பிள்ளைகள்.**

**+44 2036 740 919/ +44 7960 143 846**

### இளையதம்பி மகேந்திரன் (சைவம்)



வரியப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், மின்சார நிலைய வீதி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி மகேந்திரன் (சைவம்) நேற்று (08.07.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பார்வதி தம்பதிகளின் பாசமிகு மகனும், வைரமுத்து காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருகனும், சிவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், கஜமுகியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, திலகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், சுப்பிரமணியம் மற்றும் துரைசிங்கம், சிவநாதன், தம்பிராசா, கமலராணி, விமலராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மின்சார நிலையவீதி,
சுன்னாகம்.** (J/2762) (11,17,18)

**தகவல்:
குடும்பத்தினர்.**

## விதானகேவுக்கு ஓராண்டு தடை இலங்கை கிரிக்கெட் விதித்தது

இலங்கை கிரிக்கெட் அணியின் இளம் வீரரான விதானகே, ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டு ஓராண்டுக்குத் தடை விதிக்கப்பட்டார். கடந்த மாதம் கொழும்பிலுள்ள இரவு விடுதியொன்றில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் விதானகே சம்பந்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனையடுத்து நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையிலேயே அவர் மீது ஓராண்டுத் தடை விதிக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்தது.
2014ஆம் ஆண்டு காலியில் இடம்பெற்ற டெஸ்ட் ஆட்டமொன்றில் விளையாடிக் கொண்டிருந்த விதானகே, ஆட்டம் முடிவடையாத நிலையில், வீரர்கள் தங்கியிருந்த விடுதியிலிருந்து இரவு வெளி யேறியிருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு குறித்த ஆட்டத்துக்கான ஊதியம் முழுவதும் அபராதமாக விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





## உலகச் சம்பியனை வீழ்த்தி பிரான்ஸ் இறுதிக்குத் தகுதி

யூரோக் கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதியில் உலகச் சம்பியனான ஜேர்மனை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது பிரான்ஸ்.
நடப்பு வருடத்துக்கான யூரோக் கிண்ணத் தொடர் பிரான்ஸின் பரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் பிரான்ஸ், ஜேர்மனி அணிகள் பலப்பரீட்சை நடத்தின. கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கட்டத்தை எட்டியது முதல் பாதி. 45 ஆவது நிமிடத்தில் கிரீஸ்மன் திரில் கோலொன்றை பதிவுசெய்ய 1:0 என்ற பிரான்ஸின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 72 ஆவது நிமிடத்தில் கிரீஸ்மன் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய 2:0 என்று முன்னிலை வகித்தது பிரான்ஸ். மீதமிருந்த குறுகிய கால அவகாசத்தில் ஜேர்மனி பதிலடி கொடுக்காத நிலையில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது பிரான்ஸ். போர்த்துக்கல் ஏற்கனவே இறுதிக்குத் தகுதி பெற்றுவிட்ட நிலையில் இறுதியாட்டம் நாளை நள்ளிரவு 12.30 மணிக்கு (இலங்கை நேரப்படி) நடைபெறும். (ம)

## வென்றார் பெடரர்

விம்பிள்டன் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்தின் றோயர் பெடரர்.
பெடரர், தனது காலிறுதி ஆட்டத்தில் குரோசியாவின் மரினை எதிர்த்து மோதினார். முதலிரு செற்களையும் முறையே 7:5, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் மரின். நேர் செற் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் மூன்றாவது செற்றில் வெற்றிபெறவேண்டும் என்ற கட்டாயம் பெடரருக்கு ஏற்பட்டது.
6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்தச் செற்றை கைப்பற்றிய பெடரர், அடுத்த இரு செற்களையும் முறையே 7:5, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)



## சாதனையை நோக்கி ரொனால்டோ

யூரோக் கிண்ணத் தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்தவர் என்ற சாதனையைப் படைக்க போர்த்துக்கல்லின் தலைவர் ரொனால்டோவுக்கு வாய்ப்புள்ளது.
யூரோக் கிண்ணத் தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்தவர்கள் வரிசையில் பிரான்ஸின் முன்னாள் வீரர் மிச்செல் பிளாட்டினி 9 கோல்களுடன் முதலிடத்தில் உள்ளார். இவரது சாதனையைத் தற்போது ரொனால்டோ சமன் செய்துள்ளார். நடப்பு வருட யூரோ கிண்ணத் தொடரின் முதலாவது அரையிறுதியில் வேல்ஸ், போர்த்துக்கல் அணிகள் மோதின.
இந்த ஆட்டத்தில் ஓர் கோலைப் பதிவு செய்ததன் மூலமே ரொனால்டோ இந்தச் சாதனையை சமன் செய்தார். இறுதியாட்டத்தில் அவர் மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்தால் யூரோக் கிண்ணத் தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்தவர்கள் வரிசையில் முதலிடம் பிடிக்க முடியும். (ம)



## அரையிறுதியில் அன்டிமுர்ரே

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் இங்கிலாந்தின் முர்ரே.
நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் முர்ரேயும் பிரான்ஸின் வில்பிறிட் சொங்காவும் மோதினர்.
முதலிரு செற்களையும் 7:6, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் முர்ரே. அடுத்த இரு செற்களையும் 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் சோங்கா. இறுதி செற்றில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட அந்த செற்றை 6:1என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவாகக் கைப்பற்றிய முர்ரே 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

## இரண்டு பிரிவாக டெஸ்ட் தொடர்கள்; இலங்கை கிரிக்கெட் சபை எதிர்ப்பு

டெஸ்ட் தொடர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து நடத்துவதற்கான முன்மொழிவை, இலங்கை கிரிக்கெட் சபை எதிர்த்துள்ளதாக அந்தச் சபையின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.
டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் ஏழு இடங்களிலுள்ள அணிகள் முதற்பிரிவிலும், அடுத்த ஐந்து இடங்களிலும் உள்ள அணிகள் இரண்டாவது பிரிவிலும் விளையாடுவதற்கான முன்மொழிவு குறித்து, சர்வதேச கிரிக்கெட் சபையின் அண்மைய கூட்டத் தொடரில் ஆராயப்பட்டது. அதிகளவான அணிகளுக்கு டெஸ்ட் அந்தஸ்து கொடுக்கும் விதத்திலும் டெஸ்ட் ஆட்டங்களில் விறுவிறுப்புத் தன்மையைக் கொண்டுவரும் நோக்கிலுமே இந்தத் திட்டமென ஐ.சி.சி. அறிவித்தது. இதனை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை எதிர்த்தது.
தற்போது இலங்கை கிரிக்கெட் சபையும் எதிர்த்துள்ளதாக திலங்க சுமதிபால தெரிவித்தார்.
முதல் வருடத்தில் 7 ஆவது இடத்தில் காணப்படும் அணி அடுத்த வருடத்தில் குழு இரண்டுக்கு தரமிறக்கப்படுவதுடன் குழு



இரண்டில் முதலிடத்தில் உள்ள அணி குழு ஒன்றின் ஏழாவது அணியாகத் தரமுயர்த்தப்படும் என ஐ.சி.சி. குறிப்பிட்டது. தற்போதுள்ள நிலவரத்தின்படி இலங்கை அணி 7 ஆவது இடத்தில் காணப்படுகிறது. இதன்படி, முதலாவது தடவையாக பிரிவு உருவாக்கப்படும்போது, இலங்கை அணி முதலாவது பிரிவில் காணப்படும். ஆனால், அடுத்த முறை பிரிவு உருவாக்கப்படும்போது 7ஆவது இடத்தில் நீடித்தால் இலங்கை தரமிறக்கப்படும். இதனாலேயே தாம் இந்த முறையை எதிர்த்ததாக சுமதிபால மேலும் குறிப்பிட்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 9

**கழுகுகளின் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும்



ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**புத்தூர் சரஸ்வதி வி.கழகத் தொடர்**

புத்தூர் சரஸ்வதி விளையாட்டு கழகம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இதன்படி இன்றைய ஆட்டங்களாக இரவு 7 மணிக்கு புத்தூர் தமிழ்மதி அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணியும், இரவு 8 மணிக்கு புத்தூர்நண்பர்கள்அணியை எதிர்த்து கச்சாய் வொலிகிங்ஸ் அணியும் மோதவுள்ளன. (ம-422-23)

# மாகாணமட்ட கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்டப் போட்டிகளின் ஓர் அங்கமான 15 வயது, 17 வயது, 19வயது பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர்கள் இன்று ஆரம்பமாகின்றன. இன்று, நாளை, நாளை மறுதினம் என மூன்று தினங்கள் நெல்லியடி மத்திய கல்லூரியின் மைதானத்தில் இந்தத் தொடர்கள் நடைபெறும். (ம-23)

# வென்றது சென். ஜோசெப்

யாழ்ப்பாணம், ஜூலை 9

நெற்கொழு கழுகுகளின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். ஜோசெப் அணி வென்றது.

கழுகுகளின் மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசெப் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதியது. இதில் பனங்கட்டுக்கொட்டுசென். ஜோசெப் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வென்றது. (ம-23)



# ஹென்றிஸை வீழ்த்தியது முழங்காவில் மகா வித்தி.

யாழ்ப்பாணம், ஜூலை 9

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கால்பந்தாட்டத்தில் 17 வயது ஆண்கள் பிரிவினருக்கான லீக் ஆட்டம் ஒன்றில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து சென். ஹென்றிஸை வீழ்த்தியது முழங்காவில் மகா வித்தியாலயம்.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணிகளுமே கோல் எதனையும் பதிவுசெய்யவில்லை.

இரண்டாம் பாதியின் 30 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவு செய்தது முழங்காவில் மகா வித்தியாலயம். ஆனால் ஆதிக்கத்தை நீடிக்க அனுமதிக்கவில்லை சென். ஹென்றிஸ். அடுத்த சில நிமிடங்களிலேயே பதிலடி கொடுத்தது.

வேறெந்த மாற்றமும் ஏற்படாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது முழங்காவில் மகா வித்தியாலயம். (ம-23)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டியில் கலந்து கொண்டு பதக்கம் வென்ற பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலய பளுதூக்கு வீராங்கனைகள் பாடசாலைச் சமூகத்தால் நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டனர். (ம-23)

# ஞானமுருகனுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 9

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்த காலிறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# அம்பாள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திவரும் தொடரில் அம்பாள் வி.கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதியது.

இதில் தாவடி காளியம்பாள் அணி 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

உடுவில் ஆலடி சிந்து அணி ஏற்கனவே இறுதிக்குத் தகுதி பெற்றுவிட்ட நிலையில் இந்தக் அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் நாளை ஞயிற் றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

நிகழ்வுக்கு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன் மற்றும் வடமாகாண கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகார அமைச்சர் குருகுலராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# ஏ.பி. பிரம்படி அணிகள் இறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

கரவெட்டி கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் ஏ.பி. அணியை எதிர்த்து கொக்குவில் பிரம்படி அணி இன்று மோதவுள்ளது.

கிருஸ்ரார் வி.கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தைத் தொடர்ந்து நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ரெலோ கொள்கை பரப்புச் செயலாளரும் சிவன் அறக்கட்டளை இயக்குநருமான கணேஸ்வரன் வேலாயுதம், சிறப்பு விருந்தினர்களாக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் ஏ.கிருபாகரன், சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் இ. உதயகுமார், நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பியந்த ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)

# விம்பிள்டன் இறுதியில் சேரீனா - கெர்பர் மோதல்



விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சேரீனா வில்லியம்ஸ், கெர்பர் இருவரும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். சேரீனா தனது அரையிறுதி ஆட்டத்தில் உக்ரைன் வீராங்கனையான எலேனா வெஸ்னினாவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:2, 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய சேரீனா 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார்.

கெர்பர் தனது அரையிறுதியில் சேரீனாவின் சகோதரி வீனஸ் வில்லியம்ஸை எதிர்கொண்டார். முதலிரு செற்களையும் 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கெர்பர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார்.

இந்த வருடத்தின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸ்திரேலிய தொடரில் சேரீனாவுக்கு அதிர்ச்சி கொடுத்து கெர்பர் சம்பியன் பட்டம் வென்றார். அதற்குப் பதிலடி [illegible] இந்தத் தொடரை பயன்படுத்த ஏரா[illegible]றன. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தற்போது அமோக விற்பனையில்
உங்கள் குடும்பச் சஞ்சிகை
ஜூலை மாத இதழ்!
1 + 1 = 3
பெண்களின் திரிசங்கு நிலை
திருத்தற் சேவையுடன் தரம்-5 பரீட்சை
வேலியே பயிரை மேயலாமா?
பூவிதழ் சமைக்கும் பனித்துளி




Free
சுயதொழில் கையேடு
போட்டிப்பரீட்சை கையேடு

- ஒரு இஞ்சி கூட குறையாம
- கேள்வி - பதில்
- பேராசையின் விளைவு
- உயிரிலும் மேலான உறவு
- ஆசானுக்கு,...
- உளவியல் ஆலோசனை
- தீயவர்களிடமிருந்து பெறும் யாவுமே தீயவற்றையே தரும்.
- நண்பனே எனது உயிர் நண்பனே!
- சிறார்களும் முகநூலும்
- தலைசாய தோளில்லை
- உறவுகளால் துரக்கத்தை தொலைக்கும் பெண்கள்

* பொது அறிவு
* A/L கலைப்பிரிவு எதிர்பார்க்கை
* வினாக்கள்
* போட்டிகள்

குடும்ப முன்னேற்றத்துக்கான அனைத்து ஆக்கங்களும் ஒரே சஞ்சிகையில்!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள:- கொழும்பு- 071- 8628372 வடக்கு: 077-6569617/071-8628369, கிழக்கு: 071-8724057, வவுனியா: 077-2772726, மலையகம்: 071 - 8724056, ஏனைய மாவட்டங்கள்: 071 - 4114990

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

45நாள் நிரம்பிய உயர்ரக கிரேடன் (Dane) நாய்க்குட்டிகள் விற்பனைக்குள்ளன.

077 622 2493

## சிறுநீரகம் தேவை

35 வயது மதிக்கத்தக்க சிறுநீரக நோயாளி ஒருவருக்கு (O+) இரத்த வகை உடைய சிறு நீரகம் தேவை. நல் உள்ளம் கொண்டோரிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
076 8871068 / 076 542 1781

## எக்ஸ்காவேட்டர் (பைக்கோ) ஒப்பிரேட்டர் தேவை

* சம்பளம் 80,000/= தொடக்கம் 100,000/= வரை வழங்கப்படும். அனுபவமுள்ளவர்கள் தேவை.
* கிறேசரில் கணக்குப் பதிவாளர் தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

துர்க்கா கிறேசர்
புத்தூர்.
077 2769715



## தேவரையாளி இந்துவை நொறுக்கியது பற்றிக்ஸ்

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு லீக் ஆட்டம் ஒன்றில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தியது சென். பற்றிக்ஸ்.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று இந்த ஆட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் டார்வின் பற்றிக்ஸின் முதல் கோலைப் பதிவு செய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 27ஆவது, 36 ஆவது நிமிடங்களில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் அபிசன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்தார். 48 ஆவது நிமிடத்தில் டார்வின் மற்றுமொரு கோலைப் பதிவு செய்ய முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் இலகு வெற்றிபெற்றது சென். பற்றிக்ஸ். (ம-23)

## வட இந்திய காசி யாத்திரை

**ஆரம்பம்: 06.08.2016 நாள்கள்: 19 யாத்திரீகர்: 15 பேர்**

செல்லுமிடங்கள் : டெல்லி, அட்ஷயதாம் நாராயணர் கோயில் உட்பட சுற்றிப்பார்த்தல். ஆக்ரா தாஜ்மகால் செங்கோட்டைபார்த்தல். அலகாபாத் திருவேணி சங்கமம், புனித நீராடல் ஹரித்துவார் சுற்றிப்பார்த்தல். கங்காபூசை தரிசனம். ரிஷிகேஸ் தொங்குபாலம் உட்பட சுற்றிப்பார்த்தல் சிவானந்த ஆச்சிரமம் உட்பட குருச்சேத்திரம் பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம். வேறு இடங்களும் பார்த்தல். சீத்தாமடி காசியில் 3 நாள்கள். 15 இடங்கள் பார்த்தல். கங்காபூசை, காசிவிஸ்வநாதர். அன்னபூரணி உட்பட மதுரா கிருஷ்ணஜென்ம பூமி இராமேஸ்வரம், மதுரை, திருப்புளானி, நவபாஷாணம், உத்திரகோசமங்கை, திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்காபுரம், காளகஸ்திரி உட்பட ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

**பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை:**
பயணம் 5 விமானம் வரும் மற்றய பயணம் A.C பஸ். உணவு மடப்பள்ளி சமையல் ஆள்கள் சமைத்த மூன்றுவேளை உணவு, ஒரு நாளைக்கு ஒரு லீற்றர் குடிநீர், சுகாதாரமான 2 பேருக்கு ஒரு குளியலறை இணைந்த அறைகள், காலை, மாலை, காப்பி, ரீ உட்பட விருப்பமுடையவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். மடப்பள்ளி சமையல் ஆள்கள் சமைப்பதால் கோயில்களில் பணிபுரிவோரும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளலாம். விவரம் கேட்டறிந்து பதிவுசெய்யவும் வயதானவர்கள் பாதுகாப்புடன் அழைத்துச்சென்று அழைத்துவரப்படுவார்கள்.

மேலதிக விவரங்களுக்கு
கலாநிதி ஸ்ரீரெங்கநாதன் (மகன் ராஜன்)
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு - 11
(சி.22155) தொ.பே. 077 768 0102, 077 736 2154
(13.18) Facebook: sridevisriranganathan.thuraiappa

# பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க தொடர்ந்து கடைசி இரு தினங்கள் மட்டும்.

# சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்

# (9ஆம் திகதி 10 ஆம் திகதி ஜூலை 2016)

# முற்பகல் 10.00 மணிமுதல் இரவு 8.00 வரை

யாழ்ப்பாணப் பெண்களுக்கு பொற்காலம் பிறந்திருக்க இரண்டு நாள்களில் தங்கமுலாம் பூசப்பட்ட ஜெய்புரி குந்தன், மும்பாய் கிறிஸ்டல் ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கன் டயமன்ட் ஜுவலரிகளை நம்பமுடியாத விலைகளில் கொள்வனவு செய்ய பொன்னான வாய்ப்பு

# 100/=, 200/=, 300/= வில்

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் உங்களுக்கு பிடித்த டிசைன்களை தெரிவு செய்து
100/=, 200/=, 300/= ஐ செலுத்துங்கள்

இந்த விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை
சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| • கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ் | ரூ.100/= Only | • கொரியன் ஸ்டோன் சாரி பின் | ரூ.300/= Only |
| • கோல்ட் கவரிங் செயின் பெண்டன்ட் | ரூ.100/= Only | • ஆஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட் | ரூ.300/= Only |
| • ஆஸ்திரேலிய டயமண்ட் மோதிரம் | ரூ.100/= Only | • கோல்ட் பிளேட் வளையல் செட் | ரூ.300/= Only |
| • வெஸ்டன் ஸ்டைல் இயரிங் | ரூ.100/= Only | • கோல்ட் பிளேட் செயின் | ரூ.300/= Only |
| • அமெரிக்கன் டயமண்ட் காதனி | ரூ.100/= Only | • ஆஸ்திரேலியன் டயமண்ட் ஆண்கள் மோதிரம் | ரூ.300/= Only |
| • கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம் | ரூ.200/= Only | • ஆஸ்திரேலியன் டயமண்ட் பிரேஸ்லட் | ரூ.300/= Only |
| • ஆண்கள் லொக்கட் செயின் | ரூ.200/= Only | • சில்வர் பிளேட் கால் கொலுசு | ரூ.300/= Only |

விசேட சலுகை: விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு
ரூ.500/=, - ரூ.5000/= வரை
விசேட ஆபரணங்கள்

## இடம்: மயிலூரான் திருமண மண்டபம்

(நல்லூர் முருகன் கோயில் அருகில்)
இலக்கம் 590/5, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

அனுமதி இலவசம் தொ. 077 604 7788
விற்பனை பெண் பிரதிநிதிகள் தேவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.